
கல்கி
KALKI
9.11.86
ரூ. 1.50


ஸர்ஃப் வாங்குவது மேலும் புத்திசாலித்தனம்
''தெரிஞ்சே சொல்றேன்: ஸர்ஃப் வாங்கறதைப் போல புத்தியுள்ள காரியம் எதுவுமே இல்லே. பவர் பேக்டு தயாரிப்பு ஆச்சே. அபார சக்தி— கொடுத்த பணத்துக்கு அமோகமாப் பலன்.''
அமோகமாப் பலனா? ஸர்ஃப் விலைதான் அதிகமாச்சே, லலிதாம்மா?
''அண்ணாச்சி, எத்தனே விதமா லாபம் தருது. உங்க கண்ணுல படலியா? ஸர்ஃப் ஒண்ணுதானே எதையும் வெள்ளைவெளேர்னு வெளுக்குது. அதனால, பார்வைக்கு எப்பவுமே புதுக்கருக்குதான். எந்த நாளுமே பண மிச்சம். கணக்குப் பாருங்க— அமோகமாப் பலன்னு இதானே?''
சரி, அப்படி என்னதான் இருக்கு ஸர்ஃப்லே?
''நிறையவே இருக்கு. அளவுக்கு அளவு 1 கிலோ சாதா பவுடருக்கு ஈடு ஒரு ½ கிலோ ஸர்ஃப். அதாவது 1 கிலோ சாதாப் பவுடர் எவ்வளவு துணிகளை வெளுக்குமோ, அதையே பாதி அளவு ஸர்ஃப் வெளுத்திடும். பார்த்துக்குங்களேன், ஸர்ஃப் நமக்கு அதிக லாபம்தானே?''
1 கிலோ சாதா பவுடர்
½ கிலோ ஸர்ஃப்
அப்ப ஸர்ஃப் ஒரு வகையில ஈடு செய்துடுது?
''ஏன், பல வகையில லாபம் நமக்கு. மலிவுச் சரக்கு வாங்கறதுக்கும் மதிப்புள்ள பண்டம் வாங்கறதுக்கும் வித்தியாசம் உண்டே. அதனாலதான் சொல்றேன் ஸர்ஃப் வாங்கறதுதான் மேலும் புத்திசாலித்தனம்.''
POWER PACKED
Surf
இந்துஸ்தான் லீ ின் தரமான தயாரிப்பு

தமிழக அரசுக்கு சுப்ரீம் கோர்ட் ஆணை!



* கல்கி 12.10.86 இதழில் ஆவுடையாபுரம் பற்றிய அட்டைப்படக் கட்டுரையால் ஊக்குவிக்கப்பட்ட நான் எனது சகா திரு சின்னசாமியுடன் சேர்ந்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசுக்கு எதிராக ஒரு ரிட் மனு தாக்கல் செய்தேன். திரு சின்னசாமி மனுதாரராகச் சம்மதித்தார். மனுவைப் பரிசீலித்த மாண்பமை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தார்கள். அதன்படி வழக்கு மூன்று வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இரு வாரங்களுக்குள் தமிழக அரசு எதிர்மனு தாக்கல் செய்யலாம். அதன்பிறகு ஒரு வாரத்துக்குள் நாங்கள் அதற்கு எதிர்வாதம் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கிடையில் தமிழக அரசு அந்தக் கிராமக் குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை அளிக்க வேண்டும் என்றும் அந்தக் கிராமத்துக்குக் குடிநீர் வழங்கும் கிணறுகளுக்கு மருந்திட்டு மக்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் ஆணை பிறப்பித்திருக்கிறது.

சுரேஷ், பாலா ஆகிய இருவரையும் மீண்டும் அந்தக் கிராமத்துக்கு அனுப்பி அவர்கள் கண்டறியும் தகவல்களை எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் தொடர்ந்து செயலாற்ற அது எங்களுக்கு உதவியாக இருக்கும்.

வி. சேகர்,
அட்வொகேட்,
உச்சநீதிமன்றம்.
புது தில்லி.

தார்மீகப் பெருமை கல்கிக்கே உரியது!

* ஆவுடையாபுரம் பற்றி மாவட்டக் கலெக்டர் திரு எல்.என். விஜயராகவன் நாளிதழ்களில் கூறியிருப்பதாவது: "பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி கிராம அதிகாரிகள் புகார் செய்ததின் பேரில், அவர்களுக்கு வேண்டிய சிகிச்சை அளிக்க அனைத்து நடவடிக்கைகள் எடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது; பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. ஆழ்குழாய் கிணறுகள் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் (கௌசிக) ஆற்று நீரில் கழிவு நீர் கலக்கக் கூடாதென்றும், தீப்பெட்டித் தொழிற்சாலையின் கழிவு நீரும் ஆற்றில் கலக்கக் கூடாதெனவும் விருதுநகர், நகராட்சிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது."

ஆட்சிமுறைப்படி, இதில் பெயர் பெறுபவர்கள் எவராக இருப்பினும் இம்மகத்தான பணிக்கு அடிகோலிய தார்மீகப் பெருமை எங்கள் "கல்கி"க்கே உண்டு!

எஸ். பரமசிவம், சீர்காழி.



● மூப்பனார்



● வாண்டையார்

மூப்பனருக்கு எதிரான சக்திகள்!

— தஞ்சை நிருபர் [illegible]

தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இன்றி தமிழகத்தில் உள்ள பல ஏழை மாணவர்கள் பணச் செலவு எதுவும் செய்யாமல் இலகுவாக கல்லூரியில் இடம் பிடிக்கும் ஒரே இடம் பூண்டி புஷ்பம் கல்லூரி. இதனுடைய நிர்வாகி பூண்டி கி. துளசி ஐயா வாண்டையார்.

இவர் தஞ்சை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர். மூப்பனார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்றவுடன், தாம் அதுவரை வகித்து வந்த தஞ்சை மாவட்ட காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் பூண்டி கி. துளசி ஐயா வாண்டையாரை நியமித்தார்.

தன்னுடைய இடத்தை நிரப்பக் கூடியவர் துளசி ஐயாதான் என்று அன்று மூப்பனார் போட்ட கணக்கை இன்று அவரும் அவருடைய ஆதரவாளர்களும் மாற்றிப் போட விரும்புவதால்தான் இன்று தஞ்சை மாவட்ட அளவில் மட்டும் இன்றி மாநில அளவிலும் இ. காங்கிரஸுக்குள் புகைச்சலும் குழப்பமும் உருவாகியிருக்கின்றன.

இளவலே தளபதி!

தஞ்சை மாவட்ட காங்கிரஸ் தலைவருக்கு எதிராக மூப்பனாரின் இளவல் ஜி. ரெங்கசாமி மூப்பனார் ஆங்காங்கு கோஷ்டிகளை உருவாக்கினார். காங்கிரஸ் தொண்டர்கள், ரெங்கசாமி மூப்பனாரை, 'மாவட்ட காங்கிரஸ் தளபதி' என்று பெரிய அளவில் போஸ்டர் போட்டு வரவேற்பு கொடுத்தார்கள். முடிந்தவரை மாவட்டத் தலைவரையும், மூத்த காங்கிரஸ் தலைவர்களையும் புறக்கணித்தார்கள்.

மாவட்டத் தலைவருக்குத் தெரியாமலேயே மாவட்டத்தில் சில இடங்களில் காங்கிரஸ் விழாக்கள், காமராஜர், நேரு, இந்திரா காந்தி சிலை திறப்பு விழாக்கள் நடத்தப்பட்டன. 'மாவட்ட காங்கிரஸ் தளபதி' என்ற அடைமொழியோடு ஜி. ரெங்கசாமி மூப்பனார் தனிச் சிறப்போடு இந்த விழாக்களுக்கு அழைக்கப்பட்டார்.

இப்படியெல்லாம் செய்தால் மாவட்டத் தலைவராக பதவி வகிக்கும் கி. துளசி ஐயா வாண்டையார், ஒதுங்கி விடுவார் என்று ரெங்கசாமி மூப்பனாரின் ஆதரவாளர்கள் கணக்குப் போட்டார்கள்.

அர்ஜுன்சிங் சந்திப்பு:

திடீரென ஆகஸ்டு மாத இறுதியில் பூண்டி கி. துளசி ஐயா வாண்டையார் தமிழ்

நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்படலாம் என்ற செய்தி வந்தது. அனைத்திந்திய காங்கிரஸ் துணை தலைவர் அர்ஜுன் சிங் வாண்டையாரைச் சந்தித்துப் பேசினார்.

உடனே தஞ்சை பாராளுமன்ற உறுப்பினர். எஸ். சிங்கார வடிவேலு, மாவட்டத் தலைவருக்கு எதிராக காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தை அறிவித்தார். சிவாஜி ரசிகர்களும் மூப்பனாருக்கு எதிராக ஒரு கூட்டத்தைக் கூட்ட முன்வந்தனர். ஆனால் இரு கூட்டங்களும் ரத்து செய்யப்பட்டன.

பின்னர் மூப்பனார் ஆதரவாளர்களுக்கும் வாண்டையார் ஆதரவாளர்களுக்கும் பத்திரிகைகள் மூலம் அறிக்கைப் போர் நடந்து வந்தது. கடந்த அக்டோபர் 2ந் தேதி காங்கிரஸ்காரர்கள் ஒருவரையொருவர் தாக்கி அறிக்கை விடுத்து காங்கிரசின் மதிப்பைக் குலைக்க வேண்டாம் என்று துளசி ஐயா வாண்டையார் வேண்டுகோள் விடுத்தார். வாண்டையார் ஆதரவாளர்கள் அறிக்கைப் போரை நிறுத்திவிட்டனர்.

இப்போதைய நிலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக யார் நியமிக்கப்படுவார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

கோட்டை சரிகிறதா?

மூப்பனாரின் சொந்த ஊரான சுந்தர பெருமாள் கோவிலில் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட காங்கிரஸ்காரர் தோற்கடிக்கப்பட்டார். அவரது பண்ணை கிராமமான மேல கபிஸ்தலம், கீழ கபிஸ்தலம் இரண்டிலும் காங்கிரஸ் வேட்பாளர்கள் தோற்று தி.மு.க.வினரே வென்றனர்!

கும்பகோணம் நகரமே மூப்பனாருக்கு கட்டுப்பட்டது என்று சொல்வார்கள். காங்கிரஸ் கோட்டை என்று கருதப்பட்ட கும்பகோணம் நகரில் மூப்பனாரின் எதிரணியைச் சேர்ந்த எஸ். குமாரசாமி (காங்கிரசில் இருந்து மூப்பனார் கோஷ்டியால் விலக்கப்பட்டு) சுயேச்சையாக நின்று வெற்றி பெற்று இருக்கிறார்.

சுந்தர பெருமாள் கோவிலில் ஜாதி, பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க மூப்பனார் திறந்து வைத்த அரிஜன் டீஸ்டால் திறந்த சில நாட்களில் மூடப்பட்டு சமுதாயத்தின் ஒருமைப்பாட்டைக் காட்டிவிட்டது!

ஆனால் மூப்பனாரால் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நால்வரும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் மூப்பனாரை ஆதரிக்கின்றனர்.

துளசி ஐயா வாண்டையார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்திவிட்டால் அது மூப்பனார் கோஷ்டிக்கு கிடைக்கும் வெற்றியாக மூப்பனார் ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

நிலப்பறி இயக்கம்

இதற்கிடையில் கம்யூனிஸ்ட்டுகளின் நிலப்பறி இயக்கம்வேறு மூப்பனாருக்கு எதிராக செயல்பட்டு வருகிறது. நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் எஞ்சிய நிலங்கள் குத்தகை சாகுபடிதாரருக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற விதியை மீறி ஜி.கே. மூப்பனார் நாலாயிரம் ஏக்கர் நஞ்சை நிலத்தை பினாமியாக பல பெயர்களில் எழுதி வைத்துவிட்டு நிலம் முழுவதையும் மூப்பனார் குடும்பத்தினரே அனுபவிக்கிறார்கள் என்பது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் குற்றச்சாட்டு. பினாமி நிலங்களை மீட்கவும் குத்தகைதாரரின் நலன் காக்கவும் நிலப்பறி இயக்கத்தைத் தொடங்கியுள்ளதாக இந்திய கம்யூனிஸ்டு கட்சி கூறுகிறது.

ஆகமொத்தம் காங்கிரஸின் லட்சியம், கொள்கை, திட்டம் என்பதெல்லாம் வெறும் பேச்சு என்பதை ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டனும் உணரக் கூடிய நிலைமையை மூப்பனார்—வாண்டையார் கோஷ்டி சண்டைகளும் கம்யூனிஸ்டுகளின் நிலப்பறி இயக்கமும் உணர்த்தி வருகின்றன.

— திக்விஜயன்

கருத்து: பி. எஸ். ஆர்.



மேஜர் பெருமாளை மறக்கலாமா?

* 'தாம்பத்யம்' என்ற பதத்திற்குப் புதிய அர்த்தத்தை அளித்துவிட்டார் அய்க்கண். இரண்டு விதமான குடும்பங்களை நம் கண் முன்னே காட்டி ஏங்க வைத்தும், வருந்த வைத்தும் வித்தை புரிந்த ஆசிரியர், கவிஞர் மெய்யப்பனின் வாதத்தை இறுதியாக அளித்துச் சிந்தையைக் கவர்ந்து விட்டார்.

சிங்காரப்பேட்டை, என். மோகன சங்கர்.

* 'பாடம்' சிறுகதையில் ஒரு கவளம் சோற்றுக்காக மனிதப் பிறவிகள் படும் அவலத்தைச் சந்திரபிரபா எடுத்துக் கூறிய விதம் உள்ளத்தை உலுக்கி விட்டது.

சென்னை – 28. எம். தியாகராஜன்.

* கல்கி 12.10.86 இதழ் படித்தேன். அதில் எங்கள் ஊரான பெருமாள்தேவன் பட்டியைப் பற்றிய கட்டுரையைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி. ஆனால் அந்த ஊருக்குப் 'பட்டி பஞ்சாப்' என்று பெயர் வரக் காரணமானவரைப் பற்றி ஒரு வார்த்தை கூட எழுதப்படவில்லை. அந்த ஊரில் மேஜர் பெருமாள் என்பவர் தமது பதினெட்டாவது வயதிலேயே ராணுவத்தில் சேர்ந்து மேஜர் வரை பதவி உயர்வு பெற்றுப் பல விருதுகளையும் அடைந்தார். அதோடு தம் கிராமத்தில் உள்ள ஜனத்தொகையில் பாதிக்கு மேல் ராணுவத்தில் சேர ஊக்கம் அளித்தார். அவரால் முன்னுக்கு வந்தவர்களில் நானும் ஒருவன்.

தென்காசி, கோவிந்தன்,
மாஜி ராணுவ வீரன்.

* 'கடவுளையே காப்பாற்றும் தமிழக அரசு' தலையங்கத்தில் கோயில்களில் நடைபெறும் ஊழல்களையும், மோசடிகளையும் எடுத்துச் சொல்லிப் புலம்பியது கடவுள் காதில் விழுந்து விட்டது!

திருச்சி – 16. எஸ். ராஜகோபால்.

* ஜே. ஆர். டி. டாடாவின் பேட்டியைப் படித்தேன். உழைப்புக்கு அஞ்சாத ஓர் உயர்ந்த மனிதரிடம், இந்தியன் என்று கூறிக் கொள்வதில் பெருமை கொள்ளும் தன்னம்பிக்கையின் மொத்த வடிவத்திடம், அறிவார்ந்த கேள்விகளைத் தொடுத்து அனுபவபூர்வமான பதில்களைப் பெற்றுப் பிரசுரித்திருக்கிறீர்கள். பாராட்டுக்கள்.

அரூர். மு. மதிவாணன்.

* பூவுக்குள் பூகம்பம் படத்தை எடுத்து வரும் தியாகராஜன், நமது தமிழ்த் திரையுலக நடிகர்களில் கொஞ்சம் வித்தியாசமானவர்தான்.

சேலம் – 2. அ. சுந்தரம்.

* மனிதனுக்கு இரண்டு இருதயம் இருந்திருந்தால் என்ற கேள்விக்குத் தராகவின் பதில் சூப்பர். நகைச்சுவையோடு அரிய தத்துவத்தை விளங்க வைத்து விட்டாரே!

விக்கிரபாண்டியம், ஆர். கே. அருள்செல்வன்.

* கட்டிப் பயல் மிதுன் பற்றிய உண்மைக் கதை பிரமாதம் போங்க! மிதுனிடமும் கல்கி இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கலாமே?

திருச்சி. பாலா. இரா. அசோக்.

* 'இளைய தலைமுறையின் அலங்காரம் எப்படி?' என்ற பட்டிமன்றத்தில் 'கல்கி'யின் மூன்று பக்கங்களை அழகாகவே அலங்கரித்து விட்டார்கள் வாசக, வாசகிகள்!

திருச்சி – 3. ராஜேந்தர்பிரியன்.

* 12.10.86 கல்கி இதழில் வணிக வரித்துறை பற்றித் தாங்கள் வெளியிட்டுள்ள கட்டுரை தொடர்பாக:

நடைமுறைகளை முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் எழுதப்பட்ட கட்டுரை அது. வணிகவரித்துறை பற்றிய குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை. விருது நகரில் வரி ஏய்ப்பு செய்யும் நோக்குடன் பல தணிக்கைச் சாவடிகளின் போலி முத்திரைகளைத் தயாரித்து, பல கடைகளின் பில்களைத் தயாரித்து ஏமாற்றிய போலி நபர்கள் கைது செய்யப்பட்ட நிகழ்ச்சி தங்களுக்குத் தெரியாது போலும். சரக்கு விற்காமல் பில்லை மட்டும் விற்கும் இனத்தைச் சேர்ந்த இது போன்ற நபர்தான் தங்களிடம் தகவல் கொடுத்திருக்கலாம். தரமான வியாபாரிகள் நிறைந்த விருதுநகரிலுள்ள வணிகர் சங்கத்தாரிடமோ, வணிக வரித்துறை அலுவலர்களைக் கேட்டோ நீங்கள் இதுபற்றி விசாரித்தறிந்து பின்னர் உங்கள் கட்டுரையை வெளியிட்டிருக்கலாம்.

வணிக வரித்துறையின் செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் 1983 – 84 ஆம் வருடத்தில் மட்டும் கடைத் தணிக்கை மூலம் ரூ. 180/– கோடி வரி ஏய்ப்பைக் கண்டுபிடித்து வரி மற்றும் பெனால்டி விதித்தது ரூ. 1671 லட்சம். லாரித் தணிக்கைகள் மூலம் 50,851 குற்றங்கள் கண்டுபிடித்து அபராதம் வசூலித்தது ரூ. 124.99 லட்சம். வரி ஏய்ப்புத் தடுப்புப் பணியில் அலுவலர்கள் தாக்கப்படுவது, ஏன், அண்மையில், சேலம் அருகே ஓர் அலுவலர் தணிக்கைச் சாவடி அருகே கொலை செய்யப்பட்டது. சென்னை அருகே அதிகாரிகள் இருவரை லாரியால் அடித்துக் கொல்ல முயற்சி நடந்து படுகாயத்துடன் அவர்கள் தப்பியது, வணிக வரித்துறையின் செயல் திறனை உணர்த்தும்.

தமிழக அரசு சிறுவியாபாரிகளுக்கு உதவும் பொருட்டும், மக்களின் நலன் கருதியும் வரிச் சலுகைகளும் பல பொருட்களுக்கு வரி விலக்கும் அளித்த போதிலும், வணிக வரி அலுவலர்களின் ஒருமித்த தீவிரப் பணியின் காரணமாக அரசுக்கு வருவாய் பெருகியே உள்ளது.

திண்டுக்கல், [illegible]. இராமன்,
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு துணை மற்றும் உதவி வணிக வரி அலுவலர்கள் சங்கம்.

அகதியின் வேதனைக் குரல்:

இலங்கை அடித்து விரட்டியது; இந்தியா அவமானப்படுத்துகிறது!



அகதிக் குடும்பம்



தாராபுரம் பயணியர் விடுதி காம்பவுண்டினுள் இலங்கை அகதிகள் மறுவாழ்வு இல்லம். டார்மெட்டரி பாணியில் நீண்ட கீற்றுக் கொட்டகை. அதைத் தென்னை மட்டைகளால் தடுத்துச் சிறு சிறு அறைகளாக்கி அதில் நாற்பத்தாறு குடும்பங்கள். நான்காவது 'அறையில்' ஒரு பெண் சமையல் செய்து கொண்டிருந்த புகை, கொட்டகை முழுவதும் சூழ்ந்து சுழன்றது.

அந்நிய தேசத்தில் துணையற்று, சுய பச்சாதாபத்துடன் வாழும் நிலை ஒவ்வொருவர் முகத்திலும் தெளிவாகத் தெரிந்தது. பேட்டி தரவோ விவரம் கூறவோ யாரும் முன்வரவில்லை. மன்னாரைச் சேர்ந்த லட்சுமணன் என்பவர் தயங்கிச் சில வார்த்தைகள் பேசினார். புகைப்படம் என்றதும் மிரட்சியுடன் அப்பால் போய்விட்டார். ஏன் இந்தப் பிடிவாதமான ஒதுங்கல், தயக்கம்?

சரியான நபர் ஒருவரைக் கடைசியாகத் தேடிப் பிடித்தோம். அவர் திரிகோணமலையைச் சேர்ந்த சந்திரகாந்தன். இலங்கையில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஸ்டூவர்டாகப் பணியாற்றியவர். பேச்சில் ஆங்கிலம் துள்ளி விளையாடுகிறது.

''உங்கள் குறைகளைப் பத்திரிகையில் போடுகிறோம் என்று சில டூப்ளிகேட் ஆசாமிகள் வருகிறார்கள். பேட்டி என்ற பெயரில் விஷயம் சேகரித்துக் கொண்டு போட்டோ பிடித்துக் கொண்டு போகிறார்கள். வெளியூர்களில் போய் எங்களிடம் கேட்ட கதைகளை அப்படியே ஒப்பித்து, புகைப்படத்தைச் சாட்சியம் காட்டி, பணவசூல் செய்து ஏப்பம் விட்டு விடுகிறார்கள். பிச்சையெடுக்கும் பெருமாளிடம் அதைப் பிடுங்கும் அனுமார்கள்! எனவே தான் காமிராவைப் பார்த்தாலே அகதிகள் ஒதுங்கி விடுகிறார்கள்'' என்ற சந்திரகாந்தன், தொடர்ந்து தமது மனக்குமுறல்களைக் கொட்டினார்:

''அகதிகள் என்றால் வாழ வழியற்று உடலை விற்கவும் தயாராகி விடுவார்கள் என்பது சிலரது கணிப்பு! இந்தப் பயணியர் விடுதி காம்பவுண்டினுள் எவ்விதப் பாதுகாப்பும் எங்களுக்கு இல்லை. கஞ்சா அடிப்பவர்கள், குடிகாரர்கள், ரௌடிகளெல்லாம் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டு பெண்

களைக் காமப்பார்வை பார்க்கிறார்கள். கீழ்த்தரமான முறையில் 'கமெண்ட்' அடிக்கிறார்கள். காரணம், இந்தப் பயணியர் விடுதியே சில சந்தர்ப்பங்களில் விபசார விடுதியாக மாறுவதுதான். எனவே இந்தக் காம்பவுண்டுக்குள் மறுவாழ்வு இல்லத்தில் வாழும் நாங்களும் அப்படிப்பட்டவர்கள் என நினைத்து விடுகிறார்கள் போலும்! தட்டிக் கேட்டால், 'ஓடி வந்த பிச்சைக்கார நாய்களுக்குத் திமிர் பாரு' என்று ஏளனம் செய்யப்படுகிறோம். ரொம்ப எதிர்த்தால் ஆள் வைத்து எங்களை அடிக்கவும் துணிவார்கள் போலிருக்கிறது.

"இதுதான் இப்படி என்றால் பொது ஜனங்களின் அலட்சியம் சகிக்க இயலாததாக இருக்கிறது. ஆற்றுக்குக் குளிக்க, துவைக்கப் போனால் உள்ளூர்வாசிகள் துவைக்கும் கல்லைப் பயன்படுத்தி ஓய்ந்த பிறகுதான் நாங்கள் அருகில் நெருங்க முடியும்! 'அரசாங்கம் உங்களுக்கு தர்ம சாப்பாடு போடுதே! அப்படியே துவைக்க ஒரு கல்லும் தரச் சொல்லு, போ' என்கிறார்கள்.

"எடின்பரோ கோமகன் வம்சம் போல நாங்கள் ராஜமான்யத்தில் கவலையின்றி உண்டுக் களிப்பதாக அவர்கள் நினைப்பு. ஆனால் உண்மை என்ன தெரியுமா? அரசாங்கம் தரும் நூறு ரூபாயில் கஞ்சி காய்ச்சிக் குடித்துக் கொண்டு உயிர் வாழும் இந்த அவமானம் போதும். கூடிய சீக்கிரம் இலங்கைக்கே சென்றுவிடக் கூடாதா? என்ற எண்ணம்தான் மேலோங்குகிறது."

"இலங்கையில் இன்னும் சகஜநிலை திரும்பவில்லையே?" என்று கேட்டதற்குச் சந்திரகாந்தன் உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னார்:

"சகஜ நிலை! அது இலங்கையில் இந்த யுகத்தில் திரும்பாது!"

"எதனால் இப்படிச் சொல்கிறீர்கள்?"

"ஜெயவர்த்தன தனியீழம் தரப் போவதில்லை. அப்படியே தந்தாலும் பதவி ஆசையில் காத்திருக்கும் திருமதி பண்டாரநாயகா பெரும்பான்மை இனமான சிங்களவர்களைத் தூண்டிவிட்டு அதற்கு முட்டுக்கட்டை போடுவார். 'பப்ளிசிடி'க்காக அவர் எதையும் செய்வார். அவர் குணம் அப்படி!

"இதையெல்லாம் மீறித் தமிழீழம் வந்துவிட்டாலும் கூட அதை யார் நிர்வகிப்பது? தேர்தல் வைத்தால் ஏதாவது ஒரு போராளிக் குழுதான் பதவிக்கு வரும். அந்த அளவு போராளிகளை மக்கள் ஹீரோ ஒர்ஷிப் செய்கிறார்கள். பதவி ஏற்ற குழுவை மற்ற குழுக்கள் நிம்மதியாக இருக்கவிடுமா? மீண்டும் துப்பாக்கிகளும் கிரினேட்களும் வெடிக்கும். பிறகு பழைய கதைதான்" என்று பொரிந்து தள்ளினார் சந்திரகாந்தன்.

"போராளி குழுக்களை ஒன்றுபடுத்த இந்திய அரசு முயன்று வருகிறதே?" என்று நினைவுபடுத்தினோம்.


"நல்ல பகல் கனவு" என்று வாய்விட்டுச் சிரித்தார். "சபாரத்தினம் நடுவீதியில் சுட்டுக் கொல்லப்பட்டது. போராளி கோஷ்டியினர் சென்னை நகரிலேயே துப்பாக்கியும் கையுமாக நேருக்கு நேர் மோதித் தோட்டாக்களைப் பரிமாறிக் கொண்டது, பாலசிங்கம் வீட்டில் வெடிகுண்டு வெடித்தது, இதெல்லாம் சமாதானத்தின் முன்னறிவிப்பு என்பது உங்கள் எண்ணமா?" என்று கேட்டுவிட்டு மேலும் தொடர்ந்தார்:

"அப்படியே போராளிகள் மனம் மாறி ஒன்றுபட நினைத்தாலும் தமிழக அரசியல்வாதிகள் விட மாட்டார்கள். கருணாநிதி ஒரு போராளிக் குழுவைச் சேர்த்து, 'நானும் சளைத்தவனில்லை' என்று எம்.ஜி.ஆர். இன்னொரு பிரிவைத் தன் வசமாக்க, நெடுமாறன் பக்கம் ஒரு போராளிக் குழு சரிய... இந்த நிலையில் அவர்கள் இணைவது எப்படி சாத்தியம்?"

பேட்டி: **சின்ன ஷெர்லக்**

படங்கள்: **பேபி வாட்ஸன்**


வளரும் வயதில்
குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்
காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.
சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.
அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.
காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.
23
மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்த்திடத் தேவையில்லை.
Glaxo
Complan
COMPLETE PLANNED FOOD
காம்ப்ளான் — திட்டமிட்ட பரிபூர்ண உணவு
884. GLC. 120 Tm



விடுதலைப் புலிகள்
விடாதீங்க! எப்படியாவது அடக்கி, மடக்கி, கொண்டு வாங்க!..
மத்திய அரசு
கங்கை சுத்திகரிப்பு கமிஷன் தலைவர்
பதவி
திரிபாதி
என்னோட வாழ்ந்தது போதும்! கங்கா-ஸ்நானம் பண்ணி புண்ணியத்தைத் தேடிக்குங்க!
அரசியல்
வீரப்பன்
பதவி போனதால் கவலை இல்லை! சந்திரனை மறைக்கும் மேகத்தை ஒழிப்போம்! புரட்சித் தலைவர் வாழ்க!
எங்கள் பதவி போனது ஜெயலலிதா சூழ்ச்சி! கட்சியிலிருந்து அவரை நீக்கும் வரை ஓய மாட்டோம்! எங்கள் இதய தெய்வம் எம்.ஜி.ஆர் வாழ்க!

கல்கி

1980 நவம்பர் 9
மலர் 45 இதழ் 15
அக்ஷய ஐப்பசி 23



அவமதிக்கப்பட்ட நெல்லை வாக்காளர்கள்!

மத்திய அமைச்சரவையில் ஏற்பட்ட மாறுதல்களைப் பலவிதங்களில் நியாயப்படுத்த முடியும். அருண் நேரு சமீபத்தில் மாரடைப்பால் பாதிக்கப்பட்டிருப்பவர். அவருக்கு உள்நாட்டுப் பாதுகாப்பு போன்ற பெரும் பொறுப்பைக் கொடுத்துச் சோதிப்பது தவறு என்று ராஜீவ் கருதினார். வேறு அமைச்சரவைப் பொறுப்பை வழங்கத் தயாராக இருந்தார். ஆனால் அருண் நேரு அது தமக்குப் பதவி இறக்கம் என்று கருதியிருக்க வேண்டும். அதனால் அருமை நண்பரை, வலக்கரம் போல் விளங்கியவரைத் தியாகம் செய்யவும் பிரதமர் தயங்கவில்லை. அதன் மூலம் குறிப்பிட்ட சிலரின் ஆளுமைக்குத் தாம் ஆளாகி விருப்பதாகக் கூறப்பட்டு வந்த குற்றச்சாட்டையும் தவிடு பொடியாக்கியிருக்கிறார். பஞ்சாப் உடன்படிக்கை செயல்பட வசதியாக பன்ஸிலாலிடம் முதல்வர் பதவியை ஒப்படைத்த பஜன்லாலுக்குப் பிரதமர், அமைச்சரவையில் ஓர் இடம் தரவேண்டிய அவசியம் இருந்தது. மேலும் அனுபவஸ்தர்கள் அமைச்சரவையில் இல்லை என்ற குறையையும் வெங்கல்ராவ் போன்றவர்களைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் நீக்கியிருக்கிறார். முதிர்ந்த அனுபவ அறிவும், இளமைத் துடிப்பும் தலைமையின் சுறுசுறுப்பும் இணைந்து நாட்டுக்கு நலனை விளையும் என்று எதிர்பார்க்கலாம். அதேசமயம், இப்போது உள்ளவர்களுக்கு நீண்ட கால அவகாசம் அளித்து அவர்கள் செயல்திறனைக் கணிப்பதே நல்லது என்பதையும் கூற வேண்டியிருக்கிறது. அடிக்கடி அமைச்சரவையில் மாற்றங்கள் செய்வது எதிர்பார்த்ததற்கு நேர்மாறான பலனையே அளிக்கும் என்பதைப் பிரதமருக்கு வலியுறுத்திக் கூறவும் விரும்புகிறோம்.

தமிழக அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் விசித்திரமானவை. கட்சிப் பணி என்று கூறி வேண்டாதவர்களைக் கழித்துக் கட்டப் பல்வேறு முதல்வர்களுக்கும் பிரதமர்களுக்கும் அவ்வப்போது கைகொடுத்து வந்த காமராஜ் திட்டம், பழி வாங்கவும் பாடம் புகட்டவும் மட்டம் தட்டவும் எம்.ஜி. ஆருக்கு உதவி இருக்கிறது. அ.தி.மு.க.வுக்குள்ளே நிலவும் கோஷ்டிப் பூசலில் தமது உண்மையான ஆதரவு எந்தப் பக்கத்துக்கு என்பதையும் தெளிவாக்கியுள்ளார். பதினொரு பேரை அனுப்பிவிடப் போகிறேன் என்று சொன்னதைக் காலதாமதமாகவேனும் நிறைவேற்றி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இருந்திருக்கிறது.

ஆனால் இவையெல்லாம் கட்சி விவகாரங்கள். மக்களைப் பாதிக்கிற கேள்விகள் வேறு. அ.தி.மு.க. ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டது என்பது நிதர்சனம். இல்லாமலா லஞ்ச ஊழல் ஒழிப்புக்கு என்று ஓர் அமைச்சகமே உருவாகியிருக்கிறது? இந்த மந்திரி சபை மாற்றத்தால் லஞ்ச ஊழல் குறையப் போகிறதா? ஓர் அமைச்சரவையின் செயலாற்றல் முதல்வரின் சுறுசுறுப்பையே பொறுத்திருக்கிறது. எம்.ஜி. ஆரோ உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதோடு தமது பொறுப்புக்களைக் குறைத்துக் கொள்ளவும் இல்லை, மற்றவர்களைச் சுதந்திரமாக முடிவெடுத்து இயங்க அனுமதிப்பதும் இல்லை. அவ்வாறிருக்க இந்த மந்திரி சபை மாற்றத்தால் அமைச்சரவையின் செயல்திறன் அதிகரித்து விடப் போகிறதா? இரண்டு கேள்விகளுக்கும் 'இல்லை' என்ற பதிலே கிடைக்கிறது.

நேற்று கே.ஏ.கே.யிடமிருந்து எந்த இலாகாவைப் பறித்தாரோ அதே இலாகாவை இன்று திருப்பித் தந்திருக்கிறார் முதல்வர். இது முதல்வரின் திட சித்தத்தையே சந்தேகிக்க வைக்கிறது. நேற்று முதல்வர் செய்த காரியம் தவறு, அதற்குப் பிராயச்சித்தமே இது என்றால், தீர ஆராயாமல் அவசரப்பட்டு உணர்ச்சி வேகத்தில் முடிவெடுக்கிற முதல்வர் நமக்கு வாய்த்ததற்காக நாம் வருந்தவே வேண்டியிருக்கிறது.

நெல்லையில் வீரப்பனுக்கு வோட்டளித்த மக்கள், பொதுத் தேர்தலில் ஒரு எம்.எல்.ஏ. யைத் தேர்ந்தெடுப்பதுபோல் செயல்படவில்லை. ஓர் அமைச்சரைப் பதவியில் நீடிக்கச் செய்கிறோம் என்ற எண்ணத்தில்தான் வாக்களித்தார்கள். தேர்தல் பிரசாரங்களெல்லாம் அந்தவிதமாகத்தான் செய்யப்பட்டன. நேற்று அமைச்சர் வீரப்பனுக்கு வோட்டுப் போடுமாறு நெல்லை மக்களைக் கேட்டுக் கொண்ட எம். ஜி. ஆர்., இன்று அவரைப் பதவி நீக்கம் செய்ததன் மூலம் ஒரு குரூரமான விதத்தில் வீரப்பனைப் பழி வாங்கியது மட்டுமல்ல; நெல்லை வாக்காளர்களுக்குப் பச்சைத் துரோகம் இழைத்து அவர்களை அவமதித்தும் விட்டார். என்ன செய்ய, அவருடைய ஜனநாயகப் பண்பும், உணர்வும் அப்படி இருக்கின்றன!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

துபாய்க்குப் போனால் வேலை கிடைத்து விடும் என்று நம்பி ஏமாந்தோ ஏமாற்றப் பட்டோ திண்டாடியவர்கள் ஏராளம். ஆனால் இப்படி அவதிப்பட அயல் நாட்டுக்குத் தான் போக வேண்டுமா என்ன...?...



● முத்து

● தேவராஜன்

வேலைக்குப் போனோம்...

'எத்தனை நாள்தான் இப்படி வேலையில்லாமல் வெட்டியாகச் சுற்றி அலைவது.....? நம்மால் ஒருத்தருக்கும் ஓர் உபயோகமும் இல்லையே.....!' என்ற வழக்கமான பல்லவியை பாஸ்கரனின் மனம் பாடிக் கொண்டிருந்தது.

"இந்தாடா டீ!" — அம்மா சோகையாய்ச் சிரித்தபடி டம்ளரை நீட்டினாள். உழைத்து ஓடாய்ப் போன அவளைப் பார்க்க பாஸ்கரனுக்குச் சகிக்கவில்லை.

"அம்மா! ஒரு வேலை தேடிக்காம நான் இந்த வீட்டிலே பச்சைத் தண்ணி கூடக் குடிக்க மாட்டேன்" சொல்லும்போதே அவன் குரல் உணர்ச்சி மேலோங்கி நடுங்கியது.

கயிற்றுக் கொடியில் கிடந்த சட்டையை உதறி மாட்டிக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் வெளியே போய்விட்டான்.

"பாஸ்கரன்!"

டீக்கடையிலிருந்து கூப்பிட்டார் பல்தேவ். "வாங்க தம்பி! டீ சாப்பிட்டுட்டுப் போகலாம்!"

பல்தேவின் உபசரிப்பு பாஸ்கரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"வேண்டாங்க...." என்றபடி சங்கோஜத்துடன் நழுவ முயன்றவனை இழுத்து வந்து கையில் கிளாஸைத் திணித்தார் பல்தேவ். கூடவே ஒரு நற்செய்தியையும் சொன்னார்:

"நீ வேலையில்லேன்னுதானே இவ்வளவு டல்லா இருக்கே? கவலையை விடு! கோழிக்கோடுலே நம்ப தோஸ்து பீங்கான் வியாபாரம் செய்யறான். அவனுக்கு வேலைக்கு ஆள் வேணுமாம். உன் ஃப்ரெண்ட்ஸ் யாரேனும் வேலை தேடிக்கிட்டிருந்தா அவங்களையும் கூட்டிகிட்டுப் போ."

என்ன சம்பளம், என்ன வேலை, யார் முதலாளி என்றெல்லாம் பாஸ்கரனுக்குக் கேட்கவே தோன்றவில்லை. தனக்கென்று ஒரு வேலை கிடைக்கப் போகிறது. இனி வீட்டில் டீ குடிக்கும்போதுகூட குற்ற உணர்வால் குறுகிப் போக வேண்டாம். தெருவில் தலை நிமிர்ந்து நடக்கலாம்.....

முத்துவும் பாஸ்கரனுடன் கேரளா போகச் சம்மதித்தான். கோழிக்கோடு போய்ச் சேர்ந்ததும், 'தனியாய் இடம் பார்த்துத் தருவதில் கொஞ்சம் சங்கடம்; அது வரை ஆபீஸிலேயே மாடியில் ஒரு ரூமில் தங்கிக்கொள்ளுங்கள்' என்றார் முதலாளி. சம்பளம் பற்றி ஒன்றுமே பேசவில்லை. பீங்கான் பாத்திரங்கள், தட்டுகள் வடக்கே இருந்து லாரிகளில் வரும். அந்தப் பெரிய, பெரிய கேஸ்களைப் பிரித்து எண்ணிப் பார்த்து வைக்க வேண்டும். அதன்பின் கடைக்கு வரும் ஆர்டர்கள்படி எண்ணி வைத்து, பார்சல் செய்ய வேண்டும். அதுதான் இவர்கள் வேலை.

பிறகு என்ன நடந்தது? பாஸ்கரனே கூறுகிறார்:

"நாங்கள் சேர்ந்த சில நாட்களிலேயே ஏற்கெனவே வேலைக்கு இருந்த இரண்டு மலையாளப் பையன்களை, வேலையை விட்டு அனுப்பிவிட்டார் முதலாளி. சில நாட்கள் கழித்து, 'இன்னும் இரண்டு பையன்கள் வேணும். ஊரிலிருந்து வரவழைக்க முடியுமா?'' என்றார். ஊரிலே சும்மா இருக்கிற

..அடிமைப்பட்டோம்!



மனோகரன்

பாஸ்கரன்


மனோகரனும், தேவராஜனும் ஞாபகத்துக்கு வந்தார்கள். நாங்கள் நாலு பேரானோம். இதன்பிறகுதான் முதலாளியின் உண்மை சொரூபம் தெரிய ஆரம்பித்தது. நாலு பேரையும் போட்டோ எடுத்து டைப் அடித்த பேப்பரில் கையெழுத்து வாங்கிக் கொண்டார். 'என்ன?' என்று கேட்டதற்கு, 'வேலைக்கு காண்ட்ராக்ட்' என்றார். சம்பளம், பேட்டா, மற்றும் தங்க இடம் பற்றிக் கேட்டபோது, 'சம்பளம் இருநூறு ரூபாய்; பேட்டாவெல்லாம் கிடையாது. இப்போது உங்களுக்குத் தனியறை கொடுக்க வசதிப்படாது. இப்போதுள்ள ரூமிலேயே நாலு பேரும் தங்கிக் கொள்ளுங்கள்' என்று கடுமையான குரலில் சொல்லிவிட்டார். அந்த அறை ரொம்பச் சிறியது. அதிலே நாலு பேரும் பெட்டி, படுக்கை வைத்துக் கொள்ள வேண்டும். ராத்திரி தூங்க வேண்டும். போதாக் குறைக்கு, அறையின் நடுவே ஒரு டேபிள். அதிலே ஒரு ஸ்டவ், சில பாத்திரங்கள். ஆபீஸுக்கு வருகிற விஸிட்டர்களுக்கு டீ, காப்பி போட்டுத் தர வேண்டிய வேலையும் எங்களுடையது! அதுவும் எங்கள் செலவில்! முதலாளியின் மனைவி, வீட்டு வேலைகளைக் கூட செய்யச் சொல்லுவாள். மாட்டேன் என்றால் முதலாளியிடம் திட்டு, உதை. அந்தச் சூழ்நிலையே எங்களுக்குப் பிடிக்கவில்லை.

"அந்தப் பகுதியிலே கூலிக்காரர்களுக்கு யூனியன் உண்டு. யூனியனைச் சேர்ந்தவர்களுக்கு அதிகச் சம்பளம், ஓவர் டைம், பேட்டா எல்லாம் தர வேண்டும். அதனால்தான் முதலாளி மொழி தெரியாத அயலூர்க்காரர்களான எங்களை வேலைக்கு வைத்துக் கொண்டிருந்தார். நாங்கள் மற்ற கூலிக்காரர்களுடன் ஏதாவது பேச முயன்றால் முதலாளிக்குத் துளியும் பிடிக்காது.

"ஒருநாள் செகண்ட் ஷோ பார்த்துவிட்டுத் திரும்பியபோது, ரூமுக்கு இரண்டாவது பூட்டு பூட்டப்பட்டிருந்தது. யார் பூட்டியது என்று தெரியவில்லை. இரவு முழுக்க ரூமுக்கு வெளியிலேயே குளிரில் நடுங்கினபடி தூங்கினோம். மறுநாள் காலை, முதலாளி, 'நேற்று இரவு எங்கே போயிருந்தீர்கள்?' என்று கேட்க, 'சினிமாவுக்கு' என்றோம். 'நேற்று ராத்திரி பத்தரை மணிக்கு நான் வந்து பார்த்த போது நீங்கள் இல்லை. அதற்குத்தான் இந்தத் தண்டனை' என்றார். அதிலிருந்து சினிமாவும் கட்.

"ஒரு மாசம்கூட முழுசாய்ச் சம்பளம் தந்ததில்லை. உடைத்த பீங்கான் கப்புக்கு அதற்கு இதற்கு என்று ஏதாவது காரணம் சொல்லி, கொஞ்சமாவது பிடித்துக் கொண்டு விடுவார். ஒருசமயம் ஏதோ ஒரு ரசீது புத்தகத்தைக் காணோம் என்று சொல்லி எங்கள் நாலு பேரையும் பிரம்பால் விளாசித் தீர்த்துவிட்டார். கடைசியில் நாலு நாள் கழித்து அவர் மேஜையிலேயே உள்ளே கிடந்தது அந்தப் புத்தகம்!

"நாங்கள் ஊருக்குத் திரும்பிப் போகிறோம். சம்பளத்தைசெட்டில்பண்ணுங்கள் என்றபோது, 'உங்களை ஊருக்கு அனுப்ப முடியாது. நீங்களாக ஓடிப் போனால், என்னிடம் இருக்கிற உங்கள் போட்டோவை போலீஸில் காட்டி, நீங்கள் கடையிலிருந்து பணம் திருடிக் கொண்டு ஓடிவிட்டதாகப் புகார் கொடுத்துவிடுவேன். ரயிலேறுவதற்குள் நீங்கள் போலீஸில் மாட்டிக் கொண்டு விடுவீர்கள்' என்று மிரட்டினார். நாங்கள் ரொம்பப் பயந்து விட்டோம். அன்றுமுதல் எங்களில் ஒருவர் ஏதாவது சின்னத் தப்பு செய்துவிட்டா



"அப்பா, ஒவ்வொரு மனிதனுக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறான்னு சொல்றீங்களே, அர்த்தம் என்ன?"

"அவளையும் மீறி அவன் வாழ்க்கையிலே முன்னேறியிருக்கிறான்னு அர்த்தம்!"

— என். வி. ரமணி

னும். 'ஊருக்காடா போகணும்?' என்று நாலு பேரையும் அடிக்க ஆரம்பித்தார்.

இனி பொறுக்க முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டோம். 'சம்பளம்கூட வேண்டாம். ரயில் சார்ஜ் மட்டும் கொடுத்தால் போதும்' என்று சொல்லிப் பார்த்தோம். 'கம்பி எண்ண இஷ்டமா?' என்று போட்டோக்களைக் காட்டிக் கேட்டார்.

"என்ன செய்வது என்று யோசித்துக் கடைசியில் கூலிக்காரர்கள் யூனியனின் தலைவரிடம் போய் முறையிட்டோம். பதினைந்தே நிமிஷங்களில் யூனியன் தலைவரும், ஐம்பது அறுபது கூலிக்காரர்களும் கடைக்கு வந்து கூடிவிட்டனர். 'சம்பளத்தை 'செட்டில்' செய்து, அவர்களை ஊருக்கு அனுப்புகிறீயா? இல்லை நாங்கள் எங்களாலானதைப் பார்த்துக் கொள்ளவா?' என்று கேட்டதும், 'உங்களுக்கும் அந்தப் பையன்களுக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் எதற்கு வீணாய் இதிலே தலையிடுகிறீர்கள்?' என்று முதலாளி கத்தினார். அதற்கு யூனியன் தலைவர், 'நாங்கள் எல்லாருமே தொழிலாளர்கள். ஒரு தொழிலாளிக்கு அநீதி இழைக்கப்பட்டால், அதைத் தட்டிக் கேட்க எல்லாத் தொழிலாளிகளும் வரத்தான் செய்வார்கள்' என்று பதில் சொன்னதும் திணறிவிட்டார் முதலாளி.


"வேறு வழியில்லாமல், சம்பளமும் ரயில் சார்ஜும் தந்துவிட்டார். 'எங்கள் போட்டோவும், கையெழுத்துப் போட்ட பேப்பர்களும் முதலாளியிடம் இருக்கின்றன' என்று நான் நினைவூட்ட அவற்றையும் வாங்கிச் சுக்கு நூறாய்க் கிழித்து எறிந்துவிட்டு, எங்களையும் அழைத்துக் கொண்டு வெளியேறினார் தலைவர்.

"அங்கே வேலை செய்த நாட்களை, கெட்ட கனவாய் நினைத்து மறந்துவிட்டு, ஊருக்கு வந்து சேர்ந்தோம். இங்கே வேறு வேலை ஏதாவது கிடைக்குமா? என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று முடித்தார் பாஸ்கரன்.

பேட்டி: எஸ். சந்திரமௌலி

படங்கள்: தாமு

அடுத்த இதழில்...



கோவை மாவட்டத்தில் கல்கி — 1

புகை அரக்கனிடம் சிக்கிய கிராமங்கள்
— சிறப்புக் கட்டுரை

எல்லைப் பிரச்னையால் தவிக்கும் கிராமம்!
— ஒரு விசிட்



"சர்வாதிகாரியா? நானா?"
— தெகமம் கந்தசாமியுடன் ஒரு சந்திப்பு!



இரயில் சிநேகம்

அரசு அலுவலகக் கோப்புகள் போல, அவ்வளவு மெத்தனமாக ஊர்ந்தது அந்த பாசஞ்சர் வண்டி!

''ஏன் சாமி... இப்ப என்ன நேரமாவுது...?''

எதிர் சீட்டில் அமர்ந்து கொண்டிருந்த கிழவன், என்னைப் பார்த்துக் கேட்டான்.

''ஏழரை,'' என்றேன் நான்.

''அப்ப இது எழும்பூர் போவ எம்மா நேரமாகும் சாமி?''

''ஒன்பதரை ஆகலாம்...''

''அடக் கடவுளே! அம்மா நேரமாவுங்களா...?''

வலது கையில் போடப்பட்டிருந்த கட்டை மெல்லத் தடவியவாறு முனகினான் கிழவன்.

''ஏன் அவசரமாகப் போக வேணுமா...?''

''ஆமாம் சாமி... பெரிய ஆஸ்பத்திரிக்குப் போகணும். எட்டரைக்குள்ளாற போனாத்தான், சீட்டு வாங்கி, டாக்டர் ஐயாவைப் பார்க்க முடியும். இல்லாட்டி மறுநாள் காலம்பர வரைக்கும், அந்த ஆஸ்பத்திரி வராந்தாவுல பழியாக் கிடக்கணும்...''

''அது யாரு உன் பேத்தியா...?'' கிழவனின் மடிமேல் சாய்ந்தவாறு உறங்கிக் கொண்டிருந்த சிறுமியைப் பற்றிக் கேட்டேன்.

''ஆமாம் சாமி... போற இடத்துல எப்படியிருக்குமோ, கட்டுகிட்டு போட்டு உட்கார வைச்சுட்டாங்கன்னா ஏதாச்சும் மூத் தண்ணி வாங்கியார இருக்கட்டுமேன்னுதான் கூட்டியாந்தேன்.''

தாத்தாவின் மடியில் உறங்கும் அந்தச் சிறுமியைப் பார்த்தேன். என் மகன் வயதுதான் அவளுக்கும் இருக்கும்.

பொம்மை காருக்கு கீ கொடுத்து நிர்விசிந்தையாகபக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தான் என் மகன். ஆனால் அவள்...? தாத்தாவுக்கு ஆஸ்பத்திரியில் மூத் தண்ணி வாங்கித்தர, பெரிய மனுஷியாகக் கிளம்பி விட்டாள்!

ஏழ்மை அந்தச் சின்னஞ்சிறு தளிர் மீதுதான் எத்தனைப் பாரத்தைச் சுமத்தியுள்ளது!

கிழவன் தன் பூர்வோத்திரங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

''கை நல்லாயிட்டா வர தைக்குள்ளாற, என் கடைசி மவளையும் கட்டிக் கொடுத்துடுவேன். எல்லாத்துக்கும் அந்த மகமாயிதான் மனசு வைக்கணும் சாமீ!'' என்று முடித்தான்.

இதற்குள் கிழவனின் பேத்தி, மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். என் மகன் விடும் காரைச் சற்றுநேரம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்!

விர்ரென்று சிறிது தூரம் சென்று தானாகத் திரும்பும் அந்தக் கார் அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. கிழவனின் வசதிக்கு அவள் சாதாரண பிளாஸ்டிக் கிலுகிலுப்பையைக் கூடப் பார்த்திருப்பாளா என்பது சந்தேகம்.

காரை அவள் அதிசயமாகப் பார்ப்பதைக் கண்ட என் மகன், அதை அவள் பக்கமாக விட்டான். பிறகு அதை அவளிடம் கொடுத்து ஓட்டச் சொன்னான். பயம் கலந்த கூச்சத்துடன் அவள் கையை இழுத்துக் கொண்டாள்.

ஒருவழியாக வண்டி மாம்பலம் ஸ்டேஷனை நெருங்க, நான் என் சூட்கேஸுடன், இறங்கத் தயாரானேன். உடம்பை நல்லபடியாகப் பார்த்துக்கொள்ளுமாறு கிழவனிடம் கூறினேன். எனக்கு இதற்குமேல் ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. இரயில் சிநேகம் என்பார்களே, அதற்கு நானே உதாரணமாக இருப்பதை நினைத்து மிகவும் வேதனையாக இருந்தது.

காரை எடுத்துக் கொண்டு என்னுடன் கிளம்பும் என் மகனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் கிழவனின் பேத்தி. என் பின்னால் வந்து கொண்டிருந்த என் மகன், எதற்காகவோ திரும்பி அவளைப் பார்த்தான்.

''உனக்கு வேணுமா...?''

''......''

உடனே என்னிடம், ''அப்பா, பாவம்பா அவ... இத அவகிட்டே கொடுத்துடட்டுமா...?''

''உன்னிஷ்டம், கொடேன்...''

ஓட்டமாக அவளிடம் ஓடினான்.

''இந்தா, உனக்கே உனக்கு,'' என்று அவள் கையில் காரைத் திணித்துவிட்டு, என்னிடம் வந்தான். இருவரும் பிளாட்பாரத்தில் இறங்கி நின்றோம்.

கையில் காருடன், கொள்ளை சந்தோஷமாக ஜன்னலோரம் நின்று கொண்டு, என் மகனையே பார்த்துக்கொண்டிருந்தாள், கிழவனின் பேத்தி.

தன்னுடையது இரயில் சிநேகம் அல்ல என்பதை என் மகன் நிரூபித்து விட்டான்!

— க. ஒப்பிலியப்பன்



மேல்மருவத்தூர் அற்புதங்கள்

பாட்டி சொல்லும் படக்கதைகள்

வாங்கடா பேரப்பசங்களா, எல்லாம் சத்தம் போடாம கையைக் கட்டிக்கிட்டு உக்காரணும்... ம்ம்.... மொதல்ல ஒரு சாமி கதையை ஆரம்பிப்போம்....

ஓரே ஒரு ஊரிலே மேல்மருவத்தூர்னு ஓர் எடம். அங்கே உலகத்தையே ஆட்சி செய்கிற அம்மன் சக்தி. பங்காரு அடிகளார்னு ஒரு சாமியாரு. அவர் உலக சமாதானத்துக்காக ஒரு வேள்வியே நடத்தினாரு. அதுக்கு முன்னால என்ன ஆச்சுன்னா.... கற்பகம்னு ஒரு பொண்ணு. உச்சி வெயில்ல அது வெளியே போனப்ப கப்புன்னு ஒரு பேய் பிடிச்சிடுச்சு. அவ அண்ணன் மேல்மருவத்தூர் பக்தன். அம்மன் மேலே பாட்டுப் பாடுவான். ஆனா தங்கைக்குக் குணமாகலேன்னு சாமி நம்பிக்கையே போயிடிச்சுன்னும் சொல்லுவான். ஊர்ல ஒரு துஷ்டனும் இருந்தான். அவன் பேரு மிராசுதார் ராஜதுரை.. ஏழைங்களெல்லாம் ரொம்ப கஷ்டப்படுத்தறவன். அவனுக்கு ஒரு தங்கை. அவ நல்லவ. அவளும் மேல்மருவத்தூர் பக்தை....

சாமியைக் கும்பிடற மாதிரி, செவப்பு டிரெஸ் போட்டு ஏமாத்தற ஒருத்தன் கதி என்ன ஆச்சு தெரியுமா? சிங்கம், கரடி, புலி, யானை, பாம்பு எல்லாம் போற வழில வந்து 'பா'ன்னு பயமுறுத்திச்சு பாத்தியா.... சாமியை ஏமாத்தக் கூடாது. தெரியுதா? கோயிலுக்கு அழைச்சிட்டுப் போய், பேயை ஓட்டினப்புறம் கூட அந்தப் பொண்ணை அவ புருஷன் ஒத்துக்கலே. அவளையும் சாமி கடைசில திருத்திடுவாரு....

அந்தக் கெட்டவன் என்ன ஆனான்னு கேக்கறீங்களா? நல்லாக் கேளுங்க. வேள்வி நடக்கற எடத்திலேர்ந்து பக்தையை கடத்திக்கிட்டு கெட்டவங்கள்லாம் போனாங்க. ஒரு தனியான எடத்தில அடைச்சு வச்சுட்டாங்க. தப்பான எண்ணத்தோட ராஜதுரை அங்கே உள்ளே போனா.... அவன் தங்கையே அங்கே நிக்கறா. கையிலே ஒரு துப்பாக்கி வச்சிருக்கா. உண்மையில அந்தத் தங்கை மாதிரி வந்தது யாரு தெரியுமா? அம்மனேதான் கையிலே துப்பாக்கியோட வந்துட்டாங்க. சாமி துப்பாக்கில்லாம் வெடிக்குமான்னு கேக்கறியா, பேராண்டி.... புராண காலத்தில சூலம், அம்புல்லாம் வச்சிருந்தது. இப்ப முடியுமா? டுமீல், டுமீல்னு அந்தக் கெட்டவனை சுட்டுத் தள்ளிட்டா. அவன் போட்டிருந்த சட்டை பூரா ரத்தம் தோய்ஞ்சு கலரே செவப்பா ஆயிடிச்சு. ஆனா அவன் சாகலே.... எவ்வளவு குண்டு பாய்ஞ்சாலும் பக்தி கலர்ல சட்டை மாறினவுடனே, அவன் திருந்திடறான் இல்லே? அதனால சாமி மன்னிச்சிடும். நீங்க கூட தப்பான வழிக்குப் போகக் கூடாது! ஏண்டா கொட்டாவி விடறீங்க.... சரி, வேறே கதை சொல்லட்டுமா?

இரண்டு குடும்பங்களை எடுத்துக் கொண்டு, மேல்மருவத்தூரம்மனின் அற்புதங்களை, அவர்களை வைத்தே விளக்கியிருக்கும் கட்டுக்கோப்பான திரைக்கதை ஒரு பெரிய ப்ளஸ் பாயின்ட்: பக்தி மூடை கொண்டு வரும் கே.வி. மகாதேவன் இன்னொரு ப்ளஸ்.

ஓரே ஒரு ஊரிலே ஒரு பெரிய குடும்பம். மீசை இல்லாத கொழுகொழு சிவாஜிதான் குடும்பத் தலைவரு. கண்ணாடி போட்டு, கத்திக் கத்தி வசனம் பேசறாங்களே பத்மினி, அவங்கதான் சிவாஜியோட சம்சாரம். அவங்களைப் பார்த்தா, வீட்டுல அத்தனை பேரும் ரொம்ப நடுங்குவாங்க. சேச்சே, பத்மினி பூச்சாண்டி இல்லப்பா, ரொம்பக் கண்டிப்பானவங்க, அவ்வளவுதான். மொத்தம் நாலு பசங்க — ராமாயணம் மாதிரி.

மூத்த மருமவளும், புதுசா வந்த மருமவளும் பத்மினிப் பாட்டியைப் பாத்து பயப்பட்டறாங்க. புதுசா ஒரு மருமவ வந்தான்னு சொன்னேனே, அவளோட தங்கைதான் ரேவதி. படபடன்னு கன்னுக்குட்டி மாதிரி துள்ளிட்டிருப்பா ரேவதி. அவ இந்தக் குடும்பத்துக்கு ஒரு விருந்தாளியா வந்து சேரறா... இனிமே பத்மினி தர்பார் பொலபொலன்னு கலையப் போவுது பார்....

மூத்த மருமவ ஜெயசித்ராவுக்கு டான்ஸ் ஆடறதுன்னா இஷ்டம். ரேவதி மொட்டை மாடில அழைச்சிட்டுப் போய் ஆடச் சொல்றாங்க. பெரிய ஆம்பிளைங்க ரகசியமா பீடி, சிகரெட் புடிக்க ஆரம்பிக்கறாங்க.... சிவாஜிக்கு ஸ்வீட், மட்டன், மீனு இதெல்லாம் கொடுக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரா, அதையெல்லாம் யாருக்கும் தெரியாம தோட்டத்தில அவர் சாப்பிடறாரு. என்னது, பழைய ஹிந்தி கதை மாதிரி இருக்குதுன்றியா, சிவாஜிக்கு ஏத்த மாதிரி இனிமே புதுசா கதை ஏது?

டேய், டேய் எழுந்திருக்காதீங்க. போரடிக்குதா? சரி, சமையல்காரன் செந்தில் கதை சொல்றேன், கேளுங்க. எஜமானனுக்கு ரகசியமா மீன் வறுத்திட்டிருக்காரா, திடீர்னு பத்மினி அங்கே வந்திடறாங்க. உடனே வறுவலை தொப்பிக்குள்ள போட்டுத் தலைல மாட்டிக்கறாரு. மண்டையில அங்கங்கே செவப்பா வெந்தே போயிடுது, பாவம்! ஆளைப் பாருங்க, பாதிப் படத்திலே காக்கா உஷ்! காமெடி ஆளுங்கள்லாம் காணாமப் போயிடுவாங்க. அப்புறம் கடைசிலதான் திடீர்னு வருவாங்க! பாட்டுல்லாம் நல்லா இருக்கில்லே? ரவீந்திரன் தம்பிதான் பாட்டு போட்டிருக்குது.

பத்மினி, ரேவதி கதை என்னாச்சுன்னு கேக்கறியா? ரெண்டு பேருக்கும் சண்டை. ரேவதியைக் கண்டாலே பத்மினிக்கு வெறுப்பு. ரேவதி கோவிச்சுக்கிட்டு புறப்பட்டுப் போயிடுச்சு. போகறதுக்கு முன்னால சிவாஜிக்கு நெஞ்சு வலி. வேலைக்கு வச்சுக்கிட்ட நர்ஸ்கூட தூங்கிப் போயிட்டா. ரேவதி தூங்காம பணிவிடைல்லாம் செய்யறா. பத்மினிக்கு மனசு மாறிடுது. ரேவதிக்கு கான்ஸர் இருக்குன்னு சொன்னா இன்னும் பாவமாப் போயிடும் இல்லே, அதனால கான்ஸர் வேறே இருக்கு. அப்புறம் பத்மினி மனசு மாறி..... அடடா, பசங்கள்லாம் தூங்கியே போயிட்டாங்களே....

ரேவதியிடம் துள்ளல் இருக்கிறது. சரி, பத்மினியிடம் மிடுக்கு இருக்கிறது. ஓகே. சிவாஜியிடம் வெரைட்டி இருக்கிறது, ரைட்டோ. இருந்தாலும் திரைக்கதையில் சுறுசுறுப்பு வர யானை சைஸுக்கு ஒரு இன்ஜெக்ஷன் போட வேண்டும் போலிருக்கிறதே, இதை எங்கே போய்ச் சொல்லி முட்டிக் கொள்வது?

— ஜெயமன் மதன்

லட்சுமி வந்தாச்சு



N.S.K. பில்டர்ஸ்



தீபாவளி பரிசு திட்டம்:

13.10.86 முதல் 15.11.86 வரை

சிறப்பு பாதுகாப்பு: ரூ 25,000/- அதற்குமேல் உள்ள டெபாசிட்டுகளுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற வீட்டுமனை பத்திரம் அளிக்கும் திட்டம்.

கீழே குறிப்பிட்டுள்ளபடி தங்களுக்கு கிடைக்கும் பரிசு கூப்பன்களை, தங்கம், வெள்ளி நகைகளாகவோ அல்லது பட்டு புடவையாகவோ மாற்றிக் கொள்ளலாம்.

பரிசுக் கூப்பன்கள்		
டெபாசிட்	5 வருடம்	குறிஞ்சி
Rs. 5000/-	Rs. 200/-	Rs. 150/-
Rs. 10,000/-	Rs. 400/-	Rs. 300/-
Rs. 25,000/-	Rs. 1,000/-	Rs. 750/-
Rs. 50,000/-	Rs. 2,000/-	Rs. 1,500/-
Rs. 1,00,000/-	Rs. 4,000/-	Rs. 3,000/-

(இச்சலுகை 15-11-86 வரை மட்டுமே)

பிக்ஸட் டெபாசிட் திட்டம்:

1 வருடம்	2 வருடம்	3 வருடம்	5 வருடம்
20%	21%	22%	24%

குறிஞ்சி டெபாசிட் திட்டம்:

உங்களுடைய முதலீடு 42 மாதங்களில் இருமடங்காகிறது
(இச்சலுகை 15-11-86 வரை மட்டுமே)

கூடுதல் போனஸ் வட்டி:

3 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற 1%, 6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற 2%, 12 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற 3%.

பாங்க் கேஷ் சர்டிபிகேட்:

5 வருடம்	6 வருடம்	7 வருடம்	11 வருடம்
18%	19%	20%	24%

(இதற்கு பரிசு கூப்பன் அனுமதி இல்லை)

N.S.K. பில்டர்ஸ்

38-B, பார்கிட் ரோடு தி. நகர், சென்னை 600 017. போன்: 445252.

எதிர்கால சேமிப்பிற்கு என். எஸ். கே.

ஸ்டேன்ஸ்

ரெட் ரோஸ் டஸ்ட் டீ

சிகப்பு ரோஜாவின் அழகில் ஆழ்ந்து மதிமயங்காதவர் உண்டோ...

ஸ்டேன்ஸ் ரெட் ரோஸ் டஸ்ட் டீ

ருசித்து மனம் பறிகொடுக்காதவர் உண்டோ?

ரோஜாவின் மணத்தை யாரால் மறக்கமுடியும்? ஸ்டேன்ஸ் ரெட் ரோஸ் டஸ்ட் டீயின் நறுமணமும் அதேபோல்தான்—நினைத்தாலே நாவூற வைப்பது.

அதன் சுவையோ, ம்ம்ம்... இயற்கையானது. முழு திருப்தி அளிப்பது. மீண்டும் மீண்டும் பருகத் தூண்டுவது.

இத்தனிச் சுவையையும் நறுமணத்தையும் அதிகமாகப் பெறலாம்—ஸ்டேன்ஸ் ரெட் ரோஸ் டஸ்ட் டீ அளிக்கும் அதிக கோப்பைகளிலிருந்து.


ஸ்டேன்ஸ் கம்பெனியாரின் 80 வருட அனுபவத்தின் விளைவான தரமான தயாரிப்பு...



M86.61 Tm.

ஸ்டேன்ஸ் ரெட் ரோஸ் டஸ்ட் டீ.
இதன் உன்னதச் சுவை, ரோஜா அழகிற்கு இணை

ஸ்டேன்ஸ் டீ & காபி லிமிடெட் த.பெ. எண் 3856 கோயம்பத்தூர்-641 018.



பட்டுக்கோட்டை பிரபாகர்

என்னைக் காணவில்லை

15

சுசிலா நின்ற இடத்திற்கு வந்து, அங்கிருந்து அவள் பார்வைக்கு இணையாகச் சுழல் நாற்காலியின் வளைவான நான்கு பாதங்களையும் பார்த்தான் பரத்.

ஒன்றில் ரப்பர் சக்கரத்தின் ஓர் இடைவெளியில் எதுவோ சிக்கியிருக்க.... ஜன்னல் வழி வெளிச்சத்தில் ஒளியைப் பிரதிபலித்தது அது.

பரத் குனிந்து அமர்ந்து பார்த்தான். தன்து சாவிக் கொத்தை எடுத்து அதில் தொங்கின சிறிய கத்தியை விரித்து அந்தப் பொருளை அசைத்தான். மெல்ல அதை இடம் பெயர்த்துத் தரையில் விழ வைத்து, கையில் எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டு ஜன்னலோரமாய்ச் சென்று பார்த்தான்.

சுசீலாவும், சுகுமாரும் அவனை நெருங்கினார்கள்.

அது — அடர்த்தியான நீலத்தில் ஒருபுறம் கூர்மையுடன் இருந்த, கொஞ்சம் கடுகைவிடப் பெரிய சைசில் ஒரு கல்.

"என்ன இது?" என்றான் சுகுமார்.

"நீலக் கல். உயர்வானதா, மட்டமானதான்னு தெரியலே. ஆனா ஏதோ ஓர் ஆபரணத்திலேர்ந்து விழுந்திருக்கணும். ஒரு நாற்காலியோட கால் சக்கரத்தின் மேல் பகுதியிலே இது சிக்கியிருக்கு. தரையிலே கிடக்கும் கல்லா இருந்தா இப்படி மேல் பகுதியிலே சிக்க முடியாது. அடிப் பகுதியிலேதான் சிக்கும்."

"அதனால்?"

"இது இயல்பா, யதேச்சையா, தெறிச்சிப் பாய்ஞ்சி மேல் பகுதியிலே சிக்கியிருக்கு. வெளிச்சத்தை இது பிரதிபலிக்காமப் போனா இதைக் கண்டு பிடிச்சிருக்க முடியாது. அதனால்தான் போலீஸ் பார்வையிலே இது விழலே."

"இதை வைச்சுக் கொலைகாரனைக் கண்டு பிடிக்க முடியுமா?" என்றான் சுகுமார்.

"சிரமம். ஆனா இந்தக் கல் கொஞ்சம் உதவியா இருக்கும். சுசி, இந்தா இதைக் கோயில் பிரசாதம் மாதிரி மடிச்சிப் பத்திரமா வச்சுக்கோ. இன்ஸ்பெக்டர் நாதன்கிட்டே தந்து லாபுக்கு அனுப்பிப் பார்க்கச் சொல்லலாம்."

"எங்கே கொண்டாங்க?" என்று அந்தக் கல்லைத் தன் உள்ளங்கையில் வாங்கிப் பார்த்தான் சுகுமார்.

"இந்த மாதிரி கற்கள் பதிச்ச நகை எதையும் நீங்க பார்த்திருக்கீங்களா மிஸ்டர் சுகுமார்?"

"இல்லை" என்றான் அவசரமாக.

சுசீலா அதை வாங்கிக் கைப்பைக்குள் இருந்து பஸ் 'டிக்கெட்டை எடுத்து மடித்து வைத்துக் கொண்டாள்.

பரத் அறையை மேலும் ஆராய்ந்தான். அறையின் வாசலுக்குச் சென்று அங்கிருந்து முதுகு காட்டும் சுழல் நாற்காலியைப் பார்த்தான். நெருங்கி வந்து பார்த்தான். அருகே இருந்த மேஜையில், தனியாய்த் தொங்கின இன்ட்டர்காமின் ரிசீவரைப் பார்த்தான்.

அந்த ரிசீவரை எடுத்து அதனிடத்தில் வைத்துவிட்டுச் சுழல் நாற்காலியில் அமர்ந்தான். அங்கிருந்து கைநீட்டிக் கொஞ்சம் சிரமத்தின் பேரில்தான் இன்ட்டர்காமின் ரிசீவரை எடுக்க முடிந்தது. அதன் ஸ்பிரிங் சுருள் நீளம் முழுவதும் உபயோகிக்க வேண்டியிருந்தது.

"சுசி, அந்த இன்ட்டர்காம் பக்கத்தில் எச்சரிக்கையா நில்லு. இப்ப நான் இந்த ரிசீவரை அப்படியே விடப் போறேன். இன்ட்டர்காம் செட்டே கீழே விழுற நிலைக்கு வரலாம். வந்தா கவனமா பிடிச்சுக்கோ" என்று ரிசீவரை விடுவித்தான்.

அது விடுவிக்கப்பட்ட வேகத்தில் இன்ட்டர்காம் செட் நிலை மாறி மேஜையின் விளிம்புக்கு வந்து கீழேயே விழுந்துவிட... சுப்பென்று அதைப் பிடித்துக் கொண்டு மறுபடி மேஜை மேல் வைத்தாள் சுசீலா.

"மிஸ்டர் நாகராஜன் இந்த நாற்காலியிலே உட்கார்ந்த நிலையிலேதானே கத்தியால் குத்தப்பட்டிருக்கிறார்?"

"ஆமாம்" என்றான் சுகுமார்.

"சுந்தரம் வா, என்னைக் காப்பாத்துன்னு இன்ட்டர்காமிலே வாட்ச்மேனைக் கூப்பிட்டு, அவன் ஓடி வந்தான். இல்லையா?"

"ஆமாம். அசோக் தன்னைத் தாக்கறதுக்கு முன்னாடி அப்படி செஞ்சிருக்கார்."

"நடந்திருக்கிறது கத்திக் குத்து. ஒரே இடத்திலேதான் குத்து. வேறே எந்தவிதமான காயங்களும் இல்லைங்கறது போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட். அசோக் கையிலே கத்தியோட கிட்டே வந்தப்போ நாகராஜன் இப்படி செய்திருக்கணும். அப்படித்தானே?"

"ஆமாம்."

"இப்போ கேட்லே இருக்கிறது அதே வாட்ச்மேன் சுந்தரம்தானே?"

"ஆமாம்."

"கேட் கிட்டேயே நிக்கறானா. இல்லை ரொம்ப தொலைவா நிக்கறானான்னு ஒரு



நிமிஷம் பார்த்துட்டு வாங்களேன்.''

சுகுமார் வெளியே செல்ல, பரத் தன் கைக்கடிகாரத்தைக் கழற்றிச் சுசீலாவிடம் கொடுத்தான். ''சுசி வினாடி முள்ளைக் கவனி. எனக்கு ரொம்ப சரியாக கணக்குப் பண்ணிச் சொல்லணும் நீ. நான் இன்ட்டர்காம் எடுத்துச் சுந்தரத்துக்கிட்டே பேசப் போறேன். நான் இன்ட்டர்காம் எடுத்து, நம்பர் அழுத்திக் கூப்பிட்டு, அவன் அங்கே எடுத்து நான் 'ஹலோ'ன்னு சொல்றவரைக்கும் எத்தனை வினாடிகள் ஆகுதுன்னு பாரு. ஒக்கே?''

சுகுமார் உள்ளே வந்து, ''கேட்கிட்டே தான் இருக்கான்'' என்றான்.

''சரி, சுசி ரெடியா? வாட்ச்மேனைக் கூப்பிடணும். எந்த நம்பர் மிஸ்டர் சுகுமார்?''

''ஏழு.''

''ரைட். ஸ்டார்ட் சுசி'' என்று பரத் எக்கி முன்போலவே ரிசீவரைக் கையில் எடுத்து, ஏழாம் நம்பர் அழுத்தி, சில வினாடிகள் காத்திருந்து, சுந்தரம் மறுமுனையில் ஹலோ என்றதும் இவனும் ஹலோ சுந்தரம், ஒரு நிமிஷம் உள்ளே வாங்க என்று சொல்லி வைத்தான். சுசீலா பக்கம் திரும்பினான்.

''பதினாறு செகண்ட்ஸ்'' என்றாள்.

''கையிலே ஆயுதத்தோட மனசிலே கொலை வெறியோட இருக்கிற ஒருத்தன் தன் எதிர்ல நிராயுதபாணியா இருக்கிற ஒருத்தனை, தனக்கு எதிரா செயல்படப் பதினாறு செகண்ட்ஸ் அனுமதிக்க மாட்டான்.''

''அதனாலே?'' என்றான் சுகுமார்.

''நத்திங். வா சுசி போகலாம்'' என்று வெளியே வந்தான்.

''பார்த்துட்டீங்களா?'' என்றாள் மாயா.

''யெஸ். உங்ககிட்டே நீலக்கல் பதிச்ச நெக்லஸ், வளையல், மோதிரம், தோடு, டாலர் ஏதாவது இருக்கா?''

''இருக்கே. என் கல்யாணத்தன்னைக்கு எனக்கு ப்ளூசெட்தான் பிரசண்ட் செஞ்சார் அவர்.''


''உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா அந்த செட்டை நான் பார்க்க விரும்பறேன்.''

''எதுக்கு?''

''என் விசாரணைக்கு உதவியா இருக்கும். ப்ளீஸ், கொண்டாங்க.''

''இருங்க கொண்டார்றேன்'' என்று மாடியேறி மாயா போக, பரத்தின் முகத்தை நேராக முறைத்துவிட்டு, சுகுமார் சிகரெட் எடுத்தான்.

மாயா இறங்கி வந்து பெட்டியைத் திறந்து காண்பித்தாள்.



''பாரு சுசி'' என்றான் பரத்.

சோபாவில் அமர்ந்து நகைப் பெட்டியை மடியில் வைத்துக் கொண்டு, நிதானமாக ஒவ்வொரு கல்லாகப் பார்த்தாள் சுசிலா.

ஹாலுக்குள் வந்த சுந்தரத்தை விசாரித்தான் பரத்.

பத்து நிமிடங்களில் அவர்கள் புறப்பட்டார்கள்.

பைக்கில், அவன் முதுகில் ஒட்டிக் கொண்டு சுசிலா சொன்னாள்: ''அந்த நகைகளில் எல்லாக் கல்லும் சரியா இருக்கு. அதிலேர்ந்து விழலே. நீங்க மாயாவைச் சந்தேகப்படறீங்களா, பரத்?''

''மாயாவையும்.''

''அவகிட்டே அயர்ன் அலிபி இருக்கு.''

''கொஞ்சம் பொய்யும் இருக்கு.''

''எது பொய்?''

''மூணு வருஷமா காதல்னு சொன்னா. அப்புறம் சமாளிச்சா. இன்னொண்ணு கவனிச்சியா?''

''என்ன?''

''புருஷன் செத்தநாலாவது நாளே மேக்கப் போட்டிருக்கா.''

''உண்மை. யோசிக்க வேண்டிய விஷயம். அந்த சுகுமார் ரொம்பதான் பதர்றார் இல்லே? இன்டர்காமிலே என்ன நாடகம் எல்லாம் நடத்தினீங்க...''

''இந்தக் கொலே ஒரு செட்டப்ன்னு நூறு சதவீதம் இப்போ நான் நம்பறேன். இதை அசோக் செய்யலே. அசோக்கை விட்டா இந்தக் கொலேக்கு மோட்டிவ் அடுத்ததா மாயாகிட்டேதான் இருக்கு. அவளுக்குப் பக்கபலமா ஒரு முரட்டு அண்ணனும் இருக்கான், ஸோ....

''ஸோ....?''

''எப்படி கொன்னாங்கன்னு துல்லியமா கண்டுபிடிச்சாகணும். அதுவும் ஆதாரத்தோட, பெரிய டாஸ்க் இது. பார்க்கலாம்.''

''உண்மையாவா?'' என்றான் சுகுமார்.

''ஆமாம். அதிலே எனக்குச் சந்தேகமே இல்லே. பிரேமாவும், கதிரேசனும் பேசினதைச் சரியா கேட்டேன். அசோக் தேடிப் போனது பரத்ங்கிற அந்த லாயரைத்தான்'' என்றான் தாமஸ் நாற்காலியில் சாய்வாய் அமர்ந்து கொண்டு.

''இங்கே வந்து குடைகுடைன்னு குடைஞ்ச அதே பரத்தானா?'' என்றாள் மாயா கன்னத்தில் கைவைத்து, மடியில் பூனே வைத்து.

''அவனேதான். அவன் இங்கே வந்தது ஒரளவுக்கு நமக்கு நன்மைதான்.''

''எப்படி தாமஸ்?''

''ஒரு நீலக் கல்லேக் கண்டுபிடிச்சிருக்கிறது நமக்குக் கிடைச்சிருக்கிற ஒரு துப்பு. இந்தக் கொலேயை யார் செஞ்சிருக்கலாம்னு நாம யூகிக்கிறோமோ, அவங்களே அடையாளம் காட்ட இது உதவலாமே...''

''யாரோ செஞ்சான். காரியம் முடிஞ்சுது. தாமஸ், நீ அந்தக் கவலேயை விட்டுடேன்.''

''விட முடியாது சுகுமார். போலீசைப் பொறுத்தவரைக்கும் அசோக்தான் குற்றவாளி. அவன் தலைமறைவா இருக்கான். போலீஸ் அவனேத் தேடற முயற்சியிலே சோர்வடையறப்போ, அடுத்த சந்தேகப் பார்வை மாயா மேலே விழும். அப்புறம் அது தீவிரமாகும். தீவிரமாக லாயர் பரத் உதவுவான். எப்படியாச்சும் மாட்ட வைக்க முயற்சி செய்வாங்க.''

''போட்டுக் குழப்பாதே தாமஸ். இப்ப நாம என்ன செய்யணும்னு சொல்றே?''

''அந்த அசோக்கைச் சீக்கிரமா போலீஸ் கைலே சிக்க வச்சிடணும்.''

''எப்படி?''

''அசோக் இருக்கிற இடத்தைப் போலீசுக்குச் சொன்னாப் போதுமே.... பரத் உங்க ரெண்டு பேரையும் சந்திச்சாச்சு. என்னேத்தான் அவனுக்குத் தெரியாது. பரத் கிட்டேயிருந்து அசோக் இருக்கிற இடத்தைத் தெரிஞ்சிக்க வேண்டியது என் பொறுப்பு. முதல் கட்டமா போன்ல மிரட்டப் போறேன். அதுக்குப் பணியலேன்னா.... இன்னொரு யோசனேயும் வச்சிருக்கேன்.''

''தாமஸ், உன் யோசனேப்படியே செய்'' என்றான் சுகுமார்.

அந்தப் பொதுத் தொலேபேசியில் எண்களேச் சுழற்றினான் தாமஸ்.

''ஹலோ பரத்'' என்றான் பரத்.

''சார், வணக்கம். என் பேரெல்லாம் உங்களுக்கு வேணும். என்னோட விரல் பிளேடுலே விளேயாடிப் பழக்கப்பட்டதுன்னு மட்டும் சொல்லிக்கிறேன். அசோக் அண்ணாச்சியை ஒளிச்சி வச்சிருக்கிறது ரொம்பத் தப்பு. கல்யாணமெல்லாம் கட்டிக்கணும்னு கனவு வச்சிருக்கீங்க. உங்களுக்கு ஏன் இதெல்லாம்? இத்தனேச் சின்ன வயசிலே சாவு ஆசை வரக் கூடாது. சொல்லுப்பா, அசோக் எங்கே இருக்கான்?''

''இதென்ன உன்னோட பெரிய தொந்திரவாப் போச்சு. இப்பத்தானே கொஞ்சம் முன்னாடி போன் செஞ்சே, நான்தான் தெளிவா சொன்னேனே.... அசோக் என்னேத் தேடி வரலேன்னு. மாறு கால், மாறு கை வாங்கிடுவேன்னு சொன்னே. விலேசிப்பா இருந்தா வாங்கிக்கோன்னுட்டு வச்சிட்டேன். இப்ப பிளேடுன்றே.... சாவுன்றே.... ஆயிரம் மிரட்டல் பார்த்தாச்சு. ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல்ல நல்ல பிளேடா பார்த்து வாங்கிட்டு வா, விலாசம் தெரியுமா, சொல்லட்டுமா? இடியட்! வைடா போனே!''

மறுமுனே வைக்கப்பட்டதும் குழப்பமாக போனே வைத்தான் தாமஸ்.

சற்றுமுன் போனில் நான் மிரட்டினேனா? இல்லேயே.... மாறு கால், மாறு கை வாங்குவதாக நான் எப்போது சொன்னேன்? இப்போதுதானே போன் செய்கிறேன்? எனக்கு முன்னால் இன்னொருத்தன் பரத்தை போனில் மிரட்டியிருக்கிறான். அட! என்ன இது? யார் அது?

(தொடரும்)



உலக அரங்கில் ஓர் இந்தியத் திரைப்படம்!

ஒரு வித்தியாசமான திரைப்படம் தெலுங்கில் தயாராகி உலகம் முழுவதும் ஓடிக் கொண்டிருக்கிறது. இத்தனைக்கும் அப் படத்தின் ஹீரோ, ஹீரோயின், வில்லன் எல்லாமே குரங்குதான்!

தமிழில் ''எங்களையும் வாழ விடுங்கள்'' என்ற தலைப்பில் வரிவிலக்குடன் ஓடிக் கொண்டிருப்பதும், இந்தியில் 'ஆஸ்ரா கி ஓர்' என்ற தலைப்பில் வெளியாகி ஜனாதிபதி பரிசு பெற்ற படமும் இதுதான். தமிழ், மலையாளம், கன்னடம், இந்தி, ஆங்கிலம், ஜெர்மன், ஸ்பானிஷ், ஃப்ரெஞ்ச், மொழிகளில் 'டப்' செய்யப்பட்டுள்ளது இந்தப் படம்.

படத் தயாரிப்பாளரான ரமேஷ் நாயுடுவைச் சந்தித்தோம். இவர் ஓர் இசையமைப்பாளர். தமிழ் உள்பட இந்திய மொழிகள் அனைத்திலும் திரைப்பட இசையமைத்துள்ளார்.

இம்மாதிரி ஒரு படம் எடுக்க வேண்டும் என்று எப்படி அவருக்குத் தோன்றியது? ரமேஷ் நாயுடு பேசுகிறார்:

''நான் பம்பாயிலிருந்தபோது, ஒரு மாட்டு வண்டிக்காரன் பாரம் இழுக்கச் சிரமப்பட்ட மாட்டைச் சாட்டையால் அடித்த அடியில் அது துடிதுடித்து இறப்பதை நேரில் கண்டேன். என் கண்களில் நீர் ததும்ப வீடு திரும்பினேன். அந்த வாயில்லாத ஜீவன் பட்டபாடு என் நெஞ்சைத் தொட்டது.

''அதே பம்பாயில் நாகபஞ்சமி சமயம் பல பெண்மணிகள் புற்றில் பாலும், முட்டையும் வைத்து வழிபட்டனர். ஒரு பாம்பாட்டி தனது பாம்பை வலுக்கட்டாயமாக ஒரு குச்சியினால் குத்தி அப்பாலைக் குடிக்க வைத்தான். இதுவும் ஒருவிதத்தில் சித்ரவதையாக எனது மனத்தில் பட்டது.

காலஞ் சென்ற பாரதப் பிரதமர் நேருஜி அவர்கள் ஒருசமயம் நாட்டில் அழிந்து வரும் வனவிலங்குகளைப் பற்றி மனவேதனையுடன் குறிப்பிடும்போது, 'இந்தப் பிராணிகளும் பறவைகளும் நம்மால் துன்புறுத்தப்படும் போது, மனித இனத்தைப் பற்றி அவை என்ன நினைக்கும்' என்று பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கம் என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்தது.

''பறவைகளையும், பிராணிகளையும் மனிதன் துன்புறுத்தக் கூடாது என்று வலியுறுத்தும் ஒரு படம் எடுக்கத் தீர்மானித்தேன். ஓரளவு கதையெழுதியதும் பல தயாரிப்பாளர்களிடம் சொன்னேன். ''கேட்க நல்லாத்தான் இருக்கு. ஆனால் குரங்கையும், பாம்பையும் படத்திலே காட்டினால் படம் ஓடுமா? என்ன?' என்று என்னை ஏளனம் செய்தார்கள். அதனால் எனது இசைக் குழுவிலிருந்த அனைவரும் ஆளுக்குக் கொஞ்சம் முதலீடு செய்து படத்தைத் தைரியமாகத் துவக்கினோம். ஹைதராபாத்திலிருந்து ஒரு ஜோடி குரங்கினை வரவழைத்து சென்னையில் பயிற்சியளித்தோம். வனவிலங்குகளை வைத்துப் படமெடுப்பதில் அனுபவமுள்ள பி.எஸ். பிரகாஷை டைரக்டராக்கியதுடன், சென்னையிலுள்ள எஸ்.பி.சி.ஏ. அமைப்பின் உதவியையும் ஆலோசனையையும் பெற்றோம்.

தொடர்ந்து பல 'ஜங்கிள் புக்'குகளைப் படித்து பிராணிகளின் குணநலன்களை அறிந்தோம்.

''போரூர், மைசூர் மிருகக் காட்சி சாலை, ராஜமகேந்திரபுரம், முதுமலை, ஹொகேனகல், தலைக்கோணம் என்று பல லொகேஷன்களில் படப்பிடிப்பை நடத்தினோம். மூன்று குரங்குகள், முந்நூறு நல்ல பாம்புகள், இருபதுக்கும் மேற்பட்ட யானைகள் போன்றவை அடுத்தடுத்து படப்பிடிப்புக்காகத் தேவைப்பட்டன.

''குரங்குகள் காலை ஆறு முதல் எட்டு வரை சுறுசுறுப்பாக இருக்கும். அதே போல மாலை நாலு முதல் ஆறுவரை அவற்றிற்கு சுறுசுறுப்பு வரும். அந்த நேரங்களில் மட்டும் அவற்றை நடிக்க வைப்போம். பழங்கள், பால், முட்டை, வைட்டமின் ஊசிகள் மூலம் அவற்றை எப்போதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருந்தோம். குறிப்பிட்ட நேரம்



நண்பர்களாக நடிக்கும் பாம்பும் குரங்கும்



ஜனாதிபதி பரிசு பெறும் ரமேஷ் நாயுடு

தாண்டிவிட்டால் குரங்குகள் எங்களை நோக்கி கற்களை வீசும். அதனால் அவற்றின் போக்கிலேயே விட்டு ஒரே காட்சியினை மூன்று விதமான கேமிராக்களில் படமாக்கினோம்.

"குரங்குக்கும் பாம்புக்கும் ஜென்மப் பகை உண்டு. ஆனால் படத்திலோ ஒன்றுக்கொன்று நண்பர்களாக நடிக்கின்றன. இதற்குக் கிட்டத்தட்ட இரண்டு மாதம் பயிற்சியளித்தோம். அதே போல யானையைக் கண்டால் குரங்கு நடுங்கும். எனவே பயப்படாதிருக்கவும் இம்மாதிரியே பயிற்சி தரப்பட்டது.

"எங்கள் படப்பிடிப்பின்போது ஒரு மிருக வைத்தியர் மருந்துகளுடன் எப்போதும் தயாராக இருந்தார். நல்ல பாம்புகள் ஒட்டு மொத்தமாக வந்து குரங்குகளைக் காப்பாற்றும் சீன் படத்தில் ரொம்ப த்ரில்லாக அமைந்தது.

"ஒவ்வொரு சீனும் நான் வணங்கும் ராகவேந்திர சுவாமியின் அருளால் அசம்பாவிதம் இல்லாமல் படமாயிற்று. படம் முடிந்து அதை எடிட்டர் பாலுவின் கைவண்ணத்தினால் வெட்டி ஒட்டியபோது நாங்கள் பட்ட சிரமத்துக்கு பலன் கிடைத்துவிட்டதை உணர்ந்தோம்.

"சிட்னி திரைப்படவிழா, மற்றும் தாஷ்கெண்ட் படவிழாவில் இப்படத்தினைக் காட்டும் வாய்ப்பு கிடைத்ததுடன், ஜனாதிபதியின் • கரங்களால் தேசிய விருதும் பெற்றது எனக்கு மகிழ்ச்சியளித்தது."

— மன்னை சௌரிரார்ஜன்

புதுக் கவிதைப் போட்டி-2



நீங்கள் ப்ளஸ்டு அல்லது கல்லூரிமாணவராயிருந்தால் மட்டுமே இப்போட்டியில் பங்கேற்கலாம்.

16.11.86 கல்கி இதழில் இடம் பெறும் அட்டைப் படத்தைக் கவனமாகப் பாருங்கள். அது உணர்த்தும் ஒரு சர்வதேசப் பிரச்னையின் அடிப்படையில்ஒருபுதுக்கவிதையை சுமார் 8 — 10 வரிகளில் நீங்கள் எழுத வேண்டும்.

- போஸ்ட் கார்டில் மட்டுமே எழுதலாம்.
- கார்டின் பின்புறத்தில் நீங்கள் படிக்கும் கல்லூரி அல்லது பள்ளியின் முத்திரையைப் பெற வேண்டும்.
- உங்கள் பெயர் மற்றும் விலாசத்தைத் தெளிவாக எழுத வேண்டும்.
- கவிதைகள் 24.11.86 க்குள் எங்களுக்கு வந்து சேர வேண்டும்.
- முதல் பரிசு ரூ. 100/—
- இரண்டாம் பரிசு ரூ. 25/— தவிர ஆறு மாதங்களுக்குக் கல்கி இலவசம்.
- பிரசுரமாகும் கவிதைகள் அனைத்துக்கும் சன்மானம் உண்டு.



மின்னும் மேனி
மெருகுக்கு ரெக்ஸோனா
Rexona
REXONA
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவையான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிறது.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

சிவகாமி எல்லா இடத்திலும் தேடி விட்டாள். அலமாரி, பீரோ, புருஷனுடைய மேஜை இழுப்பறை. எங்கேயும் கைமறதியாக வைத்த ஐந்து ரூபாய் நோட்டைக் காண வில்லை. ஐந்து ரூபாய் பெரிய தொகை இல்லை. இந்த நாளில், ஒரு பொழுது காய் கறிச் செலவுக்குக் கூடக் காணாது. ஆனாலும் சந்துரு வந்திருந்தான். அவன்தான் எடுத் தானா என்பதை உறுதி செய்து கொள்வதற் காக அவள் தேடியாக வேண்டும்.'

சமையலறைக்குள் நுழைந்தாள். அஞ்சறைப் பெட்டி, உப்பு டப்பா, காய்கறிக் கூடை என்று தேடிப் பார்த்தாள். ம்ஹூம்...

காலையில் சில்லறை மாற்றிய பணம்தான் அது. பால்காரனிடம் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து மீதியைச் சந்துரு தான் வாங்கி வந்தான். "அக்கா... மீதிப் பணம்..." எனச் சத்தம் போட்டுச் சொல்லி, பருப்பு டப்பாவின் மீது வைத்தான். சமையல் அலமாரியில் கீழ்த்தட்டில் பருப்பு டப்பா இருந்தது. கறிவேப்பிலைக் காரிக்கு அதிலிருந்துதான் சில்லறை எடுத்தாள் சிவ காமி. அப்போது கூட நோட்டு இருந்தது.

அதற்குள் எங்கே போய் விடும் பறந்து? மற்ற சில்லறைகள் அப்படியே இருக்க, இந்த ஐந்து ரூபாய்க்கு மட்டும் எங்கிருந்து திருடன் வருவான்?

சந்துருதான் என்று மனம் திடமாக நம்பி யது.

அவன் புத்தி வீட்டில் எல்லோருக்கும் தெரியும். 'நீளுகிற கை' அவனுக்கு. அம்மா வின் சுருக்குப் பையில், அப்பாவின் மணி பர்சில். சில வேளைகளில் பீரோவைத் திறந்து கூட....

சந்துருவின் அந்தப் பழக்கம்...



எப்படி எடுக்கிறான் என்பது யாருக்குமே தெரியாது.

ஒப்புக் கொள்ள மாட்டான். சத்தியம் பண்ணுவான். தன் படிப்பைச் சாட்சி சொல்லுவான். சேர்ந்து தேடுவான். பார்க்க, ஊரப் பழிகளைத் தான் சுமக்க நேர்ந்த துரதிர்ஷ்டசாலி மாதிரித் தெரியும். பாவமாகக் கூடத் தோன்றும்.

இரண்டு நாள் கழித்துத் துப்புக் கிடைக்கும். அவனது 'சேத்தாளிகளை' விசாரித்தால் தகவல் சொல்வார்கள்.

"சந்துரு நேத்து ஸ்கூலுக்கு வரலே. மாட்னி ஷோ போனான்!"

"புதுப் பேனா வாங்கினான்!"

"ஃப்ரெண்ட்ஸ்களோடு லிம்கா குடித்தான்!"

அப்பாவின் அடி. முரட்டு அடி. பயம் என்பது கொஞ்ச நாளைக்குத்தான்.

அம்மா கண்ணீர் விடுவாள். "ஆம்பளைப் பையன்டா... நாலு பேர் நம்பணும். வேணும்டா. எவ்வளவு வேணும்னு கேளு. தர்றேன். தானா எடுக்காதேப்பா..!"

"ம்...." என்று முனகுவதோடு சரி.

வீட்டில் என்னவோ தொலையட்டும். நான்கு சுவருக்குள் அடங்கி விடும். வந்த இடத்திலுமா? இதுவே தன் புருஷனின் பணமாக இருந்தால் என்ன நினைப்பார்? "உன் குடும்ப லட்சணம் இதுதானா?" என்று கேட்டால் எங்கே போய் முட்டிக் கொள்ள முடியும்?

அவனை இப்படியே விட முடியாது! சின்னக் குழந்தை இல்லை. மீசை அரும்பி விட்டது. ஏதாவது செய்தாக வேண்டும். இன்றைக்குத் தான் செய்கிற காரியத்தில் அவன் அடியோடு அந்தப் பழக்கத்தை விட்டு விட வேண்டும். அம்மாவின் கண்ணீரில், அப்பாவின் மிரட்டலில் ஒழியாத பழக்கம். தான் செய்கிற காரியத்தில் ஒழிந்து விட வேண்டும்.

சிவகாமி முன் அறைக்கு வந்தாள் சந்துருவைப் பார்த்தாள். ஜன்னல் அருகே சேரை நகர்த்திப் போட்டு ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தான்.

கேட்டு விடலாமா?

அதற்குள் இன்னும் தேடிப் பார்க்க வேண்டிய நாலைந்து இடங்கள் ஞாபகத்திற்கு வந்தன. கொஞ்சம் ஒத்திப் போட்டாள்.

முதலில் தான் என்ன தேடுகிறோம் என்பது அவனுக்குத் தெரியட்டும். அவனது கண்களில் படுகிற மாதிரி ரேடியோ ஸ்டாண்டு கண்ணாடித் தட்டு, பவுடர் கிண்ணம், ஜன்னல் விளிம்பு என்று தேடினாள். பலன் இருந்தது.

"என்னக்கா...?"

"பணம்டா... அஞ்சு ரூபாய். நீ பாக்கி வாங்கி வச்சியே அதைக் காணோம்."

அவனது முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். எந்த மாறுதலும் இல்லை.

"பருப்பு டப்பா மேலே வெச்சேனே..." ரேடியோவின் வால்யூமைக் குறைத்து விட்டு எழுந்தான்.

"காணோம்டா..."

"எத்தாச்சும் செலவு பண்ணி இருப்பே..."

வந்த ஆத்திரத்தில் சுடச் சுடக் கேட்டிருப்பாள். அதற்குள், வாசலில் "அக்கா..." என்ற அழைப்பு. "கொஞ்சம் மோர் வேணும்க்கா. இருக்குமா?"

சுமதி — எதிர் வீட்டுப் பெண் — உள்ளே வந்தாள். "இன்னிக்கு மோர்க்காரி வரமாட்டாளாம்... நாங்களும் பறை ஊத்த மறந்துட்டோம்."

"இருக்கு... பொறு தர்றேன்."

பொறுத்தாள்.

"இன்னிக்கு என்ன சமையல்க்கா...?"

"முருங்கைக்காய் சாம்பார்..."

"எங்க வீட்லியும் அதான்."

"மோர் போதுமா?"

"போதும்க்கா..."



வாங்கியவள் நகராமல், ''சதீஷ் எங்கே?'' என்று கேட்டாள்.

ஸ்கூல்நேரம்என்றுதெரியாதா?இதென்ன கேள்வி. சிவகாமி எரிச்சலடைவதற்குள் அவளே பதிலும் சொன்னாள். ''ஸ்கூல் போயிட்டானா... இன்னிக்கு ஸ்கூல் உண்டா?''

சிவகாமி பதில் சொல்லவில்லை. சந்துரு ரேடியோவின் வால்யூமை மீண்டும் அதிகப் படுத்தியிருந்தான்.

''படிக்க ஏதாச்சும் புஸ்தகம் இருக்கு மாக்கா?''

அவளது குரலில் தெரிந்த உற்சாகம், அவள் மோர் வாங்க மட்டும் வரவில்லையோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது.

''நான் எந்த புஸ்தகம் வாங்கறேன் சுமதி?''

பதிலுக்குச் சிரித்தாள்.

''சரி சுமதி... மோரைக் குடுத்துட்டு வா... எனக்கும் வேலை கெடக்கு.''

சுமதி போய் விட்டாள்.

இப்போதாவது சந்துருவை விசாரிக்க லாமா?

என்னதான் சொந்தத் தம்பி என்றாலும், அவனைவிட பலவருடங்கள் அவள் மூத்தவள் தான் என்றாலும் தயக்கமாக இருந்தது. அவளுக்குக் கல்யாணம் ஆன போது அவன் சின்னப் பையன். விவரம் போதாது. இப்போதுதான் உறவுகளுக்கு அர்த்தம்புரிந்து இருக்கிறது. அடிக்கடி வருகிறான். ''ஏது உன் தம்பிக்குப் பாசம் பொங்கி வழிகிறது'' என அவளது கணவனே கேலி செய்யும் அளவுக்கு நடந்து கொள்கிறான். பணத்தைக் காணவில்லை என்பது நிஜம். அவன்தான் எடுத்தானா என்பது தெரியாது. பார்க்கவில்லை. முன்பு அப்படிப் பழக்கம் இருந்தது என்பதற்காகக் கேட்டு விடுவதா? என்ன நினைப்பான்? ஊரில் அம்மா அப்பா வுக்குத் தெரிந்தால் நன்றாக இருக்குமா?''

என்னதான் செய்வது?

இப்படி ஆரம்பிக்கலாமா என நான்கு ஐந்து விதமாக யோசித்து. ''சந்துரு...'' என்று கூப்பிட்டாள்.

''என்னக்கா...?'' — வந்தான்.

''என்னடா வந்ததுல இருந்து ரேடியோ... உன்னைப் பத்தி ஒண்ணும் சொல்ல மாட் டேங்கிறே...?''

''என்ன சொல்லணும்...?''

''பழைய பழக்கம்லாம் இருக்கா...? அப்பா அதைப் பத்தி ஒண்ணுமே எழுதறது இல்லை... ம்?''

கேள்வியின் அர்த்தம் புரிந்து தலைகுனிந் தான்.

''திருந்திட்டேன்க்கா. இப்பல்லாம் எடுக் கிறது இல்லே.''

''நிஜந்தானா?''

''சத்தியமா...!''

''எப்படி நம்பறது?''

''உம்மேல ஆணை. போதுமா?''

''என் தலையிலேயே கை வச்சுட்டியா? பிரியமானவங்க மேல பொய் சத்தியம் பண் ணினா அவங்களுக்கு ஏதாச்சும் ஆகும் தெரியுமா?''

''நான் பொய் சொல்லலே...''

''எனக்கென்னமோ நம்பிக்கை இல் லேடா...'' இந்த நேரத்தில் செயற்கையாக ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண் டாள்.

''உனக்கு நம்பிக்கை வர நான் என்ன செய்யணும்?''

''அஞ்சு ரூபாய் கொடுக்கணும்...''

''குடுத்துட்டாப் போவுது...''

அவனும் ஏதோ கேலிப் பேச்சாக நினைத்துச் சிரித்தான்.

சிவகாமிக்கு மேலும் பேச்சை எப்படி வளர்ப்பது என்று தெரியவில்லை. 'கடவுளே... இவனுக்கு நல்ல புத்தியைக் குடு' எனக் கண்களை மூடிக் கொண்டாள்.

மனத்தின் இறுக்கம் சற்றுத் தளர்ந்தது.

சமையல் முடிந்து விட்டது.

கூடைக்காரி வந்ததும் புருஷனுக்கு கேரியரில் சாப்பாடு கொடுத்தனுப்பினாள். சதீஷுக்கு ஒரு கிண்ணத்தில் போட்டுக் கொண்டு ஸ்கூலுக்குக் கிளம்பினாள். யு.கே.ஜி படிக்கிற பையனுக்கு இன்னும் ஊட்டி விட வேண்டும்!

''சந்துரு...: வீட்டைப் பார்த்துக்க... நான் ஸ்கூலுக்குப் போயிட்டு வந்துடறேன்.''

''எவ்ளோ நேரமாகும்...?''

''இப்ப வந்துருவேன்டா...''

''நான் மேட்னி போகணும்க்கா...''

'சட்'டென்று அவளுக்கு மீண்டும் சந் தேகம் வந்தது. அப்பா பஸ் செலவுகளுக்கு அளவாகத்தான் பணம் கொடுத்திருப்பார். சினிமாவுக்கு ஏது காசு?''.

''பொறு. நான் வந்ததும் சாப்பிட்டுட்டுப் போகலாம்...''

அவனைத் திரும்பிப் பார்க்காமல் விடுவிடு வென்று நடந்தாள்.

அன்றைக்கு ஸ்கூல் அரை நாள் லீவு. முதலிலேயே தெரிந்திருந்தால் ஒரு 'நடை மிச்சம் ஆகியிருக்கும். சதீஷ் வாசலிலேயே

அவர்: ''பஸ்ஸில் என் பணத்தை பிக்—பாக்கெட் அடித்தவனைப் பிடிச்சுக் கிட்டு வந்து உங்ககிட்டே ஒப்படைத் தேன். நீங்க சகல மரியாதையோட அவனை வெளியில் போகச் சொல்லு றீங்களே! நியாயமா?''

இன்ஸ்பெக்டர்: ''யோவ்! சும்மா இருய்யா! அவர் யாரு தெரியுமா? மாநில பிக் — பாக்கெட் சங்கத் தலை வர்!''

— மணியன் தர்மலிங்கம்



நின்று கொண்டிருந்தான்.

''வா சதீஷ்... போகலாம்.''

வெயில் சுள்ளென்று அடித்தது.

''இன்னிக்கு எங்க மிஸ் அடிச்சாங்க'' என்றான் சதீஷ்.

''ஏன்...?''

''பூபதியின் ரப்பரை எடுத்தேன். அதுக்கு!''

''அதை ஏன் எடுத்தே?''

''அவன் என் பென்சிலை எடுத்தான்...''

''அதுவும் தப்புத்தான். அடுத்தவன் பொருளைக் கேட்காம எடுக்கக் கூடாது.''

''மிஸ் அவனையும் அடிச்சாங்க...''

அடித்தது அவனுக்குப் பெரியதாகத் தோன்றவில்லை. தாய், தகப்பனை விட மூன்றுவது மனிதர்களுக்குத்தான் குழந்தைகள் அதிகம் பயப்படுகின்றனர். பயம் தெளிகிற வயதுக்குள் நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொடுத்து விட வேண்டும். அப்புறம் சந்துருவைப் போல வளர்ந்து விட்டால் கோடரி போட்டாலும் வெட்ட முடியாது.

சந்துரு... சந்துரு...

மனத்துக்குள் முள் குத்துவதைப் போல இருந்தது.

அவனும் ரப்பர், பென்சிலில்தான் முதலில் ஆரம்பித்திருப்பானோ? எல்லாக் குழந்தைகளுக்கும் இயல்பான விஷயங்கள், ஒரு சில குழந்தைகளிடம் மட்டும் ஆழமாகப் படிந்து விடுகின்றன. இது இயற்கையாகக் கூட இருக்கலாம். எல்லாம் அவரவர் விதிப்படிதான் நடக்கிறது. ஓர் இருட்டு வீட்டில் இருந்து கொண்டு நீ கவலைப்படுவதனால் மட்டும் ஒன்றும் மாறி விடாது. மனத்தைத் தளர்த்து. சுவாசத்தை எளிதாக்கு. நடப்பது நடக்கட்டும்.

''**என்னக்கா... சதீஷுக்கு லீவா...?''**

சுமதி வாசலில் நின்று கொண்டிருந்தாள். சத்தம் நான்கு வீடு தள்ளிக் கேட்டது. நின்ற தோரணை, பேச்சு, கேள்வி....

என்ன ஆயிற்று இவளுக்கு? இரண்டு நாட்களாய்த் தான் அறிந்த சுமதியாக இல்லை.


ஏதோ பொறி தட்டத் திரும்பிப் பார்த்தாள்.

ஜன்னலில் சந்துரு. அவளைக் கண்டதும் தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டான்.

''நான் அப்பவே நினைச்சேன்க்கா. என்னவோ பண்டிகைன்னு ரேடியோவுல சொன்னானேன்னு...''

சிவகாமி காதில் விழுந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. விடுவிடுவென்று நடந்தாள். அவளது நடைக்கு சதீஷ் ஓடிவர வேண்டியிருந்தது. உள்ளே வந்ததும் கதவை அறைந்து சாத்தினாள்.

தன் மீதே கோபம் வந்தது. யார் இவர்கள்? எதற்காக இவர்களை மண்டையில் ஏற்றி, தன் மன அமைதியை இழக்க வேண்டும்? நடுத்தெருவில் பேசக் கூடாது என்று சொன்னால் சுமதி என்ன செய்து விடுவாள்? ஊருக்குப் போ எனச் சந்துருவை விரட்டினால் முடியாது எனக் கூற முடியுமா?



''உடுத்தி பழசாப் போன சேலைகளை வேலைக்காரிக்குக் கொடுக்கிற பழக்கம் வெச்சுக்கிட்டது தப்பாப் போச்சு.''

''ஏன்... இப்போ என்ன ஆச்சு?''

''நான் எனக்கு சேலை எடுக்க கடைக்குக் கிளம்பினா, டிஸைன் செலக்ட் பண்ண தானும் கூட வருவேன்னு சொல்லுது...!''

— நித்யா

ரொம்பவும் சின்ன விஷயம். தன்னால் ஏன் செய்ய முடியவில்லை? திடீரென ஆவேசம் வந்தது. ''சந்துரு...'' எனக் கூப்பிட்டாள்.

''என்னக்கா?''

''காலையில் சொன்னேனே பணம் காணோம்னு... என்னாச்சு?''

''என்னைக் கேட்டா?'' அவனுக்குப் புரியவில்லை.

''நீதான் எடுத்தே.''

''இல்லை... நான் அந்தப் பழக்கத்தை எப்பவோ விட்டுட்டேன்...''

''பொய் சொல்லாதே. என்னால நிரூபிக்க முடியும்...''

''தாராளமாச் செய்...''

ஓரடி முன்னால் வந்தான்.

''சினிமாவுக்கு ஏதுடா காசு?'' — சடக்கென்று எட்டி அவனது சட்டையைப் பிடித்தாள். திமிரத் திமிரப் பாக்கெட்டில் கைவிட்டாள். கண் இமைக்கும் நேரத்தில் உள்ளே இருந்ததை வழித்து, உள்ளங்கையில் விரித்தாள். இரண்டு ரூபாயும், சில்லறையும், சுமதியின் சிறிய போட்டோவும்...

நெஞ்சு 'திக்'கிட்டது...

''இது எப்படி உன் பாக்கெட்டுக்கு வந்திச்சு?'' —போட்டோவை மட்டும் தனியாக எடுத்துக் காட்டிக் கேட்டாள்.

''அது வந்து... நான்... இல்லை, அது... அவள்...''

அவளை யாரோ பள்ளத்தில் இறக்கினார்கள். 'பச்'சென்று நெற்றியில் அடித்தார்கள். 'குப்'பென்ற இருள் சிறையில் அடைத்தார்கள்.

அந்த நிலையிலும் அவளுக்குச் சில விஷயங்கள் புரிந்தன.

சந்துரு அக்காளைத் தேடி மட்டும் வரவில்லை —

சுமதியின் சந்தோஷம் இந்த இரண்டு நாட்களாக மட்டும் இல்லை —

அப்பா கடிதத்தில் குறிப்பிடுவது இல்லை என்பதால், சந்துரு தனது காசு திருடும் புத்தியை விட்டு விட்டான். பதிலுக்கு...

ஒரே சமயத்தில் காலையில் தொலைந்து போன பணத்திற்காகவும், எதிர்கால சதீஷைப் பற்றியும் பயந்து கவலைப்பட ஆரம்பித்தாள் அவள்.



கையிருப்பு உள்ள வரையே !

என் போதாத வேளை! நான் ஏதோ டேப்பைப் போட்டபோதுமே அந்த டூ—இன்—ஒன்னுக்குச் சண்டித்தனம் பண்ணும் ஆசை வந்துவிட்டது! அது கமலாவின் டேப் ரிகார்டர். எனக்கு எத்தனை டூ—இன்—ஒன் (வசவும் திட்டும் சேர்ந்த சாபம்!) விழுமோ என்று பயந்தேன். ஏழு கொலை செய்து விட்டது போல் குற்ற உணர்வு ஏற்பட்டது.

நல்ல காலம், அந்தச் சமயம் கமலா வீட்டில் இல்லை. நவராத்திரி கொலுவிற்கு யாரோ அழைத்திருந்தார்கள். அதற்காகப் போயிருந்தாள்.

''என்ன டேப் ரிகார்டரைக் கெடுத்துட்டீங்களா? உங்க பரம்பரையிலே எது தொட்டாலும் சரி, நாசம்தான்.... என் டேப் ரிகார்டரைப் பாழ் பண்ணினால்தான் உங்களுக்குத் திருப்தி. நவராத்திரி முடியற வரைக்கும் தொடாமல் இருந்தால் என்னவாம்? தினமும் தேவி ஸ்லோகம் போட்டுண்டிருந்தேன்'' என்று கமலாவின் அசரீரி குரல் என்னைத் திட்டியது.

அவசரம் அவசரமாக ரிப்பேர் பண்ணிக் கொண்டு வருவதற்குத் தெருக் கோடியில் இருந்த ரேடியோ ரிப்பேர் கடைக்குச் சென்றேன்.

நாலடிக்கு ஆறடிக் கடையின் மேல் ''சகல விதமான கம்ப்யூட்டர், டீ.வி., வி.சி.ஆர்., டேப் ரிகார்டர்கள் ஜப்பானில் பயிற்சி பெற்ற நிபுணர்களால் பழுது பார்க்கப்படும்'' என்று போர்டு போடப்பட்டிருந்தது. அங்கு போய் டூ—இன்—ஒன் செட்டைக் காட்டினேன்.

''என்ன சார்... என்ன விஷயம்?''

''ரிப்பேர்...''

''ரிப்பேர் ஆயிடவேதான் கொண்டாந்திருக்கீங்க. நல்லா இருந்திச்சின்னு நம்பளையெல்லாம் கவனிப்பீங்களா?'' என்றார். இதற்கு என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

''பாடிக்கிட்டே இருந்தது. சட்டுன்னு நின்னு போயிடுச்சு... எப்படிப்பா திடீர்னு கெட்டுப் போகும்?''

''ஆறுனப்பட்ட மனுஷனே பேசிக்கிட்டே இருக்கான். அடுத்த நிமிட் அவுட்டாயிடறான்... இது மெஷினுச்சே... வள்ளலார் சொல்லியிருக்காரு...''

வாழ்க்கை, பிறப்பு, மரணம், நிலையாமை இவைகளைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்த ஆரம்பிக்க விடாமல், ''போகட்டும், கொஞ்சம் அவசரமாகச் சரி செய்து கொடுக்கணும். நவராத்திரி பூஜைக்காகத் தினமும் சுலோகம் போடறாங்க வீட்டிலே...'' என்றேன்.

''சார்... அது என்ன...?'' என்று கடை ஷெல்ஃபிலிருந்து ரேடியோவைக் காட்டிக் கேட்டார்.

''ரேடியோ!''

''அது எப்ப வந்தது தெரியுமா?'' வினாடி வினா மாதிரி கேள்வி கேட்கிறாரே என்று எண்ணிக் கொண்டு, ''தெரியாது... ஏன்? 2, 3 நாள் ஆச்சா?'' என்று கேட்டேன்.

''நாளா? மாசம்னு சொல்லுங்க... அல்லாரும் ஒபயோகமத்த ஜப்பான் செட்டை வாங்கிட்றாங்க. அப்பப்ப ரிப்பேராவுது. நமக்கு எங்கே சார் டயம்? முடிஞ்ச வரைக்கும் சீக்கிரமா செய்து தர்றேன்'' என்றார், ஏதோ ரேடியோ ரிப்பேர் செய்வது பெரிய சமூக சேவை செய்வது போல் நினைத்துக்

ஒரு சோகக் கதை



கடுகு

கொண்டு!

''இல்லேப்பா... கொஞ்சம் அவசரம். இப்பவே பார்த்துட்டா நல்லது. பணம் வேணும்னு மேலே கொடுத்துடறேன்...'' என்றேன்.

''பணம் இன்னு சார்... பணம்? நான் பார்க்காத பணமா? மண்ணடியில் இரண்டு மாடி வீடு இருந்தது. போச்சு எல்லாம். குதிரையில் கட்டினு என்னவும்? உன்னே யார் ரேசுக்குப் போவச் சொன்னுங்க? இப்போ அவஸ்தைப்படு'' என்று என்னைக் குற்றம் சாட்டுவது போல் தன்னையே சாடிக் கொண்டார்!

''சரி... இப்படிக் கொடு சார்... என்ன ட்ரபிள் சொன்னே...?''

''டேப் பாடிக்கிட்டே இருந்தது. திடீர்னு...''

தேன் கொட்டியவரைப் போல், ''டேப்புங்களா?'' அதை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா? நான் ரேடியோ ரிப்பேர் தான் செய்வேன்... டேப்பெல்லாம் பழக்கமில்லேங்க'' என்று உதட்டைப் பிதுக்கிவிட்டு பீடியைப் பற்ற வைக்க ஆரம்பித்தார், 'ஜப்பானில் பயிற்சி பெற்ற நிபுணர்'

அடையாறு மார்க்கெட்டில் வேறு ஒரு ரிப்பேரரிடம் போனேன். சொன்னேன்.

''அடப்பாவமே... உங்க பேட்டையிலேயே இருக்கிற கஜபதியிடமே காண்பிச்சிருக்கலாமே...!''

''அவர் ரேடியோ தான் ரிப்பேர் செய்வாராம்.''

''இது மட்டும் என்னவாம்? டேப்பாக இருந்தாலும் ரேடியோ சர்க்யூட் மூலமாகத் தானே பாடுதுங்க... அவர் கிட்டேயே கொடுங்க!''

''ஏன்? உங்களுக்கு இதை ரிப்பேர் செய்ய வராதா?''

''வரும் சார். கையிலே ஒரு வி. சி. ஆர். இருக்குது...''

''ரேட் வேண்டுமானால் எக்ஸ்ட்ரா தர்றேன்.''

''நானூறு ரூபாய் தருவியா?''

''அதுக்கு ஒரு டேப் ரிகார்டரே வாங்கிடலாம்... சரி... சரி... உங்களுக்கு டேப் ரிகார்டர் ரிப்பேர் செய்து பழக்கம் இல்லே...''

''அதென்ன பழக்கம், கிழக்கம்...? கையை வெச்சா அரை அவர்லே மக் பண்ணிடுவேன்.''

''பாவம் வி. சி. ஆர். இருக்குது. உங்களுக்கு டயமும் இல்லே.''

''அதென்ன சார் டயம், கியம்? நமக்கு டயம் அடிமையா? அதுக்கு நாம்ப அடிமையா? சவால்னு வந்தால் கோவிந்தன் கிட்டே பேசிக்கிட முடியாது.''

நானும் கோவிந்தன் கிட்டே 'பேசிக் காமல்' செட்டைக் கொடுத்ததும் விருப்புடன் அதன்மேல் பாய்ந்து, கழற்றி மாட்டி, பற்ற வைத்து (இடைஇடையே தன் வாயில் பீடியையும்!) போட்டு மூடி டேப்பைப் போட்டார். அபாரமாகப் பாடியது.

''சபாஷ்... என்ன கொடுக்கட்டும்?''

''கொடுங்களேன் உங்க இஷ்டம். ஒரு சவாலுக்காகத்தான் செய்யறேன். பணத்துக்கு இல்லே'' என்றார்.

இருபத்தைந்து ரூபாய் கொடுத்தேன். நெருப்பைத் தொட்டது போல் துள்ளிக் குதித்து, ''இன்னு சார் இது... ஒரு நடை பெங்களூர் போய் வந்தால் நூறு ரூபா ஆவுது!'' என்றார்.

பெங்களூர் போய் வரும் செலவைப் பற்றித் தொடர்பில்லாமல் கூற வேண்டிய அவசியமென்ன என்று நான் கேட்கவில்லை. (அவருக்கு பெங்களூரில் சின்னவீடு இருக்கலாம்!)

ஒரு மாதிரி ஐம்பது ரூபாய் கொடுத்து விட்டு, செட்டுடன் வீட்டுக்கு வந்தால் — உள்ளே ஜம்மென்று டேப் ரிகார்டரில் 'அயிகிரி நந்தினி' பாடிக் கொண்டிருக்கும் ஓசை கேட்டது!

''என்ன கமலா... ஏது டேப் ரிகார்டர் உள்ளே பாடறது?''

''ஏன், நம்ப டேப் ரிகார்டர்தான்...''

''இல்லே... டேப்பைப் போட்ட போது இது தகராறு பண்ணித்து. நம்ப டு—இன்—ஒன் தான் கெட்டுப் போச்சுன்னு...''

''அடேடே... இது எங்க 'வெட்னஸ்டே கிளப்' விசாலம் மாமியோட ரிகார்டர். கொஞ்சம் ட்ரபிள் கொடுக்கறதுன்னு சொன்னு... யாரோ — ரிப்பேர்க்காரர் ஐந்து ரூபாய் ஆகும், சரிப் பண்ணிக் கொடுக்கறேன்னு சொன்னாராம்... போகிற வழியிலே நேற்று இங்கே வந்தாள்... மறந்து வெச்சுட்டுப் போய்ட்டா... ஆமாம்... அதை எடுத்துண்டு போனீங்களா? எங்கே போனீங்க?''

''போனேனு... ரிப்பேர் பண்ணிண்டு வந்திருக்கேன், கமலா!''

''நல்ல காரியம் பண்ணினீங்க... எவ்வளவு சார்ஜு ஆச்சு?''

''அஞ்சு ரூபாய்'' என்றேன், விசாலம் மாமியை மனத்திற்குள் சபித்துக் கொண்டே!


அவன்: மானேஜரும் லேடி ஸ்டெனோவும் ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கிறாங்க போல் இருக்குன்னு சந்தேகப் பட்டோமே! நாம் சந்தேகப்பட்டது எப்படியோ, மானேஜருக்குத் தெரிஞ்சு போச்சுடா!

இவன்: ஐய்யயோ! அப்புறம் என்ன ஆச்சு?

அவன்: நேத்து என்னைக் கூப்பிட்டு வீண் சந்தேகம் வேண்டாம். நிஜமாலுமே நாங்க காதலிக்கிறோம்னு சொல்லி அனுப்பினார்!

— மீனம் தனுசு





மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine
ACIL/009/86-Tam

ஜோதிடப்

கண்டிருக்க

கனவ

கனவுகளையும் பலன்

நடப்புகளையும் பார்


இம்மாதிரி கனவுகளை



ஊர்ந்து பிரயாசையோடு பர்வதத்தின் மீது ஏறி உச்சியை அடைந்துவிட்டது போல் கனவு கண்டால் உங்களுக்கு நேரவிருந்த பேராபத்திலிருந்து விலகி, சொற்ப ஆபத்து உண்டாகி, கஷ்டங்கள் ஏற்பட்டு, பிறகு விலகி விடும்.




நீரினால் வாயைக் கொப்புளித்து உமிழ் வதுபோல் கனவு கண்டால் உங்களுக்கு வர விருந்த ஆபத்து குறையும். நோயாளியாக இருந்தால் நோய் நீங்கும். மற்றவர்களுக்கு நன்மை ஏற்படும்.



நல்ல பாம்பு சீறிக் கொண்டு, உங்களை நோக்கிக் கடிக்க வருவதாகக் கனவு கண் டால் உங்கள் கஷ்டங்கள், விலக இன்னும் சில காலம் ஆகும் என்றறிக.

பூக்கள் பூத்துக்குலுங்கும் நித்தியகல்யாணி செடியைக் கனவில் கண்டால் நீங்கள் போட்டுள்ள திட்டம் எதுவானாலும் நல்ல முறையிலே நிறைவேறி எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும்.



பலிக்க... வேண்டிய கள்!

ரயும் கவனித்து, நாட்டு
ம்போது இவர்கள்
த்தான் கண்டிருக்கவேண்டும்!



உங்களை ஒரு குளவி கொட்டிவிட்டதாகக் கனவு கண்டால் உங்களுக்கு எதிர்பாராத வகையில் விபத்து ஏற்படும்.



வெளவாலைக் கனவில் கண்டால் நீங்கள் ஆரம்பிக்கும் எந்தக் காரியத்திலும் வெற்றியே ஏற்படும். உத்தியோக உயர்வு உண்டாகும்.



கிணற்றில் விழுவது போலக் கனவு கண்டால் நீங்கள் இதுவரை அனுபவித்து வந்த கஷ்டங்கள் தீரும். வாழ்வில் சுபிட்சமும் குடும்பத்தில் மகிழ்ச்சியும் வந்து சேரும்!

ஓர் அன்னியப் பெண்ணைக் கைப்பிடித்து இழுப்பதுபோல் கனவு கண்டால் உங்களுக்கு ஒரு பெண்ணால் விரைவில், அவமானம் உண்டாகும்.



ஆதாரம்: முருகு. இராசேந்திரன் எழுதிய "கனவுகளும் பலன்களும்"

"டக்,டக்... டக்,டக்."

காலணிகளின் சீரான ஒலி. மானேஜிங் டைரக்டர் பாஸ்கர் வந்துவிட்டார். வரவேற்பு அறையில் காத்திருந்த பத்துப் பேரும் எழுந்து நின்றார்கள்.

எல்லோருக்கும் பொதுவாக ஒரு "குட் மார்னிங்" கூறிவிட்டு மானேஜிங் டைரக்டர் உள்ளே நுழைந்தார்.

மானேஜிங் டைரக்டரின் பி. ஏ. தன் குறிப்புப் புத்தகத்துடன் உள்ளே நுழைந்தாள்.

"குட் மார்னிங் ஸார்!" என்றாள் அவள்.

"குட் மார்னிங், ரேகா... யூ லுக் வெரி சார்மிங் டுடே!" என்றார் பாஸ்கரன்.

பெரிய பதவி வகித்தாலும் — அவர் பாஸ்கரன் — வயதில் சிறியவன்தான் — இன்னும் முப்பதைத் தாண்டவில்லை. இயற்கையாக அமைந்திருந்த திறமை, படித்த படிப்பு, கிடைத்த வாய்ப்புகள் அவனை இந்த நிலைக்கு — இந்தப் பெரிய பதவிக்கு உயர்த்தி விட்டன.

பாஸ்கரன் , எப்போதுமே கடந்து போனதை நினைத்துப் பார்ப்பதில்லை. அடுத்து ஆக வேண்டியது என்ன என்பதே அவன் யோசனையாக இருக்கும். ஆனால் அன்று காலை, பழைய நினைவுகளை அசை போடும் ஒரு நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டிருந்தான்.

ரேகா தன் தொண்டையைச் செருமி, அவனை இந்த உலகத்திற்கு இழுத்து வந்தாள்.

"ஓ, ஐ ஆம் ஸாரி... உன்னைக் காக்க வைத்து விட்டேன்... ஏதானும் முக்கியமா சொல்லணுமா...?"

"எஸ், ஸார்... நம்முடைய திருச்சி கிளைக்கு ஒரு மானேஜர் போட வேண்டும். 'பர்ஸானல்' டிபார்ட்மெண்ட் பத்துப் பேரைச் சிபாரிசு செய்திருக்கிறது. அவர்களில் ஒருவரை நீங்கள் தேர்வு செய்து அனுப்புவதாகக் கூறி எல்லோரையும் வரச் சொல்லியிருக்கிறோம்... அவர்கள் காத்திருக்கிறார்கள்!" என்றாள் உச்சரிப்புப் பிசகாத ஆங்கிலத்தில்.

அவள் இதை ஞாபகப்படுத்தத் தேவையே இல்லை. இந்தப் பிரச்னைதான் காலையிலிருந்து அவன் நெஞ்சை அரித்துக் கொண்டிருந்தது.

முதல் நாள் மாலை, பர்ஸானல் டிபார்ட்மெண்ட் சிபாரிசு செய்த பத்துப் பேர் பற்றிய விவரங்களையும் பாஸ்கரன் ஒப்பிட்டுப் பார்த்தான். எல்லா விதங்களிலும் தகுதி பெற்று முன்னணியில் இருப்பவன் சந்திரமௌலி. காலேஜில் முதல். அவர்கள் வைத்த பரீட்சையில் முதல். தேர்வுக் கமிட்டி முதலிடமாகச் சிபாரிசு செய்திருப்பதும் இவனைத்தான்.

பையனின் புகைப்படம் விண்ணப்பத்தானுடன் இருந்தது. நல்ல கம்பீரமான தோற்றம். கண்களில் விஷமம் இல்லை. மீண்டும் உற்றுப் பார்த்த பாஸ்கரனுக்கு ஒரு சந்தேகம். இந்த முகத்தை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருக்கிறான்! பையனின் விலாசத்தைப் பார்த்ததும் புரிந்தது.

பையன் அவன் சொந்த அத்தை மகன். ஏழு, எட்டு வயதில் பார்த்திருக்கிறான். அவன் முகம் இறுகியது. பழைய நினைவுகள் நெஞ்சில் அலைமோதின.

பாஸ்கரனுக்கு அப்போது வயது பதினைந்து.

எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதிவிட்டு ரிசல்ட்டுக்காகக் காத்திருந்த சமயம் —

அவனுடைய அப்பாவும் அம்மாவும், அவனைத் தனியாக வீட்டுக்குக் காவல் வைத்துவிட்டு — ஒரு டூரிஸ்ட் பஸ்ஸில் — புண்ணியஸ்தலங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் புறப்பட்டுப் போனார்கள்.



ஏழாம் நாள் காலை அந்தச் செய்தி அவனுக்குக் கிடைத்தது. அந்த பஸ் ஒரு லாரியுடன் மோதித் தீப்பிடித்து, அவன் அப்பா பஸ்ஸினுள்ளே அவன் கைக்கொள்ளிக்குக் காத்திராமல் பஸ்மமாகப் போனார். அம்மா மட்டும் சொற்பக் காயங்களுடன் தப்பினாள்.


அவன் அம்மா பிரமை பிடித்தவள் போல் இருந்தாள். தன் எதிரே தன் புருஷன் உயிருடன் எரிந்து போனதைப் பார்த்த அதிர்ச்சியிலிருந்து மீளவே இல்லை.

அடுத்த வேளை சாப்பாட்டிற்கு என்ன செய்வது என்று புரியாத நிலைமை. முதல் தேதி வீட்டு வாடகை எப்படிக் கொடுப்பது என்ற பிரச்னை. இந்த இரண்டு ஜீவன்களுக்கு அடைக்கலம் தர, யாரும் முன் வரவில்லை. புகலிடம் எது எனப் புரியவும் இல்லை.

பதின்மூன்று நாள் காரியங்களும் பணக்கார அத்தையின் தயவில் முடிந்தன.

அத்தையின் கணவர் பாஸ்கரனைக் கூப்பிட்டார். "இந்தப் பத்து நாள் காரியங்களுக்காகக் கிட்டத்தட்ட மூவாயிரத்துக்கு மேலேயே செலவழிந்து விட்டது... பாவம்! உன்னைக் கேட்டால் நீ எங்கிருந்து கொடுக்க முடியும்? அது என் செலவாகவே இருந்துவிட்டுப் போகட்டும்! அப்புறம் நீ என்ன செய்கிறாய்? உன் அம்மாவை ஏதாவது ஓர் அநாதை விடுதியில் சேர்த்துவிடு! நான் விலாசம் தருகிறேன்! உன் அப்பா வேலை

உயர்வு எங்கே?



பார்த்த மண்டியில் உன்னை எடுபிடி வேலைக்கு எடுத்துக் கொள்வதாகக் கூறியிருக்கிறார்கள். பெரிய மனம் அவர்களுக்கு... உன் ஒருவன் வயிற்றைக் கழுவ அது போதும்...'' என்றார்.

பக்கத்தில் அத்தை வைரக் கம்மல்கள் மின்ன, துளிர் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவித் தடவி வாய்க்குள் திணித்துக் கொண்டிருந்தாள். அத்தனை பூர்வீக சொத்தையும் விற்று, தனக்கென்று வைத்துக் கொள்ளாமல், தன்னைப் பற்றியே நினைக்காமல், அவளைப் பெரிய இடத்தில் வாழ வைத்த அண்ணனுக்குச் செய்யக் கூடிய கைமாறு இந்த அசாதாரணமான மௌனம் தான்!

பாஸ்கரன் நொறுங்கிப் போனான். அவன் எதிர்காலத்தைப் பற்றி அவன் கட்டியிருந்த கோட்டைகள் என்ன? இப்போது நடப்பது என்ன?

சொந்தக்காரர்களைப் போல் வீட்டுக்காரர்கள் அத்தனை ஈரமற்றவர்களாக இல்லை. இரண்டு மாதங்கள் வாடகை இல்லாமல் இருக்க அனுமதித்தார்கள். மங்களம் அநாதை ஆசிரமம் போகவில்லை. யார் சிபாரிசிலோ, மகளிர் விடுதியில் சமையல் வேலை கிடைத்தது.

உழைப்பிற்கு அஞ்சாத மங்களம் அப்பளம் வடாம், சமையல் பொடிகள் தரமாகத் தயாரிக்க ஆரம்பித்தாள். மகளிர் விடுதியில் தங்கிய பெண் ஒருத்தி மங்களம் சொல்லச் சொல்லக் குறிப்பெடுத்து ஒரு சமையல் கலை புத்தகம் வெளியிட ஏற்பாடு செய்தாள். பத்திரிகைகளில் நல்லபடியாக விமர்சித்ததால் புத்தக விற்பனை திருப்தியாக இருந்தது. இரண்டே வருஷங்களில் மங்களம் உயர்ந்து விட்டாள்.

பாஸ்கரன் பெங்களூரில் மேல் படிப்பு படித்தான். பின்னர் அகமதாபாத்தில் எம்.பி.ஏ., படிப்பு முடிவதற்குள் வேலை வாய்ப்பு வரவேற்றது. வேலைக்குச் சேர்ந்த நான்காவது வருடம், கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக உயர்த்தப்பட்டு விட்டான்.

ஆனால் அவனுக்கு அத்தையின் பேரில் ஏற்பட்ட வெறுப்பைக் கால ஓட்டத்தால் அழிக்க முடியவில்லை. மங்களம் பழைய சம்பவம் பற்றி எது கூறினாலும் 'சள்' ளென்று விழுந்தான்.

இப்போது அந்த அத்தை பிள்ளை இந்த வேலைக்கு விண்ணப்பித்து இருக்கிறான். எல்லாத் தகுதியும் இருக்கிறது. இந்த வேலையை அவனுக்குத் தரக் கூடாது. ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, நிராகரித்து விட வேண்டும்... நேற்றே அப்படி ஒரு முடிவு செய்து விட்டான்.

தன் தாயிடம் இதுபற்றி மூச்சு விடவில்லை பாஸ்கரன். அந்தப் பத்தாம் பசலிக்கு நல்லதைத் தவிர எதுவும் நினைக்க வராது. ஆனால் அவளாகப் பேச்செடுத்தாள்.

''உன் அத்தை இங்கு வந்திருந்தாள்!'' எனத் தொடங்கினாள்.

''கழுத்தைப் பிடித்துத் தள்ள வேண்டியது தானே!'' எனக் கர்ஜித்தான் பாஸ்கரன்.

''அப்படிச் செய்ய முடியுமா அப்பா? வீட்டுப் பெண். நான் வளர்த்துக் கல்யாணம் செய்து கொடுத்தவள்.''


''சரி... கூப்பிட்டுச் சீராட்டு... இப்போ என்ன வேண்டுமாம்? இருக்கோமா, செத்தோமான்னு பார்க்க வந்தாளாமா...?''

''அவள் ரொம்ப நொந்து போயிருக்காடா! உங்க அத்திம்பேரோட அப்பா போனப்புறம் சொத்து பிரிஞ்சப்போ ஏழு பிள்ளைகளுக்கிடையில பகிர்ந்துக்கிட்டதாலே, பெரிசா ஒண்ணும் கிடைக்கலே. இதுலே அத்தை இரண்டு பெண்களுக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருக்கிறாள்... இப்போ வெறும் தாலிக் கயிறும் கண்ணாடி வளையலுமா வந்து நிக்கறா!''

''எதுக்காகக் கஷ்டப்படணும்... அத்திம்பேர் கிட்டச் சொன்னா இவளையும் ஓர் அனாதை ஆசிரமத்திலே சேர்த்து விடுவாரே!'' என்றான் பாஸ்கரன் கேலியாக.

''அப்படியெல்லாம் பேசாதே பாஸு.... அவருக்குப் பாரிச வாயுவாம்... படுத்த படுக்கையாக இருக்கிறாராம். அவருடைய ஒரே பிள்ளை சம்பாதிப்பது எல்லாம் வைத்தியத்திற்குப் போய்விடுகிறது. இன்னும் ஒரு பெண் கல்யாணத்திற்கு நிற்கிறாள்.

''இத்தனை பீடிகை எதற்கு? இப்போ என்ன வேண்டுமாம்? ஏதாவது ஐம்பதோ, நூறோ கொடுத்து விரட்ட வேண்டியது



ஷூட்டிங்குக்கு வர ஹெலிகாப்டர்!

ஷூட்டிங்குக்கு ஸ்டுடியோவுக்கு வர, தயாரிப்பாளர்கள் சினிமா நட்சத்திரங்களுக்கு கார் அனுப்புவது வழக்கம். சமீபத்தில் 'அமிதாப்' ஊட்டியில் ஓர் இந்திப் பட ஷூட்டிங்கில் கலந்து கொண்ட போது, அவரது ஓட்டலிலிருந்து ஷூட்டிங் நடக்கும் இடத்துக்கு வருவதற்காக அவருக்கு ஒரு ஹெலிகாப்டரே ஏற்பாடு செய்துவிட்டார் தயாரிப்பாளர்!

— சம்பத்குமாரி

ஆதாரம்: காரவான்

தானே!''

''உனக்குக் கோபம் வர நியாயம் இருக்கு. இருந்தாலும் யாரையும் இப்படித் தூக்கி எறிஞ்சு பேசக் கூடாது. அவன் பிள்ளை உங்க சேலம் பிராஞ்சுலே கிளார்க்காயிருக்கானும். ஏதோ பரீட்சைகூடப் பாஸ் செய்து விட்டானும்... நீ மட்டும் மனம் வைத்தால்...''

பாஸ்கர் கோபமாக எழுந்தான். ''இப்போது நீ சொல்லிவிட்டாய் அல்லவா? நிச்சயம் இந்த வேலை அவனுக்குக் கிடையாது. அது மட்டும் இல்லை. இருக்கிற வேலையையும் பறிக்கப் போகிறேன். அவர்கள் நடுத் தெருவில் நிற்க வேண்டும். அடுத்த வேளைச் சோற்றுக்குப் பிச்சை எடுக்க வேண்டும்!

''பாஸ்!''

''நீ பேசாதே அம்மா! நான் ஏற்கெனவே தீர்மானித்த விஷயம்!'' என அவன் நகர்ந்து போனான்.

பாஸ்கரன் மீண்டும் அந்த விண்ணப் பத்தை எடுத்துச் சேகர் படத்தைப் பார்த்தான். ரேகா மட்டும் இல்லாவிட்டால் அந்தப் படத்தின்மேல் முஷ்டியால் குத்தியிருப்பான்.

''ப்ளீஸ் ரேகா... ஐந்து நிமிஷம் என்னை யோசிக்க விடு! பிறகு உன்னைக் கூப்பிடுகிறேன்'' என்றான்.

மறுபடியும் சேகரின் விண்ணப்பம்.... படித்த பள்ளி. இவன் படித்த அதே பள்ளிக் கூடம். நற்சான்றிதழ் கொடுத்த தலைமை ஆசிரியரை பாஸ்கரன் அறிவான்.

ஒரு நிமிடம் மனம் 'இளகட்டுமா' என்றது.

பாஸ்கர் தலையை வேகமாக ஆட்டிக் கொண்டான். 'நோ! எந்த மாதிரியான மென்மை உணர்வுகளுக்கும் இடம் தர மாட்டேன்!' என உறுதி செய்து கொண்டான்.

டெலிபோன் மணி அடித்தது. அம்மா தான்.

''பாஸ்! நான் ஊருக்குப் புறப்படலாம்னு தீர்மானிச்சுட்டேன்.''

''எங்கேம்மா, திடீரென்று?''

''உன் அத்தை வீட்டிற்குத்தான்.''

''என்ன, உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? போயும், போயும்?''

''எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்! உன் அப்பா உயிருடன் இருந்தால் தங்கை கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். அவர் இல்லாவிட்டால் என்ன? நான் இருக்கிறேனே.... என் கையும் காலும் நன்றாகத்தானே இருக்கின்றன. இன்னொரு தரம் அப்பளம் இட ஆரம்பித்தால் போகிறது.''

''அதற்கு இப்போது என்ன அவசரம்? சாயங்காலம் நான் வந்த பிறகு....''

''நல்லது செய்யத் தோன்றினால் உடனே செய்துவிட வேண்டும். மனம் ஒரு குரங்கு. மாறினாலும் மாறும். நீ யாரையாவது அனுப்பு. நான் சாவியைக் கொடுத்து அனுப்புகிறேன்.''

''நீ எங்கேயும் போகாதே. நான் இதோ வருகிறேன்!'' என்றான்.



''அந்தக் கடைக்கு ஜவுளி எடுக்கப் போகும் பெண்மணிகளின் கணவன்மார்களுக்கு இலவசமா....''

''என்ன தருவாங்களாம்?''

''படுத்துத் தூங்க பாய் தலையணை தர்றாங்களாம்!''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

டெலிபோனைக் கீழே வைத்து விட்டு ரேகாவை அழைத்தான்.

''உடனே நான் வெளியே போக வேண்டும். காத்திருப்பவர்களைப் பகல் இரண்டு மணிக்கு வரச் சொல்!'' என்றான்.

''ஒருவர் மட்டுமே உங்களை ஒரு நிமிஷம் பார்க்க விரும்புகிறார்!'' என்றாள் ரேகா.

''வரச் சொல்!'' என்றான் பாஸ்கர், சலிப்புடன்.

உள்ளே வந்தவன்.... சேகர்! இவனா? எதற்கு? தன்னைத் தேர்ந்தெடுக்கும்படி கேட்கப் போகிறானா? நோ!

''மன்னித்துக் கொள்ளுங்கள் ஸார்! நான்கு நாட்கள் முன்தான் நீங்கள்தான் என் மாமா பிள்ளை பாஸ்கர் எனத் தெரிய வந்தது. நான் என்ன சொல்லியும் கேட்காமல் என் அம்மா உங்கள் வீட்டிற்குச் சிபாரிசு தேடி வந்துவிட்டார்கள். உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது. நீங்கள் நேர்மையானவர், பண்பாளர் என்று கம்பெனியில் எல்லோரும் சொல்வார்கள். இந்த வேலையை நியாயமா எனக்குக் கொடுத்தாலும் உங்களைப் பற்றித் தப்பாகப் பேச இடம் இருக்கிறது. அந்தத் தர்மசங்கடமான நிலைக்கு நான் உங்களை உட்படுத்தமாட்டேன். இதைச் சொல்லிப் போகத்தான் வந்தேன். நான் வருகிறேன், ஸார்!''

அவன் போய்விட்டான்.

பதில் பேசத் தெரியாமல் திக்பிரமித்துப் போய் நின்றான் பாஸ்கரன்.


வீட்டிற்குப் போகும் வழியில் பாஸ்கரன் யோசித்து யோசித்துக் குழம்பிப் போனான்.

அம்மா மூட்டையும் முடிச்சுமாகக் காத்திருந்தாள்.

''நானே உன்னை அங்கே கொண்டு விடுகிறேன். நிரந்தரமாகத் தங்குவதற்கு அல்ல... உன் மருமகள் ஒருத்தி கல்யாண வயதில் இருப்பதாகச் சொன்னாயே.... அவர்கள் சம்மதித்தால் அவளை இந்த வீட்டு மருமகளாகக் கூட்டி வர.....'' என்றான் பாஸ்கர்.

தான் கேட்பதை நம்ப முடியாத ஆனந்தத்தில் அப்படியே உறைந்து போனாள் மங்களம்.


V.V.D
கற்பனைகள் பல சிறகடிக்க
இளமை ஊஞ்சலாடும் அழகி.
அவள் நெஞ்சைக் கவர்ந்தவை பல.
மெல்லத் தவழ்ந்து செல்லும் நீரோடை..
செல்லமாக வீசும் தென்றல்.
உள்ளம் கவர்ந்த கட்டழகன்.
சோலையின் அழகு மலர்கள்.
பளபளப்பான நீண்ட கூந்தல்
அக்கூந்தலுக்கு
வி.வி.டி. தேங்காய் எண்ணெய்...
VVD-9/86
V.V.D
COCONUT OIL
MICRO FILTERED PURE
MADE IN INDIA
வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்
V.V.D



இப்போது கிரிதான் பிரச்னை

மலர்வண்ணன்

சண்முக சுந்தரத்தின் சந்தோஷமான மனத்துக்குள் கொஞ்சம் துயரமும் பரவிக் கிடந்தது. நிறைய நிறைய யோசித்துக் கொண்டு இருந்தான்.

உஷாராணி ஒரு குதூகலமான குழந்தையைப் போல, அவனுக்கு அருகில் படுத்திருந்தாள். இதுவரை கிடைக்காத ஒரு சந்தோஷம் இப்போது கிடைத்து விட்டது என்ற நிம்மதி அவள் முகத்தில் தென்பட்டது.

''என்னங்க, திடீர்னு ஒரு மாதிரி ஆயிட்டீங்க? இதிலே உங்களுக்கு சந்தோஷம் இல்லையா?''

கட்டிலில் இடதுபுறமாய்ச் சாய்ந்து, அவளை நோக்கிப் பார்த்துப் படுத்திருந்த சண்முகசுந்தரம், ஒரு நீண்ட பெருமூச்சோடு மல்லாந்து படுத்தான். வலது கையைத் தூக்கி நெற்றியின் மீது போட்டுக் கொண்டான்.

உஷாராணி வேகமாக எழுந்து உட்கார்ந்

தாள். "என்னங்க இது?"

அவன் அவளை அமைதியாகப் பார்த்தான். குழம்பிய பார்வை. அது மெல்ல அவளை விட்டு விலகிக் கீழே செல்ல, அவள் அந்தப் பார்வையையே தொடர்ந்தாள்.

இரண்டு பேருக்கும் நடுவில் படுத்திருந்த கிரியின் முகத்தில் போய் நிலைத்தது, அவன் பார்வை.

கிரி, அந்த மூன்று வயதுக் குழந்தை, சகலத்தையும் மறந்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

நிர்மலமான முகம். பார்ப்பவரைச் சுண்டி இழுக்கும் துறுதுறுப்பு. புத்திசாலித்தனமான பேச்சு— இதுதான் கிரி!

உஷாராணி தன் உதடுகளை மெல்ல நெளிய விட்டுப் புன்னகைத்தபடியே, குனிந்து கிரியின் நெற்றியில் முத்தமிட்டாள்.

"பேசுங்க. எதையோ சொல்ல நினைக்கறீங்க. ஆனால் தயங்கறீங்க!"

சண்முகசுந்தரம் பேசினான். "உஷா. இ..இப்போ கிரிதான் நமது பிரச்னை. நமக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிற சந்தோஷத்தைக் குறைக்கிறதே இவன்தான்."

உஷாராணி திடுக்கிட்டாள். "என்ன சொல்றீங்க?"

"உஷா, கிரி யாரோ, நாம் யாரோ! நமக்குக் குழந்தையே இல்லை என்கிறதாலே அனாதையான இவனை எடுத்து வளர்த்தோம்."

"அப்படிச் சொல்லாதீங்க. இந்த அழகான குழந்தையை அப்படிச் சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வந்தது? இவனும் நம்ம குழந்தைதான்."

சண்முகசுந்தரம் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

"உஷா. நமக்கு ஏகப்பட்ட சொத்து இருக்கு. ஆரம்ப காலத்தில் நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டோம். ஆனால் இந்த மூணு வருஷத்திலே ஏகப்பட்ட லாபம். கார், பங்களா, எல்லாம் வந்தாச்சு. ஷேர் மார்க்கெட்லே அடிச்ச அடி லாட்டரி பிரைஸ்! நமக்குச் சொந்தமா ஒரு குழந்தை பிறக்கலே. அதுதான் ஒரே ஏக்கமாக இருந்தது. ஆனா இப்போ, நீ கர்ப்பமா இருக்கே! இனிமேல் இந்த கிரி அவசியம்தானா?"

"ஒரு போட்டோகிராபரைக் கல்யாணம் செய்துக்கிட்டது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"சின்ன விஷயத்தையெல்லாம் பெரிசா என்லார்ஜ் பண்றார்!"

— கதிர்வேல்



"இப்படிப் பேச உங்களுக்கு எப்படி மனம் வருது? என் வயிற்றில் பிறக்கலேதான். ஆனாலும் கிரி, நம்ம குழந்தைதாங்க."

"பைத்தியம் மாதிரி உளறாதே உஷா! நான் கஷ்டப்பட்டுச் சம்பாதிச்ச இத்தனை சொத்தும் எனக்குப் பின்னாடி என் குழந்தைக்குத்தான் போகணும். ஓர் அனாதைக்கு நான் ஏன் தரணும்?"

"......"

"கிரியை ஓர் அனாதை விடுதியில் சேர்த்திடப் போறேன்."

உஷாராணி எதுவும் பேசவில்லை. உட்கார்ந்தபடியே மெல்ல அழ ஆரம்பித்தாள்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு சண்முகசுந்தரமும் உஷாராணியும் சாப்பாட்டுக்கே அல்லாடியவர்கள்தான்.

கிராமத்தில் திருமணம் செய்து கொண்டு, வேலை தேடி நகரத்துக்கு வந்திருந்த சமயம்.

நான்கு ஆண்டுகளாகக் குழந்தை இல்லையே என்ற ஏக்கத்தோடு, இன்றைக்குச் சாப்பிட என்ன வழி என்ற சிக்கலும் சேர்ந்து கொண்டது அப்போது.

கிடைத்த சின்னச் சின்ன வேலைகளைச் செய்த சண்முகசுந்தரம் ஒரு ஸ்மால் பர்னிச்சர் கம்பெனியில் சேர்ந்தான். அன்று மாலைதான் ஒரு மாதக் குழந்தையான கிரியைக் கண்டான்.

அவனும் உஷாராணியும் கோயிலுக்குச் சென்று திரும்பிய போது, ஒரு வில்வ மரத்தின் அடியில் இருந்த பிள்ளையார் கோயில் மேடையில் அழாமல் கிடந்தது அந்தக் குழந்தை!

அக்கம்பக்கம் தேடிய போது, யாருமே கண்ணில் அகப்படவில்லை.

"என்னங்க, நமக்குத்தான் குழந்தையே இல்லையே. இதை நாமே வளர்க்கலாமா?" என்றாள் உஷாராணி.

சண்முகசுந்தரம் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான். இரண்டு பேரும் குழந்தையோடு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

கிரி என்று பெயர் வைத்துக் கொஞ்சினார்கள். அவனுடைய புத்திசாலித் தனத்தைச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

அந்தக் குழந்தையைத்தான் சண்முகசுந்தரம் இப்போது அனாதை விடுதியில் சேர்க்க நினைக்கிறான்.

"என்னங்க?"

"ம்!"

"நிஜமாகவேதான் சொல்றீங்களா?"

"ஆமாம்."

"வேண்டாங்க. நமக்கு ரெண்டு குழந்தைகள்னு நினைச்சுக்குவோம்."

"உஷா. நான் ஒரு முடிவுக்கு வந்தாச்சு. நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சொத்து, என் குழந்தைக்குத்தான் சேரணும். ஆயிரம்தான் பாசம் வைத்து வளர்த்தாலும் இவன் அனாதைதான். அதனாலே நாளைக்கே இவனைக் கொண்டு போய், அனாதை விடுதியில் சேர்த்திடப் போறேன்."

"வேண்டாங்க," உஷாராணி வெடித்தாள்.

''ம்ச்... இவன் வளர்ந்து பெரியவன் ஆன பிறகு சொத்தில் உரிமை கேட்பான். நம்ம மகனை ஏமாத்துவான். ஆட்டம் போடு வான். இவனுக்காகவா நான் சம்பாதிக் கிறேன்?''

''இது அநியாயமான கற்பனை.''

சண்முக சுந்தரம் பதில் பேசவில்லை. வேகமாக எழுந்து, கிரியை எடுத்து ஓர மாகப் படுக்க வைத்தான். உஷாராணியை நெருங்கி, அவளுடைய வயிற்றைத் தடவி னான்.

''அவனைப் பற்றிப் பேசியது போதும். இப்போது இவனைப் பற்றிப் பேசுவோம், என்ன?'' என்றான்.

உஷாராணி பேசவில்லை. இரண்டு பேரைப் பற்றியும்!

மறுநாள் பொழுது விடிந்ததும் சண்முக சுந்தரம் முதல் வேலையாக இதைத்தான் செய் தான்.

மேனேஜரைக் கூப்பிட்டு, ''இந்தக் குழந் தையை அனாதை விடுதியில் கொண்டு போய் விட்டுடுங்க!'' என்றான்.

மேனேஜர் திகைத்துப் போனார். ''சார்!''

''சொன்னபடி செய்யுங்க. உண்மையில் இவன் ஓர் அனாதைதானே? இனிமேல் இவன் இங்கே வேண்டாம். வருஷா வருஷம் நன் கொடை தருவோமே. அதே விடுதியில் கொண்டு போய் விட்டுடுங்க.''

''சரி, சார்.''

மேனேஜர், கிரியைத் தூக்கிக் கொண்டு போன போது கிரி தூங்கிக் கொண்டிருந் தான். கண் விழித்து, எப்படிக் கத்தப் போகி றானோ?

உஷாராணி அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள்.

சண்முக சுந்தரத்தின் மனத்தில் மட்டும் இப்போது பெரிய நிம்மதி. உஷாராணியை இப்போது பார்க்க வேண்டாம் என்ற நினை வோடு, வெளியே தோட்டத்துக்குள் சுற்றி னான்.

அழகான மலர்களும், கொடிகளும், சிறு மரங்களுமாய், அதிகாலை நேரத்துத் தோட்டம் அவனைப் புல்லரிக்க வைத்தது.

சுற்றிப் பார்த்தபடியே வீட்டின் பின்புற மாக வந்த போது, ஏதோ பேச்சுக் குரல் கேட்டது.

கவனம் அதிலேயே ஈடுபட, நின்று கவ னித்தான்.

சமையல்காரன் முருகையனும், வள்ளியும் பேசிக் கொண்டு இருந்தார்கள். குரலில் ரகசியம் நிறைந்திருந்தது.

''முதலாளிக்கு என்ன ஆச்சோ தெரி யலே. அந்தப் பச்சைக் குழந்தையை இப்படிப் பண்ணிட்டாரே?'' என்றாள் வள்ளி.

முருகையன் சிரித்தான். ''ஏம் புள்ளே. அது அனாதைக் குழந்தைதானே? இதுவரைக் கும் ஏதோ வளர்த்தாங்க. இப்போ அவங் களுக்குக் குழந்தை பிறக்கப் போகுது. அனாதைக் குழந்தையை இனிமேலும் வளர்க் கணுமா என்ன?''

''வளர்த்தால் என்ன? கடல் மாதிரி வீடு.

சொத்து சுகம் ஏராளம். அது ஒண்ணு தின்னுட்டுப் போகட்டுமே?''

''நம்ம முதலாளி கஷ்டப்பட்டுச் சம்பாதிச்ச சொத்து புள்ளே, இது! கண்டவன் தின்னுட்டுப் போறதுக்கு, வாரிசா இல்லாமல் போச்சு? இன்னும் கொஞ்ச நாள்லே தங்க விக்கிரகம் மாதிரி அம்மாவுக்குப் பையன் பிறக்கப் போறான். ஞாபகம் வச்சுக்க.''

''ஆமா... கிரி இல்லாமல்தான் இத்தனை சொத்தும் வந்துதா?''

''என்னடி உளர்றே?''

''நான் ஒண்ணும் உளறலே. நீ நல்லா ஞாபகம் வச்சுக்க, முதல்லே! மூணு வருஷத்துக்கு முன்னாடி நம்ம முதலாளி இப்படியா இருந்தார்? நமக்கு இருக்கிற வசதி கூடக் கிடையாது. ஆனால் கோயில்லே கிரி கிடைச்ச நேரம்... அவன் வந்து சேர்ந்த நேரம்... உங்க முதலாளி லட்சம் லட்சமாப் புரட்ட ஆரம்பிச்சார். எல்லாம் அவனோட அதிர்ஷ்டம். அவன் மட்டும் வராமல் போயிருந்தால், உங்க முதலாளி சோத்துக்கே டிங்கி அடித்திருப்பார், தெரிஞ்சுக்க.

முருகையனின் குரல் தாழ்ந்தது.

''அப்படியா சொல்றே நீ?''

''பின்னே?''

சண்முகசுந்தரம் மெல்லப் பின் வாங்கினான். மூளைக்குள் தேள் கொட்ட ஆரம்பித்திருந்தது.

'வள்ளி சொன்னதுதான் உண்மையோ?'

கிரி வந்த பிறகுதான், தனக்கு எல்லாக் காரியங்களும் ஆகி வந்ததை நினைத்துப் பார்த்தான். அதற்குமுன் ஆகாத காரியங்கள் எல்லாம் சொல்லி வைத்த மாதிரி நடந்தன.

'நாலு ரூபாயை எதிர்பார்த்துப் போன இடத்தில் ஆயிரம் ரூபாய் லாபம் கிடைத்ததே, அது கிரி வந்த அதிர்ஷ்டம்தானே!'

ச்சே, அதிர்ஷ்டமாவது, ஒன்றாவது. எல்லாம் நம்ம திறமை!'

'அப்படியும் நினைக்க முடியலியே?'

சண்முகசுந்தரம் யோசித்தபடியே வீட்டுக்குள் நுழைந்த போது ஹாலில் போன் ஒலித்துக் கொண்டிருந்தது

ரிசீவரை எடுத்தான். ''ஹலோ!''

எதிர்முனையில் பரபரப்பு. மில் மேனேஜர் வேகமாகப் பேசினார்.

''நம்ம வெஸ்ட் காட்டன் மில்லில் திடீர்னு ஸ்ட்ரைக் சார். தொழிலாளர்கள் யாரும் உள்ளே வரலே. வெளியே ஒரே கலாட்டா. நீங்க உடனே வர்றீங்க சார்.''


சண்முகசுந்தரம் அதிர்ந்தான். ''என்ன ஸ்ட்ரைக்கா?''

''ஆமாம் சார். என்ன பண்றது? எனக்கு ஒண்ணும் புரியலே!''

''போலீசுக்குத் தகவல் கொடுங்க. நான் உடனே வர்றேன்.''

சண்முகசுந்தரம் ரிசீவரை யோசனையோடு வைத்தான்.

சற்று முன் கேட்ட வள்ளியின் வார்த்தைகள் அவன் நினைவில் வந்து மீண்டும் மீண்டும் ஒலித்தன.



''உங்க கதையைப் படிச்சு அசந்துட்டேன்.''

''அப்படியா?''

''அட! கண் அசந்துட்டேன்னு சொல்ல வந்தேன்.''

— கீழை அ. கதிர்வேல்

'ஒருவேளை அதுதான் உண்மையோ? கிரி வீட்டை விட்டு வெளியே போன உடனே அசம்பாவிதம்! இந்த மாதிரி இதுவரை நடந்ததே இல்லே!'

ச்சே, இது என்ன மூட நம்பிக்கை! வாழ்க்கையில் இவையெல்லாம் சகஜம். அதிர்ஷ்டமாவது, துரதிர்ஷ்டமாவது.'

'வெளியே, இது என்ன, இன்னும் நிறையவே பேசலாம். ஆனால் மனம்?

சண்முகசுந்தரத்தின் மனம் குழம்பிப் போயிருந்தது. எல்லாம் சற்று நேரம்தான். கிரியை அழைத்து வந்துவிட வேண்டும் என்று முடிவு செய்து விட்டான்.

''அதிர்ஷ்டமாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி.''

சண்முகசுந்தரம் பாய்ந்து வெளியே ஓடினான். காரின் கதவை இழுத்துத் திறந்து, உள்ளே பரவி, இக்னிஷியன் காரைத் திருகி, சீறிப் பாயவிட்டான்.

அனாதைவிடுதியை இரண்டே நிமிஷத்தில் அடைந்தது கார். இந்த இரண்டு நிமிஷத்தில் 'கிரியே சகலமும்' என்ற நினைவில் இருந்தான் அவன்.

விடுதித் தலைவரிடம் விஷயத்தைச் சொன்ன போது, அவர் உதட்டைப் பிதுக்கினார்.

''உங்க மேனேஜர் கிரியைக் கொண்டு வந்த போது, சில வெளிநாட்டுக்காரங்க இங்கே இருந்தாங்க சார். அனாதைக் குழந்தையைத் தத்தெடுக்க வந்திருந்தாங்க. எதுவுமே பிடிக்காமல் யோசனையோடு இருந்தவங்க கிரியைப் பார்த்தவுடன் முகம் மலர்ந்தாங்க. கிரி உள்ளே கூட வரலே. அப்படியே வாங்கிக்கிட்டு போய்ட்டாங்க. ஆனால் குழந்தை பாவம் சார், ரொம்ப நேரம் அழுதுட்டே இருந்தான்.''

சண்முகசுந்தரம் கண் கலங்கினான்.

''இப்போ அவங்க...?''

''உடனடியாகச் சொந்த நாட்டுக்குப் போறதாகச் சொன்னாங்க. ஆனால் ஒரு மணி நேரம்தானே ஆச்சு. நீங்க வேணும்னா...''

''அட்ரஸ் இருக்கா?''

தலைவர் தலையைச் சொறிந்தார். ''அவங்க கனடாவைச் சேர்ந்தவங்க. அந்த அட்ரஸ் தான் இருக்கு!''

சண்முகசுந்தரம் எதுவுமே பேசாமல் திரும்பினான்.

அதன் பிறகு அவன் பேசவே இல்லை. 'கிரி' என்ற ஒரு சொல்லைத் தவிர!

"யோகாவ், கோபாலு இப்படிப் பண்ணிட்டானேய்யா, மனசே ரொம்பக் கனமா இருக்குது."

"சரி, ஜாலியா ஒரு சினிமா போகலாமா?"

"ஊர்ல ஏதுய்யா நல்ல படம்?"

"நல்ல படம்னு நான் சொன்னேன்? ஜாலிப் படம்னுதானே சொன்னேன் — ஆக்ரோஷம்னு ஒரு 'டப்பிங் படம் போலாம், வா."

"பாவம்மா சிரஞ்சீவி... அவங்கப்பா செய்யற அலட்சியத்தால ரொம்ப கோபக்காரரா மாறிட்டாரு... கெட்ட வழிக்கெல்லாம் போகுறாரு, பாரு.."

"பொம்மைக் கடைல சுஹாசினி செலக்ட் பண்ணின பொம்மைதான் தனக்கு வேணும்னு கலாட்டா பண்ணிக் கண்ணாடில்லாம் உடைக்கிறாரு இல்லே. இனிமே சீரியாப் போயிடும்."

"எப்படிய்யா ச ரி யா ப் போகும்?"

"அதெல்லாம்' சுஹாசினியம்மா கவனிச்சுப்பாங்க். கனவுல ஒரு டூயட் பாடிட்டு அப்புறம் நெஜத்தில ரெண்டு டூயட் பாடினா, வாத்தியார் நல்ல பையனா மாறிப் போயிடுவார், பாரு..."

"எங்கேய்யா, சிலுக்குதான் குறுக்கில வந்துட்டாங்களே.."

"அட, கொஞ்ச நேரம் ஜயா ஜாலியா தண்ணி போட்டு, கஞ்சா அடிக்கட்டுமே... சிலுக்கு பாருய்யா, இன்னும் உடம்பை டக்கரா வச்சிருக்காங்க..."

"அட, நீ சொன்னா மாதிரி கனவுப் பாட்டு வந்திருச்சி — ஐயோ, ஐயோ ஊர்வசி பட்டம் வாங்கின சுஹாசினியா இப்படி குதிக்கறாங்க, கட்டிப் புரளுறாங்க?"

"யாரா இருந்தாலும் தெலுங்குக்குப் போயிட்டா அம்பேல்னு உனக்குத் தெரியாதா? இரு; வில்லன் கோஷ்டி க்ளோஸப்க்கு வந்தாச்சு...சிரஞ்சீவிவேறசெய்ஞ்ச தப்புக்கு ஜெயிலுக்குப் போயிட்டாரு. என்ன ஆவுது பார்ப்போம்!"

"என்ன ஆவும்? வில்லன் கோஷ்டில சிரஞ்சீவியோட அப்பாவைக் க ட த் தி ட் டு ப் போவாங்க... இவரு போய்க் காப்பாத்துவாரு..."

"அட.. ஆமாம்... ரகசியமா ப்ளேன் ஏறி, பெரிய துப்பாக்கில்லாம் எடுத்துக்கிட்டு ஏம்ப்பா இந்த ஸீன்லாம் ரொம்ப இருட்டா இருக்கு?"


"இங்கிலீஷ் படத்திலேர்ந்து அப்படியே தூக்கிட்டாங்க போல... வீடியோல போட்டு, டீ. வி. லேர்ந்து படம் பிடிச்சிருக்கிற மாதிரி கோடு கோடா ஓடுது பாரு..."

"இதென்னய்யா கூத்து? சிரஞ்சீவி பிளேன் பிடிச்சு, நதி, கடல்லாம் தாண்டி வந்த எடத்துக்கு சுஹாசினி ஜாலியா டாக்ஸில வந்து எறங்கிட்டாங்க?"

"கேள்வி கேக்கறதா இருந்தா எழுந்து வெளியே போய்யா..."

"சரி, சரி, பெரிய ஃபைட் சீனு வருது, நான் விடுவேனா?"

"அதோ [illegible]..."



கிரிக்கெட் மாட்ச் ஸ்டேடியம் மாதிரி காலரில்லாம் வச்சு..."

"அமர்க்களம்! கூடவே ஊறுகாய் மாதிரி சிலுக்கு டான்ஸ். வித்தியாசமான வில்லன்தான்..."


"சிரஞ்சீவியைப் பார்த்தியா? வலது கால்ல குண்டு பாய்ஞ்சிடுச்சு... அதே எடத்தில கோடாலியால வேற அடி... ரத்தம் குபுகுபுன்னு கொட்டுது... ஆறு டயர்டு ஆளுக் கூட அந்தக் காலாலேயே எட்டி ஒரு உதை விடறாரு பாரு... பெரிய்ய ஆளுப்பா..."

"டமாஷான படம் இல்லே?"

"ரெண்டரை மணி நேரம் கவலையெல்லாம் மறந்து ஜாலியா இருந்தேன்பா..."

— ஜெயமன்மதன்.

தூண்போல் துணைகள் எங்களின் பின்னால்.



இண்டக்ரேடட் ஃபைனான்ஸ், லீஸிங் உலகில் மிகுந்த நல்ல பெயர் உள்ள நிறுவனம். நம்பத்தகுந்ததும் லாபகரமானதும். சுருங்கக் கூறினால் வேகமாக முன்னேறும் நிறுவனங்களில் இதுவும் ஒன்று. முதல் பங்கு விற்பனை அறிவிப்பே 19 தடவைகளுக்கு மேல் விற்றுத் தீர்ந்துவிட்டது! மிக அண்மையில் ரூ. 4 கோடிக்கு வெளிவந்த மாற்றிக் கொள்ளக் கூடிய கடன் பத்திரங்கள் குறியிடப்பட்ட அளவுக்குமேல் விற்றன. ரூ. 9 கோடி தொழில் முதலீடு இதுவரை செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 6 கோடிக்கான வியாபார ஆயத்தங்கள் நடந்து வருகின்றன. சுருங்கக் கூறினால் இண்டக்ரேடட் ஃபைனான்ஸ், விரைவான முன்னேற்றமும் வளர்ச்சியும் அடைந்து வருகிறது.

தொழில் உலகில் சிறந்து விளங்கும் MRF, OEN, Reunion Engg., Malayala Manorama, Badra Coffee Estate மற்றும் Balanoor Tea and Rubber போன்ற நிறுவனங்கள், இண்டக்ரேடட் ஃபைனான்ஸில் முதலீடு செய்துள்ளனர். சிறந்து செயல்படும் டைரக்டர்களும் உள்ளனர்.

டைரக்டர்கள் குழு

கே.எம். பிலிப் தலைவர்	முழு நேர இயக்குநர்	எம்ஆர்எஃப் லிமிடெட்
வி.எஸ். நடராஜன் (முன்னாள் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், பாரதீய ஸ்டேட் பாங்க்)	இயக்குநர்	ரேமாண்ட் உல்லன் மில்ஸ் லிட்., சிர்லான் ஸின்தெடிக் ஃபைபர் & கெமிகல்ஸ் லிமிடெட்
கதிர் கே. தாக்கர்ஸே	தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்	ஹிந்துஸ்தான் ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் லிமிடெட்
	இயக்குநர்	ஸீமென்ஸ் இந்தியா லிமிடெட்
கே.ஏ. மாத்யூ	நிர்வாக இயக்குநர்	OEN இந்தியா லிமிடெட்
ஜகதீஷ் கே. முன்ஷி	இயக்குநர்	ஜெனித் ஸ்டீல் பைப் & இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
பி.கே. கோஷி	தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்	ரீயூனியன் எஞ்சினீயரிங் கம்பெனி (பி.) லிமிடெட்
கே.ஏ. வருகீஸ்	இயக்குநர்	எம்சம் ரப்பர் கம்பெனி லிமிடெட், கோமின்கோ பினானி ஜிங்க் லிமிடெட்
ஜார்ஜ் குருவில்லா FCA நிர்வாக இயக்குநர்		நிதித்துறை ஆலோசகர்

Forms Available at :

Alpha Financial, 669, Mount Rd., Thousand Lights, Madras – 6 • **Arkay Investment**, 23 Rameswaram Rd., T.Nagar, Madras – 17 • **H.L. Financial**, 12, North Crescent Rd., T.Nagar, Madras – 17 • **Integrated Enterprises**, 42, Motilal St., T.Nagar, Madras – 17 • **J.M. Financial**, 682, Mount Rd., Thousand Lights, Madras – 6 • **Universal Finance**, 157, I Floor, Linghi Cherry St., Madras – 1.

MRF, Malayala Manorama, OEN ஆகிய

மோகம் என்பது இதுதானே?

2.

முதல் அத்தியாயச் சுருக்கம்

கோவிலில் ஓதுவாராக இருந்திருக்க வேண்டிய சுந்தரம் கோவில்களின் வறுமை நிலை காரணமாகப் பள்ளி ஆசிரியராகிறார். ஆனாலும் அவர் இசை ஆர்வம் குறையவில்லை. அவரிடம் மிகவும் அன்பு வைத்துள்ள தம் இரண்டாம் மகள் புவனேஸ்வரிக்கு இசைப் பயிற்சி அளிக்கிறார். மகள் பருவமடைந்தபின், தந்தைக்கும் மகளுக்குமான நெருக்கமும், இசைப் பயிற்சியும் குறைந்து போகின்றன. சுந்தரத்தின் விருப்பத்தை மீறி, பக்கத்து ஊரில் நடக்கும் அரசியல் கட்சிக் கூட்டத்தில் இறைவணக்கம் பாட, புவனேஸ்வரியை அவள் தாய் ஞானசுந்தரி அழைத்துச் செல்லச் சம்மதிக்கிறாள்.

"சந்திரசேகரா, காயத்ரி ஜபிச்சையா?"

"ஆச்சு பாட்டி!"

"அப்போ இலையிலே உட்காரு. பரிசேஷணம் பண்ணிவிட்டு, மொதல்லே பாயசத்தை வாயிலே வெச்சுக்கோ. வெள்ளிக்கிழமை, லலிதா சஹஸ்ர 'நாமம் படிச்சேன். மத்தியானத்துக்கு, தயிருஞ்சாதத்துக்குத் தொட்டுக் கொள்ள வடையும் வச்சிருக்கேன். இப்போ சூடா ஒண்ணு கலத்திலே போட்டுக்கோ, போறும்."

"சரி பாட்டி....."

"நான் பாதிப் பூஜையிலேயிருக்கிறபோது அப்பா கடிதாசு எழுதியிருக்கா, படிக்கட்டுமான்னு கத்தினையே, என்ன விஷயம்னு இப்ப சொல்லு."

"இந்த வருஷம் லீவுக்கு அப்பாவும் அம்மாவும் வரலையாம். விமான டிக்கெட் அனுப்பறேன். நீயும் பாட்டியும் இங்கே வந்து ஒரு மாசம் இருக்கலாம். பாட்டிக்கும் ஒரு மாறுதலாக இருக்கும்னு எழுதியிருக்கா."

"பாட்டிக்கு இத்தனை வயதுக்குமேல் மாறுதலெல்லாம் வேண்டாம். இந்தக் காவிரித் தீர்த்தத்தை விட்டுவிட்டு என்னால் ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது. டிக்கெட் அனுப்பச் சொல்லு. நீ போயிட்டு வா. புது ஊரு, புது மனுஷா, புதுசான அனுபவங்கள் எல்லாம் சின்ன வயசிலேதான் பார்த்து அனுபவிக்கணும்."

சந்திரசேகர் பாட்டியின் கம்பீரமான தோற்றத்தை நிமிர்ந்து பார்த்தான். சந்தன நிற வாயில் புடவை, அதே நிற ரவிக்கை. எழுபது வயதிலும் கோடாலி முடிச்சில் ஒரு நரையில்லே. அகன்ற நெற்றியில் கீற்றாக விபூதி தேஜஸ். "பாட்டி, நீங்க ஏன் குவெய்த்துக்கு வரமாட்டேங்கறேன்னு எனக்குத் தெரியும். உங்க மடி, ஆசாரம் கெட்டு விடும்னுதான். பெரிய வெள்ளிக் கூஜாவில் மடியாகப் பால் எடுத்துக் கொள்ளுங்கோ. ஏழெட்டு மணி நேரம்தான். ஊருக்குப் போனப்புறம் அம்மா உங்களுக்கு மடியாகச் சமைச்சுப் போடுவா...."

"போடா படவா, என் மடி ஆசாரம் உனக்குக் கேலியாக இருக்கா? நான் வளர்ந்த விதம் அப்படி.... இந்தா டிபன் பாக்ஸ்...



பத்து; புஸ்தகத்தோட சேர்த்துத் துணிப் பையிலே வைக்காதே. சைக்கிள் கேரியரில் வெச்சுட்டுக் கையை அலம்பிண்டு வா.''

பாட்டி ஸ்தூல சரீரத்தைச் சாய்த்து, சாய்த்து நடந்து பூஜை அறைக்குள் சென்றாள். அவள் திரும்பும்போது, மல்லிகை மணம் 'குப்'பென வீசியது. ''விட்டிலே பூத்த ஜாதிப்பூ போற வழியிலே சுந்தரம் வீட்டிலே கொடுத்துட்டுப் போ. அப்படியே, ஞானத்தைச் சாயந்திரம் வெத்தலை பாக்கு வாங்கிக் கொள்ள வரச் சொல்லு!''

வாழையிலையில் சுருட்டியிருந்த பூவை வாங்கும்போது, நேற்று புவனா ஆங்கிலக் கட்டுரைப் புத்தகம் கேட்டது நினைவுக்கு வர, உள்ளே சென்று அதையும் எடுத்து வந்தான்.

கையாட்டிப் பாட்டியிடம் விடை பெற்றவன், அவள் பார்வையிலிருந்து மறைந்தவுடன் வேக வேகமாகப் பெடலை மிதித்தான். ஒரு கை ஹாண்டில் பாரைப் பிடித்திருக்க, மற்றொன்றால் மல்லிகைப் பூவை எடுத்து முகர்ந்து பார்த்தான். பூவையும், புத்தகத்தையும்கொடுக்கும்சாக்கில்புவனாவுடன் சிறிது நேரமாவது பேசலாம்!

பள்ளியில் சகமாணவன் ஒருநாள் கேட்டான். ''சுந்தரம் சாரோட ஒட்டடைக் குச்சிப் பெண்ணோட உனக்கு 'லவ்'வா?'' என்று.

''சீ போடா, எங்கப்பாவும், அவப்பாவும், ரொம்ப நெருங்கிய நண்பர்கள். அதனால் என்னோட ப்ரீயாப் பேசுவா. 'லவ்'வுமில்லை, மண்ணுமில்லை'' என்று பதிலிறுத்தாலும் மனத்துக்குள் தான் பொய் சொல்கிறோமோ என்ற குறுகுறுப்பு இருந்து கொண்டுதானிருந்தது. அவன் பள்ளியில் நிறைய அழகான, தளதளப்பான மாணவிகள், இருந்தார்கள். அவர்கள் அவன் டிஜிடல் கடிகாரத்தையும் வெளிநாட்டுப் பாண்ட், ஷர்ட்டையும் பார்த்து வியந்தும்கூட அவனுக்கு அவர்களிடம் எந்தக் கவர்ச்சியும் தோன்றவில்லை. புவனா விஷயமே வேறு.

''என் ஸ்லேட் உடைஞ்சு போச்சு'' என்று ஏழு வயதுப் புவனா நடுத் தெருவில் அமர்ந்து அழ, நாலு வயது பெரியவளான லோகேஸ்வரி உடைஞ்ச ஸ்லேட்டாலேயே முதுகில் இரண்டடி போட்டாள். புவனா இன்னும் பெரிதாகக் குரலெடுக்க, ''சனியன், நான் வீட்டுக்குப் போறேன். தனியா நடுத் தெருவிலே உட்கார்ந்து அழு'' என்று லோகு முன்னே நடந்துவிட்டாள். பள்ளியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த சேகர்தான் அவளைச் சமாதானப் படுத்தி சைக்கிளில் உட்கார வைத்து வீடு வரையில் சைக்கிளைத்



உஷா சுப்பிரமணியன்

தள்ளியபடியே கொண்டு சேர்த்திருக்கிறான்.

இன்னும் அந்த அன்பு, பாசம், உரிமை எல்லாம் தொடருகிறது. புவனா பள்ளி விழாக்களில் துதி கீதம் பாடும்போது சேகர் பரவசமாகிப் போவான். காவிரி மண்ணுக்கே உரித்தான சங்கீத ஞானம் அவனுக்கும் இருந்தது. சென்ற வருடம்வரை இனிமையான குரலும் கைகொடுக்க, நவராத்ரியின் போது கொலுப் படிகளுக்கு அடியில் ஒளிந்து கொண்டு கச்சேரி செய்வான். ஒருபுறம் பெண்கள் கேலி செய்வார்கள் என்ற பயம், மறுபுறம் அதை மீறிய சங்கீத வேட்கை.

திடீரென அவன் குரல் உடைந்து பிசிறடித்தது. மேல் 'ஸா'வை எட்டும்போது, தனியே திரியாக அபஸ்வரம் பிரிந்தது. அவன் வருத்தத்தைப் புரிந்து கொண்ட அவன் அப்பா பெரிய ஸ்டீரியோ ப்ளேயரும் விதவிதமான காஸட்டுகளும் வாங்கி அனுப்பினார். மேல்நாட்டு இசையில் பீத்தோவன், மொஸார்ட் முதல் இன்று கொடி கட்டிப் பறக்கும் பாய் ஜார்ஜ், டினா டர்னர், மைக்கல் ஜாக்ஸன் வரை அனைவரும் அவனுக்கு அறிமுகமானார்கள். கர்நாடக சங்கீதத்திலும் செம்மை முதல் இன்றைய பாடகி வரை எல்லோரும் பரிச்சயமானார்கள். தான் புதிதாக வாங்கிய காஸெட்டை உடனே சுந்தரம் ஸாரிடம் தருவான். அவர் பாட்டுக் கேட்ட பின் இருவரும் சேர்ந்து அந்தக் கச்சேரியை விவாதிப்பார்கள்.

இப்போதெல்லாம் புவனாவும் கர்நாடக சங்கீதத்தை ரசிக்கிறாள். "புதிசா காஸெட் ஏதாவது வாங்கியிருக்கியா சேகர்?" என்று விசாரிக்கிறாள்.

தூரத்திலிருந்தே சுந்தரம் ஸார் சைக்கிள் பம்பை எடுத்துக் கொண்டு படியிறங்குவது தெரிந்தது. "ஸார், ஸார், நான் காற்று அடிச்சுத் தரேன், தாங்கோ" அவசரமாக மூச்சிரைக்கச் சொன்னான்.

"வேண்டாம்சேகர்" என்று தயங்கியவரிடமிருந்து பம்பைப் பிடுங்கி அடிக்கத் துவங்கினான். "அப்பா லெட்டர் போட்டிருக்கா, ஸார்." விவரமாகச் சொன்னபடியே குதித்துக் குதித்துப் பம்பை அழுத்தினான்.

சேகரின் அப்பா கிருஷ்ணன், சுந்தரம் ஸாரைப்போல இதே ஊரில் பிறந்து வளர்ந்தவர். ஒன்றாக ஆற்றில் நீந்தி, மணற் படுகையில் குத்துச் சண்டையிட்டு, ஒன்றாகப் படித்தவர்களில் சுந்தரம் இதே ஊரில் பள்ளி ஆசிரியராக நின்றுவிட, கிருஷ்ணன் பிலானி சென்று இன்ஜினியரிங் படித்தார். வடநாட்டில் வேலைக்குச் சேர்ந்தார். ஆனால் ஆண்டு தோறும் விடுமுறையில் ஊருக்கு வரும் போது அதே பழைய அன்பு தொடரும்.

ஒருநாள் "டேய் சுந்தரம், ஆப்பிரிக்கா, மிடில் ஈஸ்டில் பெரிய ப்ராஜக்ட் ஒன்றுக்கு நான் தலைமையேற்றுப் போகப் போகிறேன். ஓயாமல் உலகம் முழுவதும் சுத்தற வேலை. இந்தப் பயலை எங்கம்மாவிடம்தான் விட்டு, விட்டுப் போகப் போறேன். நீதான் இனிமேல் சேகருக்கு காட் ஃபாதர், தெரியுமா?" என்றார்.

"என்ன கிருஷ்ணா, உன் வசதிக்கு ஊட்டி, சிம்லா என்று பெரிய போர்டிங் ஸ்கூலில் பிள்ளையைப் படிக்க வைக்க முடியும். இந்த ஊரில் தமிழ்ப் பள்ளிக்கூடத்திலே சேர்க்கப் போறியா?" என்றார் சுந்தரம் வியப்புடன்.

"இந்த ஊருக்கும், தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கும் என்ன குறைச்சல்? நானும், நீயும் இங்கே படித்துச் சீரழிந்தா போய்விட்டோம்? இங்கிலீஷ் ஸ்டைலாகப் பேசறதும், போர்க், ஸ்பூனால் நாசூக்காகச் சாப்பிடறதும் படிப்பில்லை. இந்த மண்ணோட வாசனையை முகர்ந்து, அதில் வாழறவாளைப் புரிஞ்சுக்கறதும், படிப்புதான். வாழ்க்கையில் சரியான 'வால்யூ சிஸ்டம்' வரணும். என் பிள்ளை நல்ல மனுஷனா வளரணும். அது போதும்."

"உங்கம்மா ரொம்ப ஆர்தடாக்ஸ் ஆச்சே கிருஷ்ணா. சேகர் சுதந்திரமாக வளர்ந்த பையன், அட்ஜஸ்ட் செய்துப்பானா?"

"அவனால் முடியணும். அவன் இங்கேயிருந்தால், அம்மாவுக்கும் வாழ்வில் ஒரு பிடிப்பு தொடரும். இவனும், நம் பாரம்பரி

கம்ப்யூட்டர்களை 'வைரஸ்' கிருமிகள் தாக்கும் அபாயம்!




கம்ப்யூட்டர்களைத் தாக்கும் 'வைரஸ்' கிருமிகளிலிருந்து அவற்றைப் பாதுகாக்க அமெரிக்க விஞ்ஞானிகள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த 'வைரஸ்' என்பது கம்ப்யூட்டர் நெட் வொர்க்குகளை அழிக்கவல்ல எலெக்ட்ரானிக் சங்கேதமாகும். இதனை கம்ப்யூட்டரின் ப்ரோக்ராமில் ரகசியமாகப் புகுத்திவிட்டால், அது, அந்தக் கம்ப்யூட்டரின் ஞாபகசக்தி, அதில் பதிவாகியிருக்கும் விவரங்கள் ஆகியவற்றை அழித்துவிடும் அல்லது அவற்றைக் குழப்பி, பலவிதமான தவறான விளைவுகளை உண்டாக்கி விடும். இதன் பலனாக தேசியப் பாதுகாப்பு, வங்கி முறை, விமானப் போக்குவரத்து, மற்றும் கம்ப்யூட்டரை நம்பியிருக்கும் பல இயக்கங்களுக்குக் கேடு விளையும். பயங்கரவாதிகளின் கையில் இது ஆயுதமாகப் பயன்படும் வாய்ப்பும் உள்ளது.

ஆதாரம்: ஹிந்து
தகவல்: கௌசிகி

கைபடாத சேவரிட் சேமியா மணக்குமே உங்கள் கைபட்டதும்!





சேவரிட் சேமியா மிக நவீனமான அயல் நாட்டு இயந்திரங்களால் மிகச் சுகாதாரமான முறையில் கைபடாமல் தயாரிக்கப்படுகிறது.

உயர்தர சம்பா கோதுமை ரவையில் தயாரிக்கப்படும் சேவரிட் சேமியா சத்து நிறைந்தது. குழைந்து போகாதது. சீக்கிரமாகச் சமைக்கக் கூடியது. மேலும், சேவரிட் சேமியாவை வறுக்க வேண்டிய அவசிய மில்லை. இது சமைத்த பின்பும் பால்போல் வெண்மை யாக இருக்கும்!

சிற்றுண்டிகளானாலும், பாயசம் போன்ற விசேஷ உணவு வகைகளானாலும் சேவரிட் சேமியா உங்கள் சமையலுக்கு ஊட்டமும் சுவையும் கூட்டுகிறது!

ஆகையினால்தான் குடும்பநலன் கருதும் குடும்பத் தலைவிகள் விரும்பி வாங்குவது சேவரிட் சேமியாவே!

முத்தான அம்மா சமைப்பது சத்தான சேவரிட் சேமியா!

Savorit
சேமியா



பொருத்தமளிக்க உமக்கென்றே 3 வித வண்ணச் சாயல்களில் வருவது லக்மே காலமைன் ஒன்றே.

லக்மே காலமைன் ஒன்றுதான்
மூவித வண்ணச் சாயல்களில்
மோகனமாய் வருகுது:
நேச்சுரல், லைட், கோல்டு, இதில்
உமக்கொன்று சேர்த்தி,
ஒருங்கிணைய நேர்த்தி-எண்ணிலா
வண்ண மேனியரை இனம்பிரித்து
உணருதே லக்மே. இன்மணமுடன்
மேனிமீது இலகுவாய் இழையும்
லக்மே காலமைன் — தனிநிற
உரிமையைத் தருகுது உமக்கு.
பரிட்சார்த்தப் பேக்காகவும்
கிடைக்குது பதம்பார்க்க வசதியாக

நேச்சுரல்
—மாநிற
மேனியருக்கு

லைட்
—சிகப்பு
மேனியருக்கு

கோல்டு
—கருவண்ண
மேனியருக்கு



லக்மே காலமைன்

சரும வண்ணம் எவ்வண்ணம
சாயலுண்டு அவ் வண்ணம்.

Tm

யத்தின் பலம், பலகீனம் இரண்டையும் புரிந்து கொள்வான். அப்படி ஏதாவது ப்ராப்ளம் இருந்தா நீ கவனிச்சுக்க மாட்டாயா?''

''நீ கவலைப்படாதே.... சந்திரசேகரனை நான் பார்த்துக்கறேன்'' சேகரைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமின்றி, அவன் இடமான அடிப்படைக் கணிப்புகளும், இளமையை மீறிய மனோபலமும் கொண்டவனுக வளர்ந்திருக்கிறுன். சுந்தரம் என்ற ஆசிரியருக்கும் சந்திரசேகரன் என்ற மாணுக்கனுக்கும் இடையில் அற்புதமான நட்புத் தோன்ற இதுவே காரணமாயிருந்தது.

''காத்து சரியா இருக்கா பாருங்கோ ஸார்....'' பம்பை எடுத்தவன், ''ஸார் புவனு க்ராமர் அண்ட் காம்போஸிஷன் புக் கேட்டா'' என்று கட்டுரைப் புத்தகத்தை எடுத்தான். பையின் மேலாக இருந்த மல்லிகைப் பொட்டலம் கையில் பட, ''ஸார், ஒரு நிமிஷம் மாமியைப் பார்த்துட்டு வரேன்'' என்று பூப்பொட்டலத்துடன் உள்ளே பாய்ந்தான். ''மாமி, பாட்டி பூக் கோத்துக் கொடுத்தா. எங்கள் வீட்டில் பூத்த ஜாதிப்பூ. அப்புறம்.... உங்களைச் சாயங்காலம் தாம்பூலம் வாங்கிக் கொள்ள வரச் சொன்னுள் பாட்டி.''

''ஹாய்யா.... பூக்கொண்டு வந்தயா சேகர். அம்மா.... இந்நேரத்துல பூ எங்கே கிடைக்கும். மீட்டிங்கிலே வெச்சுக்கப் பூ வேணும்னு நீ சொன்னது இவங்க பாட்டி காதிலே விழுந்துடுத்து போலிருக்கு....'' புவனு பூவை எடுத்து மகிழ்ச்சியுடன் முழம் போட்டாள்.

''உனக்குப் புஸ்தகம்கூட மாமாவிடம் கொடுத்திருக்கேன்.'' சேகர் குறுக்கிட்டான்.

''புஸ்தகத்துக்கு இன்னிக்கு அவசியமேயில்லே. ஏன்னு, நான் இன்னிக்கு ஸ்கூல் மட்டம். கூட்டத்திலே பாடப் போகிறேன். கார் வரும்....''

''ஆமாம் தம்பி.... சாயங்காலம் தாம்பூலம் வாங்கிக்கக்கூட வரமுடியுமோ, என்னவோ, பாட்டிகிட்டே சொல்லிடு....''

''புவனு இன்னிக்கு இங்கிலீஷ் காம்போஸிஷன்னு சொன்னே.... பரீட்சை வேறு வர்றது. மட்டம்னு சந்தோஷமா குதிக்கிறயே....''

''ஆமாம் நாங்களெல்லாம் எஸ்.எஸ்.எல்.ஸி.யில் நிறைய மார்க்கெடுத்துப் படிச்சு என்ன கிழிச்சுட்டோம். இந்தக் காலத்துல புஸ்தகத்தைக் கட்டிக்கிட்டு அழுதுதான் முன்னேறணும்னு இல்லே. அதுக்கு வேறே வழிகள் ஆயிரம் இருக்கு. மாமா காத்துக்கிட்டு நிக்கருரு, பாரு.... நீ கெளம்பு....'' என்று ஞானசுந்தரி அலட்சியமாகச் சொன்னுள்.

பள்ளி சென்று அடையும்வரை சுந்தரமும், சந்திரசேகரனும் பேசவே இல்லை. இருவர் நெஞ்சையும் இனமறியாத சுமையொன்று அழுத்தியிருந்தது.

(தொடரும்)



அருள்வாக்கு

ஏந்தப். போர்முறையானுலும் இன்னின்ன ஒழுங்கு முறைகளின்படிச் செய்ய வேண்டும் என்று அதற்கு வ்யவஸ்தை பண்ணி 'தர்ம யுத்தம்' என்று வைத்திருக்கிறது. இதிலே பெரிய தர்மம் 'ஸேனைக்கும் ஸேனைக்கும்தான் சண்டை, யுத்த பூமியிலே தான் அந்த சண்டை நடக்க வேண்டும், மற்ற பொது ஜனங்கள் எவரையும் தாக்கப்படாது, நாடு நகரங்களை பாதிக்கப்படாது' என்று வைத்ததுதான். தற்காலத்திலோ ஸிவிலியன் பாபுலேஷன், குழந்தைகள், ஸ்த்ரீகள் எவரானுலும் க்ரூரமாகக் கொன்று குவிக்கிற விமானப் படையெடுப்பும், குண்டு போடுவதும்தான் போர்முறை என்ருயிருக்கிறது.

அத்துமீறிப் பண்ணினவர்கள்தான் முற்காலங்களில் நாடு நகரத்தில் புகுந்து நாசம் பண்ணியும், தீ வைத்தும் ஜலாசயங்களில் (நீர்நிலைகளில்) விஷம் கலந்தும், ஸ்த்ரீகளை மானபங்கம் செய்தும் யுத்தம் செய்தது. இவர்கள் ரொம்பவும் குறைச்சலே. அந்நிய தேசத்தவர்கள் படையெடுத்து வந்து இந்த மாதிரி முறைகெட்ட கார்யங்களை இங்கு செய்ய ஆரம்பித்த பின்தான் இங்கே இவை சற்றுப் பரவின. அவர்கள் இப்படி அக்ரமம் பண்ணினபோதுகூட சிவாஜி முதலான ஹிந்து ராஜாக்கள் அவர்களைச் சேர்ந்த ஸ்திரீகளுக்குக் கெடுதல் பண்ணுமல், காப்பாகப் பல்லக்கிலே ஏற்றிப் போக வேண்டிய இடத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறுர்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

இனிமையான நேரங்களில்

என்டெக்ஸ்®


ஷர்டிங்குகள் 100% பாலியெஸ்டர்
பாலியெஸ்டர் பிளண்ட்ஸ் மற்றும் காட்டன்

சிறந்த ரகங்கள் சரியான விலை

நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன்
(தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிமிடெட்
ஒரு மத்திய அரசு நிறுவனம்
10/64 சோமசுந்தரம் மில்ஸ் ரோடு, கோயமுத்தூர்-641009



MCA/NTC/116 Tam



நீக்கப்படாத மந்திரிகள் ஊழலற்றவர்களா?



* டேவிட் ஜான் பிரிட்டோ, திருத்துறைப்பூண்டி

? ''அவனுக்கு
வருடம் முழுதும் சமபந்தி
எச்சில் இலையில் நாய்களுடன்.''
— இந்தக் கவிதை பற்றி தங்கள் அபிப்ராயம் என்ன?

! இன்றைக்கும் நிலவுகிற யதார்த்தத்தைத் தான் சொல்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒன்று, பொதுவாகவே இன்று பெரும்பாலான புதுக் கவிதைகள் தன்னம்பிக்கையைக் குலைத்து விடுகிற குரூர வரிகளாக உள்ளன. இந்தப் போக்கு மாறினால் நல்லது. இலக்கியம் என்பது நம்பிக்கையை வளர்க்கும் நனினங்களாகவும் இருக்கலாமே!

* மு. சிவஞானமுருகன், ஸ்ரீவைகுண்டம்

? எம்.ஜி. ஆர். எதிர் கட்சித் தலைவரானால்...?

! சட்டசபை செத்துவிட்டது என்று கூறி உள்ளே வரமாட்டார்!

* க. தியாகராஜன், நெய்வேலி

? ஆட்சியில் ஊழல் செய்ததாக விடுவிக்கப்பட்ட அமைச்சர்களைக் கட்சிப் பணியில் ஈடுபடுத்தப் போகிறேன் என்கிறாரே, எம்.ஜி. ஆர். அப்படியானால் கட்சிப் பணி செய்பவர் மட்டும் ஊழல்வாதியாக இருக்கலாமா?

! ஊழல் என்பது கட்சி, ஆட்சி இரண்டிலும் உண்டு. ஆட்சியில் வாங்குவது அதிகம்; கட்சியில் விநியோகம் அதிகம். வித்தியாசம் இவ்வளவே.

* சி. ஆர். நாகராஜன், வளவனூர்

? திருமலைப் பிள்ளை ரோடில் மழை எப்படி இருக்கிறது?

! பருவ மழை பொய்த்துவிட்டாலும் நிலத்தடி நீர் வற்றி விடவில்லை.

* கே.வி.எஸ். மணியன், குடியாத்தம்

? நீக்கப்பட்ட பத்துப் பேர் சென்ற ஆண்டு எம்.ஜி. ஆர். குறிப்பிட்ட ஊழல் மந்திரிகள் எனக் கொள்ளலாமா?

! 'ஊழல் செய்பவர்கள், உங்களுடைய நம்பிக்கையை இழந்தவர்களான மந்திரிகளின் பெயர்களை எழுதிப் பெட்டியில் போடுங்கள்' என்றார். பிறகு, 'பதினொரு மந்திரிகள் நீக்கப்படுவார்கள்' என்றார். இப்போது 'நீக்கப்பட்டவர்கள் ஊழல் செய்ததற்காக நீக்கப்பட்டவர்கள் இல்லை' என்கிறார். எம்.ஜி. ஆர். என்ன சொல்கிறார் என்பது அவருக்கே புரிந்தால் சரி!

* க. இளங்கோ, நந்தியநல்லூர்

? நீக்கப்படாத மந்திரிகள் எல்லோரும் ஊழலற்றவர்களா?

! ஆமாம், ஆமாம், ஆமாம்! ப.உ.ச. ஊழல் ஒழிப்பு மந்திரியாகி இருக்கிறாரே, அதிலிருந்தே தெரியவில்லை?

* டி. ராமன், குடியாத்தம்

? முதல் அமைச்சர் பத்து அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கியது எதைக் காட்டுகிறது?

! அமைச்சர்கள் பதவியில் இருப்பதும் இல்லாததும் முதல்வரின் விருப்பத்தையொட்டிய விஷயம் என்று தமக்குள்ள அதிகாரத்தை உணர்ந்து கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரம் நாளை இ. காங்கிரஸ்காரர்களுக்குப் போனாலும் போகலாம். தி.மு.க. விடம் போய்விடக் கூடாது என்று அவர் கவலையோடு திட்டமிடுவது புரிகிறது.



ஊழல் ஒழிப்பு



நிலத்தடி நீர்



பரிதாபம்

நீங்கள் கேட்டவை — தராசு

* இரா. வனையாபதி, தோட்டக்குறிச்சி

? போகிற போக்கைப் பார்த்தால் காங்கிரஸ் கட்சியில் மூத்த தலைவர்களே இருக்க மாட்டார்கள் போலிருக்கிறதே?

! மூத்த தலைவர்கள் சிலர் இன்று மத்திய அமைச்சரவையிலேயே இடம் பெற்றிருப்பதுடன் அத்தகையவர்களின் அனுபவ அறிவு அமைச்சரவைக்குப் பெருதவியாய் இருக்கும் என்றும் ராஜீவ் சொல்லியிருக்கிறாரே!

* கலாரசிகன், சீர்காழி

? ஒரே கட்சியில் உள்ள இருவர் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவது அக்கட்சிக்கு ஆரோக்கியமானதா?

! தாக்கிப் பேசுவது பலவீனம், அது கட்சிக்குள் பிளவை உணர்த்தும். விமர்சித்துப் பேசுவது ஆரோக்கியம். அது உட்கட்சி ஜனநாயகம் சிறப்பாகச் செயல்படுவதை உணர்த்தும்.

* தே. காந்தி, மதுரை *

? திருச்சியைத் தலைநகராக்க யோசனை வைத்திருக்கிறார்களே. ஏன் சென்னை வசதியாக இல்லையா?

! முன்பு எம்.ஜி. ஆர். 'தலைநகரை மாற்றுவேன்' என்றதற்கும் இன்று 'நெடுஞ்செழியன் 'இரண்டாவது தலைநகராக திருச்சியை அமைக்கலாம்' என்பதற்கும் வித்தியாசம் உள்ளது. அரசின் சில பல இலாக்காக்கள் சென்னையில்தான் இருந்தாக வேண்டும் என்ற அவசியமில்லை. அத்தகைய அமைச்சகங்களைப் படிப்படியாக இரண்டாவது தலைநகருக்கு மாற்றலாம். சென்னையில் ஜன நெரிசல் குறைகிறதோ இல்லையோ, ஜனத் தொகைப் பெருக்கத்தின் வேகம் குறையும். திருச்சியும் படிப்படியாகப் பலவிதங்களில் வளம் பெறும். ஆலோசனைகளுக்கு ஓர் இரவு ரயில் பயணத்தில் சென்னை வந்து சேர்ந்து விடலாமாதலால் போக்குவரத்தினால் காலதாமதங்களுக்கு இடமில்லை. மேலும் செய்தித் தொடர்புக்கு டெலெக்ஸ் போன்ற நவீன சாதனங்கள் உள்ளன. நெடுஞ்செழியன் யோசனை காரிய சாத்தியமானதே.

* உமார்த்தி, கோவை

? தீபாவளியன்று பட்டாசுகளால் கரியாகும் காசை நினைத்து வருந்தியதுண்டா?

! கரியாவது காசல்ல, பட்டாசுதான். கரியாகும் பட்டாசினால் வாழ்வு பெறும் கணக்கற்ற குடும்பங்களை எண்ணி மகிழ்வேன். ஆனால் ஒன்று, நாம் கொடுக்கும் பணத்தில் பட்டாசை உருவாக்கும் தொழிலாளிக்குப் போய்ச் சேருகிற பங்கு மிகக் குறைவுதான்.

* எம். சிவகுமார், குடியாத்தம்

? இந்த வாரம் பரிதாபத்துக்குரியவர் யார்?

! ராணி பத்மினிதான். மாதம் 4500 ரூபாய் வாடகை தர முடிந்தது. குடியிருந்த அந்த மாளிகை வீட்டை விலை பேச முடிந்தது. வெளி நாட்டுக் கார் வாங்க முடிந்தது. இன்னும் என்னென்னவோ..... ஆயினும் என்ன, அனுபவிக்க நீண்ட ஆயுளைப் பெற முடியவில்லையே? இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நியதியை — வள்ளுவர் கூறிய வாழ்வாங்கு வாழ்தலை — மறந்து எப்படி வேணுமானாலும் வாழத் துணிந்தவர்களின் கதி இதுதான்.

* முருகேசன், தேனி

? பல நாடுகளில் 'இந்தியப் பல்கலைக் கழகப் பட்டங்கள் மதிக்கப்படுவதில்லை என்று பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் கூறியிருப்பது பற்றி....?

! ஆங்கிலத்தை அறவே ஒழித்துவிட்டு 'ஹிந்தியா' காண விரும்புகிறவர்களைக் கேட்க வேண்டிய கேள்வி.

* ரூ 10 பரிசு பெறுபவர்:

தே. காந்தி,
16, கிருஷ்ணபாளையம் 2வது தெரு,
மதுரை—625 010.

ஸ்வர ராக ஸுதா:



டு — இன் — ஒன் ப்ரிசு பெறும் கட்டுரை

சங்கீதமென்ற மஹா சமுத்திரத்தில், ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணா அவர்களின் இனிய இசை என்ற கப்பலில், இளந்தென்றல் வீசுவது போல் இனிய கீர்த்தனைகளைக் கேட்டுக் கொண்டு; சிறப்பான ஒளிப்பதிவினால் கண்ணுக்கினிய காட்சிகளையும் கண்டு களித்தபடியே பயணம் செய்யும் ஓர் இனிய ரஸானுபவம்: ஸ்வர ராக ஸுதா.

பாமரரையும் அடையும் ஸாஸ்த்ரீய இசை:

"சேரிக்கும் சேர வேண்டும் அதுக்கொரு பாட்டைப் படி" என்ற பிரபலமான சமீபத்திய திரைப்படப் பாட்டின் கருத்துப்படி, சென்னை, சுற்றுவட்டாரத்திலுள்ள லட்சக்கணக்கான தொலைக்காட்சி நேயர்களால் ரசிக்கப்பட்ட மிகச் சிறந்த நிகழ்ச்சியாக இதைச் சொன்னால் மிகையாகாது. பாலமுரளி, ஒவ்வொரு ராகத்தின் லட்சணங்களையும், அதனைப் பாடுவதால் ஏற்படும் ரஸானுபவங்களையும் சுருக்கமான முன்னுரையாகக் கொடுத்தது வரவேற்கக் கூடியது. பின்னர், ராக ஆலாபனை செய்து கீர்த்தனைகளைப் பாடி மகிழ்வித்த முற்பகுதியைச் சொல்வதா அல்லது அந்தக் குறிப்பிட்ட ராகத்தில் பிரபலமான எந்தத் திரைப்படப் பாடல்களை வித்வான் தேர்வு செய்து காட்டப் போகிறார் என்ற ஆவலைத் தூண்டிய பிற்பகுதியைச் சொல்வதா?

இவரைப் போன்ற பிரபல வித்வான்கள் பாரம்பரியம் மிக்க தூய்மையான ஸாஸ்த்ரீய இசையைத் திரைப்பாடலுடன் ஒப்பிட்டு இப்படி ஒரு நிகழ்ச்சியை அளிக்கலாமா என்ற ஒரு சர்ச்சை எழுவது நியாயமென்றாலும், 'திரை இசை என்பது ஒன்றும் எங்கிருந்தோ வந்துவிடவில்லை, அடிப்படையில் இது போன்ற ராக சஞ்சாரம்தான்' என்பதை உணர்த்தினார். அதுவும் எப்படி? ஒரு தாய் அடம் பிடிக்கும் தன் குழந்தைக்குப்

எஸ். ராஜம் அவர்களின் ஓவியம் என்னைக் கவர்ந்த பலப்பல அம்சங்களில் ஒன்று. முதியவரிலிருந்து மூன்று வயதுக் குழந்தை வரை அனைவரையும் தன்பால் ஈர்த்திருந்த இந்நிகழ்ச்சியில், சினிமாக் காட்சிகள் வந்ததும், பெரியவர்கள் முகம் சுளித்துக் கொண்டு எழுந்து போக, விவரம் தெரியாத குழந்தைகள் விளக்கம் கேட்க, உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பாடு பெரும் தர்மசங்கடமாகிவிட்டது. சினிமாவிலும், பக்திப் பாடல்களும், நல்ல விஷயங்களைக் கொண்ட பாடல்களும் அநேகமிருக்க, காதல் காட்சிப் பாடல்களும், முதலிரவுக் காட்சிப் பாடல்களும் ஜெயலலிதாவின் நடனத்துக்கு அமைந்த பாடலும்தானா கிடைத்தன?

நீரஜா மூர்த்தி, பெங்களூர்—19.

படத் தொகுப்பின் வெற்றி என்பது அது தொகுக்கப்பட்டது என்ற உணர்வே ஏற்படாதிருப்பதுதான். அவ்வகையில் ஸ்வாமிக்கு அபிஷேகம், குழந்தையின் ஆடல், ஞானியின் தேடல் எல்லாம் பாலமுரளியின் இசையோடு இழைந்து இழைந்து வந்த விதம் பரமானந்தம் அளித்தது.

சினிமாப் பாடல்களை அதிகம் கேட்காத

ஓர் இனிய ரஸானுபவம்

பரிவோடு நிலாக் காட்டி, சோறூட்டி, தாலாட்டி வளர்ப்பது போல், பாமர ரஞ்சகமாக நிகழ்ச்சியை அளித்தார். கர்னாடக இசையைப் பரப்ப ரசிகர்களின் போக்கிலேயே போய்த் தன்வயப்படுத்திய செயல் இது.

அந்தத் திரைப்பாடல்களைப் பல காலமாக அடிக்கடி கேட்டிருந்தாலும், அட, இது இந்த ராகம்தானா என்று வியப்பைத் தூண்டிவிட்டது நிகழ்ச்சி. ஒவ்வொரு வீட்டு முன்னறையும் திரை அரங்கமாகிவிட்ட இந்நாளில் இதுபோன்ற நிகழ்ச்சியினைத் தயாரித்து மக்களுக்குக் கர்னாடக இசையில் அடிப்படையான ஆர்வம் பரவலாக ஏற்படச் செய்து விட்டார் பாலமுரளி.

தயாரிப்பில் உதவிய தொழில் நுட்பக் கலைஞர்களைப் பாராட்டியே ஆக வேண்டும்.

ஒளிப்பதிவு: அடேயப்பா! வித்வான் முன்னுரையில் கூறிய ராக ரஸானுபவங்களைக் காமிராவால் படம் பிடித்துக் கவிதை பாடிவிட்டார் ஒளிப்பதிவாளர். பாலமுரளியின் மந்த்ரஸ்தாயி ஸஞ்சாரத்தில் அமைதியான, ஆழ்ந்த நீர்நிலைகளையும், மத்யஸ்தாயி ஸஞ்சாரத்தில் கமக, பிர்க்காக்களுக்குத் தக்கபடி செடிகளில் மலர்கள் அசைவதையும், தாரஸ்தாயியில் ஸஞ்சரிக்கும் போது மலை உச்சியையும், அதனூடே மெல்ல நகரும் மேகங்களையும், வேகமாகக் கீழிறங்கும் ஸஞ்சாரங்களில் மலை உச்சியிலிருந்து விழும் நீர்வீழ்ச்சிகளையும் அளித்தது இசையோடு இணைந்த உருவகக் கற்பனை, அற்புதமாக இருந்தது.

ஒலிப்பதிவு: இதுபோன்ற இசை நிகழ்ச்சி சிறக்க ஒலிப்பதிவு மிகமிக முக்கியம். துல்லியமாகக் கேட்கக் கூடிய முறையில் கவனத்துடன் அமைந்திருந்தது ஒலிப்பதிவு. ஒலியையும் ஒளியையும் தனித்தனியே பதிவு செய்து பிறகு இணைக்க வேண்டிய இடங்கள் மிகக் கவனமாகச் செய்யப்பட்டிருந்தன.

எடிட்டிங்: வேண்டாததை விடுத்து, விறுவிறுப்புக் குறையாமலும், அதே சமயம் நிகழ்ச்சி குறைவுபடாமலும் மிகவும் நுண்ணிய முறையில் பணியை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார் தொகுப்பாளர். நிகழ்ச்சியின் வெற்றிக்கு எடிட்டிங் முக்கிய காரணம்.

இயக்கம்: எல்லாக் கலைஞர்களின் நிபுணத்துவத்தையும் ஒருங்கிணைத்துத் தொடர்ந்து பல வாரங்கள் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சியாகச் சிறந்த முறையில் உருவாக்கிய பெருமை இயக்குனரையே சேரும். இந்நிகழ்ச்சிக்கான மூலக்கரு உதவியவரையும் பாராட்ட வேண்டும். அவரின் இந்த யோசனை ஒரு. பெரும் விழிப்புணர்ச்சியை மக்களிடையே உண்டாக்கிவிட்டதென்றால் மிகையில்லை.

ஒரு சிறிய மனக்குறை: முழு நிகழ்ச்சிக்குமே தேவையான பாடல்கள் தமிழிலேயே இருக்கின்றன. மக்களிடையே உருவாகி உள்ள, 'தமிழ்ப் பாட்டென்றால் திரைப்படப் பாடல்கள்தானே' என்ற ஓர் ஆழ்ந்த கருத்தை மாற்ற இது போன்ற நிகழ்ச்சிகள் தான் உதவ முடியும். எனவே, அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், கவிகுஞ்சர பாரதி, சுப்ரமணிய பாரதி, சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன், சமீப கால கல்கி, என். எஸ். சிதம்பரம், திருச்சி தியாகராஜன், அம்புஜம் கிருஷ்ணா போன்ற பலருடைய பாடல்களைப் பயன்படுத்தியிருக்கலாமே யென்று தோன்றுகிறது.

இந்நிகழ்ச்சியைக் கலைத் தாயின் திருமார்பில் தவழும் நவரத்தின மாலை என்றுதான் கூற வேண்டும். இதுபோன்ற பல படைப்புக்களைப் பாலமுரளி தர கலைத் தாயை வணங்கும் ரசிகை

— லலிதா பாலசந்திரன்

வர்கள் சினிமாப் பாடல்களைத் தேர்வு செய்தார்களோ? என எண்ண வைத்தது. காரணம் ராகங்களைத் தனிப்படுத்திக் காட்டும் பாடல்கள் சேர்க்கப்படவில்லை.

— ஆர். ஸ்வாமிநாதன், சென்னை — 61.

சங்கீதம் மேடையிலோ, கோவிலிலோ உட்கார்ந்து பயபக்தியுடன் பாட வேண்டிய ஒன்று என்ற பிரமையை உடைத்து எறிந்து விட்டார் மனிதர்! நின்று கொண்டு, மரத்தடியில் சாய்ந்து கொண்டு, நந்தவனத்தில் நடந்து கொண்டு, தவழ்ந்து வரும் பனி மேகத்துடன் உலாவிக் கொண்டு, பிரம்மாண்டமான மலைகளின் சந்நிதானத்தில், பரந்த புல்வெளியில், சலசலத்து விழும் அருவியில் லயித்து, அவர் செலுத்திய 'கானாஞ்சலி'... பிரபஞ்சமே இசையின் வெளிப்பாடுதான், இயற்கையே இறைவனின் அம்சம்தான் என்பதைப் புரிய வைத்தது!

— கேதார், சென்னை — 28.

'ஸங்கீத் ஸரிதா' போல இவர்களும் முதலில் திரைப்பாடலை வைத்துவிட்டு, பின்னர் ராகம், க்ருதி என்று வைத்திருக்க வேண்டும்.

அப்பொழுது இறுதியாக ராகத்தின் கலப்படமற்ற உருவமே மனத்தில் நின்றிருக்கும். அப்படிச் செய்த கடைசி வார ஏடு அருமையாக இருந்தது. சாருகேசி, கரகரப்ரியா போன்ற சில ராகங்களின் கனத்தைக் குறைத்து மென்மையாக பாலமுரளி தந்தது சம்பிரதாயத்தில் ஊறியவர்களுக்குப் பிடிக்கவில்லை. ராகத்தைப் பற்றிச் சொல்லும் போது யாருக்கும் புரியாத ஸ்வரஸ்தானங்களை வரிசைப் படுத்திக் கொண்டிருக்காமல், பிரசித்தமான கீர்த்தனைகளைக் குறிப்பிட்டிருக்கலாம், பாடியுமிருக்கலாம். நிகழ்ச்சிகளில் பிரபலமான கீர்த்தனைகள் இடம் பெறவில்லை.

— வி. எஸ். குமார், சென்னை — 19.

பாடுவதில் பாலமுரளி அடைந்த ஆத்மானந்த அனுபவத்தை, நாம் உணர முடிந்ததே நிகழ்ச்சியின் வெற்றிக்குச் சான்றாகும். ராக சஞ்சாரங்களின் போது தெய்வ ஆராதனைகளையும் சேர்த்துக் காட்டிய போது இசை ஆராதனை எவ்வளவு சிறந்த வழிபாடு என்பது புரிந்தது.

— ச. தேவிகா ராணி, சென்னை.

கர்னாடக ராகம் சினிமா இசையமைப்பாளரிடம் எப்படி உரு மாறுகிறது என்று ஒரு கே. வி. மகாதேவனோ, எம். எஸ். விஸ்வநாதனோ, இளையராஜாவோ முன்னுரை தந்திருந்தால் பொருத்தமாக அமைந்திருக்கும். ஒரு புதிய கோணம், ஒரு சிறிய மாறுதல், இங்கே ஒரு நெளிவு, அங்கே ஒரு சுளிவு — இவற்றினால் கர்னாடக ராகங்கள் என்னென்ன வடிவங்கள் பெறுகின்றன சினிமாவில்! ஆனால் ஒளிபரப்பான நிகழ்ச்சியிலோ, "இதே ராகம் சினிமா ஸன்னிவேசத்தில் எப்படிப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது பார்ப்போமா?" என்று பாலமுரளி திரும்பத் திரும்பக் கேட்கும் ஒரே வரியுடன் முடிந்து போயிற்று!

— ஸுஜாதா விஜயராகவன், சென்னை — 18.



வாசகர் கருத்து:

நெருப்பாக நீ

* வழக்கமான 'முற்பிறவி ஞாபகக்' கதையாக்கி விடாமல் சிறு குழந்தை நினைவுகளை நிஜமாக்கிக் கதையை அமைத்தது புதுமையாக இருந்தது.

ஈரோடு. அருண்.

* இனிய அழகிய அழுத்தமான வார்த்தைகளாலும், கதைக் கருவாலும் எங்களை ஆட்கொண்ட கதை இது. இன்பா பாத்திரம் மறக்க முடியாதது. கதைக்கு உயிர் கொடுத்த இதர அம்சங்களில் குறிப்பிடத்தக்கது ம.செ.யின் கைவண்ணம்.

சென்னை — 88. திருமதி ஜெயந்தி நாகராஜன்.

* ஒரு குறுங்கதையாகத் தரவேண்டியதை ஒரு தொடர்கதையாகத் தந்து எங்களது பொறுமையினைச் சோதித்துவிட்டார் அனுராதா ரமணன்.

இளங்கார்குடி. கோ. பாஸ்கர்.

* அனுராதா ரமணன் அவர்களின் நெருப்பாக நீ நியாயமான முடிவுடன் நிறைவு பெற்றது. ஒரு குடும்பக் கதையை ஒரு துப்பறியும் கதையைப் போலக் கையாண்டு, விறுவிறுப்பும் எதிர்பார்ப்பும் குறையாது. அதே நேரத்தில் தம் நடையையும் மாற்றாது கதையை நேர்த்தியாக எடுத்துச் சென்றார். சத்தியத்தின் நெருப்பு, தோல்வியுறாது என்பதை உணர்த்தும் வகையில் முடிவு அமைந்தது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

வேலூர். காமாட்சி சத்தியநாராயணன்.

* 29 வாரங்களாக எங்கள் மனத்தில் தென்றலாக வீசியது அனுராதா ரமணனின் 'நெருப்பாக நீ' தொடர்.

வேலூர். டி.கே. பாஸ்கரன்.



மாண்புமிகு முதலமைச்சர்

* மாண்புமிகு முதலமைச்சர் அருமையான காவியம். ஜோதி என்னும் நாட்டியப் பேரொளியை விட்டுப் பிரிகிற போது சோழ நாடு மட்டுமா அழுதது. எங்கள் கண்களிலும்தான் கண்ணீர் முத்துக்கள்!

திருப்பூர். ஜி. அர்ஜுனன்.

* இனிய நடையில், கொஞ்சும் தமிழ் வர்ணனைகளோடு, இலக்கிய நயத்தோடு, கதையைக் கொண்டு சென்று மென்மையாய் முடித்திருந்தார் கோவியார். ஜோதி! மறக்க முடியாதவள்! நாவல் முடிவில், நிறைகிறது என்று போட்டிருப்பது பொருத்தமே! வினுவின் சித்திரங்களும் பொருத்தமாக அமைந்திருந்தன.

அயன்புரம். ந. சத்தியநாராயணன்.

* அருமையான பாத்திரப் படைப்பு, கதாபாத்திரங்களை நேரில் பார்த்த உணர்வை ஏற்படுத்தியது. பாதுகாக்க வேண்டிய பொக்கிஷங்களில் இக்கதையும் ஒன்று.

பாண்டிச்சேரி — 13. ஸ்ரீ மனோபாரதி.

* அருமையான நடனத்தை அரங்கில், நேரில் கண்டு தான் களிக்க முடியும். அந்நேரம் ஆட்டத்திற்குரிய அருமையான சங்கீதத்தையும் சதங்கை ஒலியையும் கேட்டு ரசிக்க முடியும். இவ்விரண்டையும் தவிர, படித்தும் பரவசமடைய இயலும் என்று ஜோதியின் நாட்டியத்தை வர்ணித்ததன் மூலம் நிரூபித்துக் காண்பித்துள்ளார், கோவி. மணிசேகரன்.

தஞ்சாவூர். அ. சம்பத்.

* அரசியல் வாடை வீசினாலும், "மாண்புமிகு முதலமைச்சர்" தொடரை மிக அற்புதமாகப் படைத்து முடித்துவிட்டார், கோவி. மணிசேகரன்.

வாழப்பாடி. செல்வஅரசி சண்முகசுந்தர வடிவேலு.

8

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — III
ராஜ்மோகன் காந்தி

குறிப்பிட்ட தேதிக்குள் சுதந்திரம் வழங்குவது என கெடு நிர்ணயிக்கப்பட்டதில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அந்தப் பரபரப்பில் ஒரு முக்கிய விஷயம் பலர் கவனத்திலிருந்து தப்பிவிட்டது. அட்லியின் அறிக்கையின்படி எந்தெந்த மாகாணங்கள் அல்லது அவற்றின் பகுதிகள் பாகிஸ்தானை விரும்பினவோ, அவை அதனை அடையலாம். இதனை மகாத்மா நேருவுக்கு ஒரு கடிதத்தில் சுட்டிக் காட்டினார். ஓர் ஆண்டுக்கு முன்னர்தான் 'காபினெட் மிஷன்' என்ற மந்திரி சபை தூதுக் குழு இங்கு வந்து, சுதந்திரப் பாதையில் பெரும்பான்மையினரின் முன்னேற்றத்தைச் சிறுபான்மையினர் தடுத்து நிறுத்த முடியாது என்று கூறிச் சென்றது. இப்போது அதற்கு நேர் விரோதமாக, சிறுபான்மையினர் சுதந்தரம் பெற விரும்பினால் அதனைப் பெரும்பான்மையினர் தடுத்து நிறுத்த முடியாது என்ற நிலை உருவாகியிருந்தது!

பிரிட்டன் பிரிவினை பற்றி யோசிக்க ஆரம்பித்திருந்தது என்றால் அதே சமயம் அதனை எதிர்க்கின்ற காங்கிரஸின் உறுதியும் தளர்ந்து வந்தது. அமைச்சரவையில் ஏற்கெனவே இரு பிரிவினரும் மல்லுக்கு நின்று

வேவல் போனார்; மவுண்ட்பாட்டன் வந்தார்!

* மவுண்ட்பாட்டன்



ஒரு காரியமும் நடக்கவிடாமல் ஒருவர் மீது ஒருவர் கிடுக்கிப்பிடி போட்டிருந்தனர். முஸ்லீம் லீகும் காங்கிரஸும் இணைந்திருக்கிற ஒன்றுபட்ட இந்தியாவில் அரசு இப்படித்தான் நடக்கும் என்றால் அத்தகைய சுதந்திர அரசுக்காக பாடுபடுவதில் அர்த்தமிருக்கிறதா? ஸி. ஆரோ., பட்டேலோ அல்லது நேருவோ காலியான ஒரு பதவிக்கு ஒருவரை நியமனம் செய்ய முடியவில்லை! எந்த ஓர் அதிகாரிக்கும் மாற்றல் உத்தரவு கூடப் போட முடியவில்லை! எல்லாவற்றையும் சகட்டுமேனிக்கு லீக் எதிர்த்தது. 'வைஸ்ராயே முடிவு செய்யட்டுமே' என்றது! நாட்டிலோ பிரச்னைகள் ஏராளமாக இருந்தன. காங்கிரஸ் அமைச்சர்கள், 'பிரச்னைகளையும் சமாளித்து, லீகையும் சமாளித்துக் கொண்டு போவது சாத்தியமா? அது புத்திசாலித்தனமாகுமா?' என்று தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள ஆரம்பித்தனர். அகண்ட இந்தியாவில் செயலற்றுப் போய்க் கிடப்பதைவிட... அளவில் சற்றுச் சிறிய இந்தியாவில் சுதந்திரமாகச் செயல்படுவது மேலல்லவா?

அட்லியின் அறிக்கை வெளியாவதற்கு மூன்று தினங்கள் முன்னதாகவே பட்டேல்,

மேலட்டையில்: லதா ரவி

வண்ணப்படம்: ஏ. வி. பாஸ்கர்

மேற்கு பஞ்சாப், ஸிந்த் மட்டுமின்றி, வட மேற்குஎல்லைப்புறமாகாணமும்சேர விரும்பினால் அதனையும், கிழக்கு வங்கத்தையும் முஸ்லிம்களுக்கே கொடுத்துவிடத் தாம் தயாராக இருப்பதாக வேவலிடம் கூறியிருந்தார்.

மவுண்ட்பாட்டன் வருவதற்கு மூன்று வாரங்கள் முன்னதாக காங்கிரஸ் காரியக் கமிட்டி காந்தியை அழைக்காமலும் அவரைக் கலந்தாலோசிக்காமலும் கூடியது. பஞ்சாபைப்பிரிக்கவேண்டும்என்றுவெளிப் படையாகவே கூறியது. வங்கப் பிரிவினை பற்றி கோடிகாட்டியது. சொல்லப்போனால், காங்கிரஸ், பாகிஸ்தானை வழங்கத் தயாராகி விட்டது. ஏப்ரல் மூன்றாவது வாரத்தில் நேரு வெளிப்படையாகவே பேசினார்: "முஸ்லிம் லீக் விரும்பினால் பாகிஸ்தானை அடையலாம்; ஆனால் ஒரு நிபந்தனை. பாகிஸ்தானில் சேர விரும்பாத பகுதிகளை அடைய அது முயலக் கூடாது."

வேவல் பிரபு மார்ச் 23ம் தேதி இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். ராணுவத் தளபதியை அடுத்து அவர் வகித்த பதவியை அலங்கரிக்க கடற்படை தளபதி ஒருவர் வந்து சேர்ந்தார். களையான, எடுப்பான தோற்றம், ராஜ குடும்பத்தினருடன் உறவு, ராஜ தந்திரி என்ற முறையில் இயல்பாகவே ஏராளத் திறமைகளைப் பெற்றவர் — மவுண்ட்பாட்டன் பிரபு. பிரிட்டிஷ் அரசு, 1948 ஜூன் என்று சுதந்திரத்துக்கு இலக்கு நிர்ணயித்து, மவுண்ட்பாட்டனுக்குப் பரிபூரண அதிகாரங்களையும் வழங்கி அனுப்பி வைத்திருந்தது. அவருடன் ஒத்துழைப்பது அனைவருக்கும் நல்லது என்பது எல்லோருக்கும் புரிந்தது. அவர் கேட்டுக்கொண்ட உடனே, லியாகத் அலி சர்ச்சைக்குரிய பட்ஜெட்டில் தாம் விதித்திருந்த அபரிமித வரிகளைக் குறைத்தார்.

காங்கிரஸ் பிரிவினையை எதிர்க்காது என்பதைப் புரிந்து கொள்ள மவுண்ட்பாட்டனுக்கு அதிக காலம் ஆகவில்லை. துரிதமான, சுத்தமான, முழுமையான துண்டாடலையே நேருவும் பட்டேலும் விரும்பினர். ஐக்கியப் பட்ட இந்தியாவைப் பலவந்தத்தால் சாதிக்க முடியாது என்பதை ஸி. ஆர்., வைஸ்ராயிடம் ஒப்புக் கொண்டார். ஆனால் அதே சமயத்தில்; சில அம்சங்களில் இரு நாடுகளுக்கும் பொதுவான ஏற்பாடுகள் இருக்கலாம் என்று கருதினார். மேலும் 'இரு தேசங்களும் பின்னால் விரும்பினால் ஒன்று சேர வாய்ப்புத் தரும் வகையில் ஒப்பந்த ஷரத்துக்கள் அமைய வேண்டும்' என்றார். அதாவது, ஆரம்ப கட்டத்தில் தாம் வெளியிட்ட திட்டத்தைக் கடைசிவரை ஸி. ஆர். மறக்கவேயில்லை!

காந்தி என்ன நினைத்தார்? காங்கிரஸில் அதிகார வட்டத்தின் விளிம்புக்கு அவர் போய் விட்டிருந்தார். அவ்வப்போது அவரை யோசனை கேட்டார்கள்; ஆதரவு கோரினார்கள். ஆனால் எல்லாப் பிரச்னைகளையும் அவரிடம் கொண்டு போவதில்லை! பஞ்சாப் பிரிவினை பற்றிய தீர்மானம் அவர் பார்வைக்குக் கொண்டு போகப்படவேயில்லை! மவுண்ட்பாட்டன் அவரிடம் பேசும் போது மிகுந்த மரியாதை காட்டினார். ஆனால் உரையாடலின்போது பெரிய பிரச்னைகளைத் தொடாமல் நழுவ விடுவார்!

காந்தி, பிரிவினை வருவதைக் கண்டார். பட்டேலும் நேருவும் அதற்கு சம்மதிப்பதையும் பார்த்தார். வேதனை அடைந்தார். தம்மால் அதைத் தடுக்க ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று தவித்தார். ஆயினும் ஒரு கடைசி அஸ்திரம் வைத்திருந்தார். அதை இப்போது பிரயோகித்துப் பார்த்தார். "இன்றைய இடைக்கால அமைச்சரவையை வைஸ்ராய் டிஸ்மிஸ் செய்துவிடலாம்; அதற்குப் பதில் ஜின்னாவையே அரசு அமைக்கச் சொல்லலாம்; 'தமது மந்திரி சபையை உருவாக்குவதில் அவருக்கு முழு சுதந்திரம் அளிக்கலாம்; இதன் பிறகும் ஜின்னா விரும்பினால் பாகிஸ்தானை உருவாக்க அவரே முயற்சிகளை மேற்கொள்ளட்டும்; ஆனால் அவர் பலவந்தத்தை மட்டும் எவ்வகையிலும் பிரயோகிக்கக் கூடாது" என்று தமது கருத்தை வெளியிட்டார்.

'இந்த யோசனையைக் கேட்டு மவுண்ட்பாட்டன் திடுக்கிட்டுப் போனார்' என்று குறிப்பிடுகிறார் ஆஸாத். 'இத்தகைய யோசனை 'காங்கிரஸிடமிருந்து வந்தால் ஜின்னாவின் நம்பிக்கையைக் காங்கிரஸ் பெற முடியும்' என்று மவுண்ட்பாட்டன் தம்மிடம் கூறியதாகவும் ஆஸாத் தெரிவிக்கிறார். ஆஸாத்தின் கூற்றுப்படி, பட்டேலும் நேருவும் இதனை வன்மையாக எதிர்த்ததோடு காந்திஜி இந்த யோசனையை வாபஸ் பெறவும் வைத்துவிட்டனர்!

1940ல் ஸி. ஆர். கூட இதே போன்ற யோசனையைத்தான் ஜின்னாவிடம் வெளியிட்டிருந்தார். ஆனால் இப்போது காங்கிரஸின் இதர காரியக் கமிட்டி உறுப்பினர்களைப் போலவே அவரும் இது காரிய சாத்தியமானதல்ல என்று உணர்ந்தார். மகாத்மாவின் கடைசி முயற்சியும் பலன் தரவில்லை.

மவுண்ட் பாட்டன் திட்டம் இப்போது உருவாயிற்று. ஆகஸ்டு 15 சுதந்திர தினம் என்று அறிவிக்கப்பட்டது.

(தொடரும்)

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்**

கிரௌன் காயகல்பம்

ஆரோக்கிய வாழ்விற்கு அடிப்படை

மனிதன் வாழ்வில் இன்பமாக வாழ்ந்திட செல்வம் மட்டும் போதாது. நோயின்றியும் வாழ்ந்திட வேண்டும். ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது யாவரும் அறிந்ததே. நாம் வாழ்வில் பல இலட்சியங்களை அடைய பாடுபடுகிறோம். அதற்கு நல்ல மனவலிமையுடன், உடல் ஆரோக்கியமும் இன்றியமையாதது.

இக்காலத்தில் சிறியோர் முதல் பெரியோர்கள் வரை வாழ்வில் முன்னேற மிக வேகமாக செயல்பட வேண்டியுள்ளது. ஆடவர் மட்டுமின்றி பெண்டிரும் குடும்ப பாரத்தை சுமக்க, வீட்டில் மட்டுமின்றி வெளியேயும் பணிபுரிய வேண்டியுள்ளது. அதற்கு நல்ல சக்தி தேவை. இங்கு கிரௌன் காயகல்பம் ஓர் நல்ல நண்பனைப்போல் உதவுகிறது.

காயகல்பம் பண்டைய சித்தர்களின் அற்புத கண்டுபிடிப்பு. இது பல மூலிகை மருந்துகள், தங்கம் வெள்ளி முதலிய நவலோக பற்பங்களும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இதனை உட்கொள்ளுபவர்களின் வயதிற்கும், இயல்பிற்கும், ஏற்ப, கிரௌன் காயகல்பம் அவரவர்களின் உடற்கூறுகளுக்குத் தக்கவாறு இயங்கி, ஆரோக்கியமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

எப்பொழுதும் எல்லோரும், சுறுசுறுப்பாக உற்சாகத்துடன் இயங்கி வாழ்க்கையில் முன்னேறி மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியத்துடனும் ஓர் நிறைவான வாழ்வு வாழ்ந்திட கிரௌன் காயகல்பம் உதவுகிறது.

- எல்லா வயதினருக்கும் ஏற்றது.
- பத்தியம் எதுவும் இல்லை.
- அலோபதி மருந்துடனும் உட்கொள்ளலாம்.தீங்கில்லை.



கிரௌன் காயகல்பம்
ஆனந்தமயமான குடும்ப வாழ்விற்கு

CROWN

தயாரிப்பவர்கள்:
கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ்
55, ஹாரிஸ் சாலை, சென்னை-600 002.

மருத்துவ ஆலோசனை மற்றும் இலவச விளக்க உரை பெற அணுகவும்:
கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ், 55, ஹாரிஸ் சாலை, சென்னை-600 002.
போன்: 561974/562256

2

கடந்த வாரம் நடந்தது.....

தன் அண்ணனின் ஊருக்குப் புறப்படத் தயாராய் இந்திரா!

துணைக்கு?

இருபது நாட்களுக்குமுன் இறந்து போன அவளுடைய கணவன் பாபுவின் நினைவுகள் + ஒன்பது வயது மகன் நந்தகுமார்.

அவசரப் புறப்பாட்டுக்குக் காரணம்?

இந்திரா..... நீயே சொல்லம்மா....

"அவர் கண்ணை மூடின கையோட ஒவ்வொருத்தனு. 'பாபு எனக்கு நூறு தரணும். எனக்கு இரு நூறு தரணும்'னு தினம் வர ஆரம்பிச்சுட்டான். தனியா நின்னு அவங்களைச் சமாளிக்க முடியாதுங்கற பயத்திலேதான் இப்படி இருட்டினப்புறம் ஊரை விட்டே கௌம்பறேன்....."

அடுத்த ஊரில் பஸ் நின்ற நேரம்.

"அதோ இருக்கறுடா.... டேய்.... ஏண்டி பணம் கொடுக்காம ஏமாத்திட்டு ஊரை விட்டே ஓடறியா?"

மூக்கில் சாராயமும், பேச்சில் ஆவேசமுமாய் அவர்கள் இந்திராவை நெருங்கினார்கள்.

சின்னச் சின்ன ...

இந்திரா சடாரென்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

"நீங்கள்லாம் என் அண்ணன் மாதிரி. தயவு செஞ்சு ரகளை பண்ணாம எறங்கிடுங்க. நான் ஊர் விட்டுப் போனாலும் உங்க கடனையெல்லாம் மறக்கல. போற எடத்துல கூலி வேலையாவது செய்ஞ்சி சம்பாதிச்சி கொஞ்சம் கொஞ்சமா அடைச்சிடறேன். இப்ப என் வழியை மறிக்காதிங்க. கெஞ்சிக் கேட்டுக்கறேன்" கண்களில் துவர்ப்பு நீர் முத்துக்கள்.

"அண்ணன் மாதிரியாம்!" காவிக் கறைப் பற்களுடன் கருப்பண்ணன் சிரித்தான். "கொடுக்கல், வாங்கலுக்கு அண்ணன் தங்கச்சி உறவெல்லாம் எடுபடாது கண்ணு... நீ ஊருக்குப் போயி... சம்பாதிச்சி... ரிச்சி அனுப்பற வரைக்கும் கையைக் கட்டிட்டு உக்கார நாங்க ஒண்ணும் இளிச்சவாயனுங்க இல்லை. கையில் எவ்வளவு இருக்கோ அதை மொதல்ல கொடுத்துட்டுப் போ.. இல்லாட்டி பஸ்ஸை விட்டு எறங்கு."

பஸ்ஸில் ஆர்வமான தலைகள் இருக்கைகளுக்கு வெளியே துருத்திக் கொள்ள, டீ குடித்துக் கொண்டிருந்த கண்டக்டரும், டிரைவரும் திரும்பிப் பார்த்தார்கள். நந்தகுமார் விழித்துக் கொண்டு அம்மாவின் தோளை இறுகப் பற்றினான். கருப்பண்ணனைக் கோபத்துடன் நோக்கினான். கண்டக்டர் பரபரப்புடன் பஸ்ஸில் ஏறினார்.

"பஸ்ஸுக்குள்ளே என்ன தகராறு?"

"யோவ் கண்டக்டரு. இந்தப் பொம்பளை கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காம ஊரை விட்டு ஓடப் பாக்குது. விஷயம் தெரிஞ்சி, நாங்க டாக்ஸி பிடிச்சி நூறு ரூவா செலவு செய்ஞ்சி பஸ்ஸைத் தொரத்திட்டு வந்திருக்கோம். இது இங்க எறங்கணும். அப்பத்தான் பஸ்ஸைக் கிளம்ப விடுவோம்."

கண்டக்டர் பஸ்ஸை நிறைத்து நின்ற அவர்களைப் பார்த்தார். சீட்டில் ஒடுங்கியிருந்த இந்திராவைப் பார்த்தார்.

"விடியாமூஞ்சியோட நீ பஸ்ல ஏறினப்பவே நெனைச்சேன், ஏதாவது வம்பு வரும்னு. ஏம்மா, உனக்கு என் பஸ்தானு கெடைச்சுது?"

இந்திராவிற்குத் தொண்டையில் அணை கட்டியிருந்த அழுகை, மடை திறந்துக் கொண்டது. நந்தகுமார் அம்மாவின் மேலிருந்து கையை எடுத்து, சட்டென்று கண்டக்டர் மீது பாய்ந்து மண்டையால் மோதினான்.

"எங்கம்மாவை என்னய்யா சொன்னே?"

"இதப் பார்ரா சிங்கக்குட்டி" என்று கருப்பண்ணனுடன் வந்த ஒருவன் அப்படியே ஒற்றைக் கையால் நந்தகுமாரின் முடியைப் பற்றி விலக்கி இழுத்தான்.

இந்திரா பதறி எழுந்தாள். "அவனை ஒண்ணும் பண்ணாதீங்க?"

"என்னம்மா இது. உன்னோட பெரிய விவகாரமாப் போச்சு. எறங்கும்மா, கீழே" — கண்டக்டர் இரைந்தார்.

கருப்பண்ணன் இந்திராவை நெருங்கினான். அவள் கால்களுக்கிடையில் பத்திரமாய்ப் பிடித்திருந்த பையைச் சொடுக்கி இழுத்தான். அப்படியே சீட்டில் கவிழ்த்தான்.

சாயம் போன புடைவைகள். தையல் விட்டுப் போன ரவிக்கைகள். நந்தகுமாரின் பட்டன்களில்லாத சட்டைகள். டிரவுஸர்கள். விழுந்து, உடனே திறந்து, சில்லறைகளைச் சிதறடித்துக் கொண்டு ஓர் எல்.ஜி. டப்பா. பஸ் நெடுக உருண்டும் திறந்து கொள்ளாத ஒரு தகர உண்டியல். கவிழ்ந்து விழுந்த முருகன். அதன் முதுகோடு நூல் போட்டுக் கட்டியிருந்த, சொச்ச, கடுகு வர்ண கரன்ஸித் தாள்கள். உதறப்பட்ட புடைவையிலிருந்து ஜடாயு இறக்கை போல் விழுந்த தங்கச்சங்கிலி.

கருப்பண்ணன் ஒளிமயமான கண்களுடன் அந்த நகையை அள்ளிக் கொண்டான். கரன்ஸியைக் கவ்வி இழுத்தான். உண்டியல்களைப் பொறுக்கினான்.

"இன்னும் வேறென்ன வெச்சிருக்கே?"

இந்திராவின் முகத்தில் துக்கம், விரக்தி எல்லாம் சமவிகிதத்தில் கலந்து பரவ, மேலேயிருந்து சின்ன ட்ரங்க் பெட்டியை இழுத்துப் பட்டென்று திறந்து போட்டாள். சீட்டுக்கடியிலிருந்து பிரம்புக் கூடையை இழுத்து வைத்

தான்.

''எடுத்துக்குங்க.என்ன வேணுமோ.எடுத்துக்குங்க.''

கருப்பண்ணன் அலட்சியமாக அவற்றைக் குப்புறடித்தான். சிதறிய பொருட்களைக் காலால் அளைந்து தள்ளினான்.

''குப்பை. ஒண்ணுமில்லே'' உதட்டைப் பிதுக்கிக் கொண்டான். ''ப்ச்... எறங்குங்கடா, போலாம்.''

அவர்கள் நந்தகுமாரை இந்திராவிடம் உந்தித் தள்ளிவிட்டு ஓர் அதிருப்தியோடு இறங்கிப் போனார்கள்.

பூகம்பம் பஸ்ஸைக் குலுக்கிவிட்டு ஓய்ந்தது போல் இருக்க, ''பஸ்ஸைச் சீக்கிரம் எடுங்கய்யா'' என்று கடைசி வரிசையிலிருந்து வீரமாய் ஒரு குரல் வந்தது. இந்திரா திரும்பிப் பார்த்தாள்.

''எவ்ளோ ஆம்பிளைங்க இருக்கீங்க. ஒருத்தராவது ஒத்தாசைக்கு வந்தீங்களா?'' குமுறிக் கொண்டு வார்த்தைகள் வெளிவந்தன.

''ஏம்மா, நீ கடனே வாங்கிட்டு ஏமாத்திட்டு வருவே. வசூல் பண்ண வந்தவங்க கிட்டே நாங்க வம்பு வளர்க்கணுமா? பார்த்தா சின்னப் பொண்ணா இருக்கறே. உனக்கு எதுக்கு இந்த ஆளுங்களோட விவகாரம். யோவ், பஸ்ஸை எடுய்யா.''


''இதப் பாரும்மா, நீ இந்த பஸ்ஸில வரப் போறியா, இல்லே எறங்கிக்கறியா...?''

''பசுபதி கோயில் வரைக்கும் டிக்கெட் எடுத்திருக்கோம். இங்கே ஏன் எறங்கணும்?'' கேள்வி கேட்ட நந்தகுமாரின் சின்ன முகம் கோபத்தில் சிவந்து போனது.

பஸ் குலுக்கலோடு கிளம்பியது. கீழே சிதறியிருந்த பொருட்களை ஒவ்வொன்றாய் இந்திரா பொறுக்கத் தொடங்கினாள். தெருவோரம் வீசப்பட்ட ஓர் அநாதைக் குழந்தையைப் போல் மனம் உதவியின்றித் தவித்தது. குனிந்து பொறுக்கும் போது பெருகிய கண்ணீர் சொட்டுச் சொட்டாய் பஸ்ஸில் விழ, அவளையே பார்த்துக் கொண்டிருந்த நந்தகுமார் அவள் கன்னங்களைத் துடைத்து விட்டான். காதருகில் கிசுகிசுத்தான்.

சுபா





டூப்ளிகேட் தாஜ்மஹால்

அமெரிக்காவிலுள்ள 'டிஸ்னிலாண்ட்' அருகே ஒரு டூப்ளிகேட் தாஜ்மகால் கட்டப்பட்டு வருகிறது. இதைக் கட்டுபவர் 'ஜான் மொஹுஹன்' என்னும் கோடீஸ்வரர். இந்தியக் கலாசாரத்தின் மீதும் தாஜ்மகாலின் மீதுமுள்ள மோகத்தால் இதைக் கட்டுகிறார். அசல் 'தாஜ்' 133 அடி உயரம். இது 120 அடி உயரம்! இதைக் கட்ட நூறு மில்லியன் டாலர் செலவாகும்!

ஆதாரம்: ஸொஸைட்டி

— சம்பத்குமாரி

''அழாதேம்மா. பணம் போய்டிச்சின்னு அழறே. நான் அழறேனு பார்த்தியா? நான் இருக்கேன்ல. நெறைய சம்பாதிச்சி ஒன்னைச் சிரிக்க வைக்கறேன். சரியாம்மா? ம்? அழாதேம்மா. பஸ்ஸிலே எல்லாரும் பார்க்கப் போறாங்க.''

இந்திரா அவனை அப்படியே இறுக்கமாகக் கட்டிக் கொண்டாள். அவன் கன்னத்தில் முத்தமிட, இந்திராவின் கண்ணீர் அந்தக் கன்னத்தில் ஒத்தடம் போல் பற்றியது. நந்தகுமார் நாக்கால் அந்தக் கண்ணீரைத் தொட்டு, ''ஐய்யே... உப்பு கரிக்குது'' என்றான்.

இந்திரா கண்களைத் துடைத்துக் கொண்டாள். புகை மூட்டத்தை விலக்கி நுழையும் சூரியக் கதிர் போல் சோகத்தினூடே புன்னகைபுரிந்தாள்.

''பஸ் ஸ்டாண்டுக்கு மாமா வருவாரா அம்மா?''

''லெட்டர் போட்டிருக்கோமே. நிச்சயமா வருவாருடா.''

வார்த்தைகளில் சேர்த்துக் கொண்ட நம்பிக்கை நெஞ்சில் இல்லை.

ஜெயபால் வருவானா?

'நாம என்ன ஒரே அம்மா வயித்திலயா பொறந்துட்டோம், நீ 'அண்ணா' 'அண்ணா'ன்னு என் காலையே சுத்தி வந்து நிக்கறதுக்கு? எங்கப்பனுக்கு மீசை நரைச்சாலும் ஆசை நரைக்கலே. கை கால் இழுத்துக்கிற வயசில பொம்பளை சபலம். ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்கிட்டுக் கூத்தடிச்சாரு. உன்னைப் பெத்த கையோட உங்கம்மா மண்டையும் உருண்டு போய்டிச்சி. கெழம், 'ராமா, கிருஷ்ணா'ன்னு ஏதாவது மடத்தில் சேர்ந்துக்கிட்டு மிச்ச நாளை ஓட்டியிருந்தா எல்லாருக்கும் நிம்மதியா இருக்கும். கட்டில்ல இழுத்துக்கிட்டுப் படுத்துக் கெடந்தா அத்தனை பேருக்குமில்ல அவஸ்தை?'

பதினைந்து வருடங்களுக்கு முன்பே நாக்கில் அமிலம் தடவிக் கொண்ட ஜெயபால் இப்போது எப்படி மாறியிருக்கக்கூடும்? தப்பித்தவறி அவன் வார்த்தைகளில் நெருப்பு குறைந்து விட்டால் உடனே விசிறிக் கிளப்பக் கூடவே அண்ணி!

அப்பாவிற்குக் கொள்ளி வைத்த மறு கையோடு தேடிப் பிடித்துப் பாபுவுக்கு இவள் கழுத்தைக் குனிய வைத்ததோடு சரி. நந்தகுமார் பிறந்த போது கூட வந்து எட்டிப் பார்க்கவில்லை. ஒரு தபால் கார்டில் வர முடியாமல் போனதற்குச் சாக்கு. மணி ஆர்டர் மூலம் மருமகனுக்குப் பத்து ரூபாய். மாமனுடைய அன்பளிப்பு! வேறு வழியில்லாமல் இருபது நாட்களுக்கு முன் இவள் வீடு தேடி வர வேண்டிய அவசியம்.

'ஆக்ஸிடெண்ட்லயா மாட்டிக்கிட்டான்? பாத்து ரோடை க்ராஸ் பண்ணக் கூடாது? பாபு எதிலேயும் அவசரம். இப்ப நீ இல்ல மாட்டிக்கிட்டே? பொம்பளை நீ, உத்தியோகம் தேடி, சம்பாதிச்சி, பையனை வளர்த்து ஆளாக்கணும், ம்ஹ்ம்...''

ஜெயபால் எப்படித்தான் அந்த வார்த்தைகளைத் தேடிப் பிடித்தானோ?

'நீ உத்தியோகம் தேடி...?'

தப்பித் தவறிக் கூட என்னிடம் வந்து விடாதே என்று அடிக் கோட்டில் ரகசிய எச்சரிக்கை. துக்கம் விசாரித்த மறுநாளே எந்த அழைப்பும் வைக்காமல் எந்த ஆறுதலும் கொடுக்காமல் புறப்பட்டுப் போய் விட்டான்.

அவன் நிழலில் ஒதுங்குவதில்லை என்று தான் இந்திராவும் முடிவு செய்தாள். அந்த முடிவை அடியோடு அரிவாள் வைத்து வெட்டக் கருப்பண்ணனும் அவன் சகாக்களும் தினமும் வாசலில் வந்து உட்கார ஆரம்பித்தார்கள்.

பாதுகாப்பில்லாத இளமை, மொட்டை மாடியில் காயப் போட்ட வற்றல் போல. போகிற போக்கில், கொத்தி ருசி தேட ஆயிரம் காக்கைகள் வரும் என்ற பயம் வந்து சூழ, ஜெயபால் வீட்டிற்குப் போவது தான்...

''மாமா வீடு பெரிசா இருக்கும் இல்லேம்மா?'' என்று அவள் சிந்தனையைக் கலைத்து நந்தகுமார் கேட்டான்.

''நான் என்னடா கண்டேன். மாமாதான் அத்தை ஊருதான் நல்ல ஊருன்னு இந்த ஊருக்கு வந்துட்டாரே. நான் இந்த வீட்டைப் பார்த்ததேயில்லையே?''

''அப்பமன்னு அசலூருக்கா தாயீ போறே?'' என்று பக்கத்து சீட் கிழவி இடைரென்று கேட்டாள். இந்தக் கிழவி எப்போது விழித்துக் கொண்டாள்?

''ஆமா...'' என்று இழுத்தாற்போல் சொன்னாள் இந்திரா.

''பஸ்டிகோவிலுதானே?''

எங்கள்
அமைச்சர்களுக்குத்
தொலைநோக்குப் பார்வை
இல்லையென்று
யார் சொன்னது?
எதிர் காலத்தைக்
கருத்தில் கொண்டு
பத்து தலைமுறைக்குச்
சொத்துச் சேர்த்திருக்கும்
அவர்களுக்கா இல்லை
'தொலைநோக்குப் பார்வை?'

— பார்த்திபன்



''ம்.''

''புது ஊருக்குப் போறவ இப்படியா நேரங்கெட்ட நேரத்தில போவே? இப்ப இருக்கறவனுவ எல்லாம் ஒத்தையில பொம்பளை வந்தா சும்மா விட்டுடுவானுவளா? இருட்டு மூல எப்ப வரும்? சிலைய எப்ப உருவுவோமின்னு இல்ல இருக்கானுவ. காலங்கெட்டுக் கிடக்கு தாயீ... பாக்கறதுக்கு லட்சணமா வேற இருக்க... சாக்கிரதையா இரு. பஸ் ஸ்டாண்டுக்கு யாராவது வந்திருப்பாங்களா?''

''எங்கண்ணன் வந்திருப்பாருங்க.''

''அப்ப சரி'' என்று கிழவி மறுபடி கண்ணை மூடிக் கொண்டாள்.

நந்தகுமாருக்குச் சரிவரப் புரியவில்லை. எழுந்து ஒரு முறை டிரைவரை மேலேற்றிக் கொண்டான். இந்திராவின் காதருகே வந்தான்.

''இந்தக் கெளவிதான் அந்த மீசைக்காரன் வந்து கத்திக்கிட்டிருந்தப்ப, ஒரே ஒரு கண்ணை மட்டும் தெறந்து பாத்து, தெறந்து பாத்து மூடிக்கிச்சி அம்மா...''

''ச்... பெரியவங்களை அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுப்பா...'' என்றாள்.

பஸ் சட்டென்று வளைந்து ஊருக்குள் நுழைந்தது. ஊர் எல்லைக்குக் காவலாய் ஐயனார் அகன்ற கண்களுடன் ட்யூப் லைட் வெளிச்சத்தில் நின்றிருந்தார். ஐயனாருக்கு முன்பாக ஒரு பெரிய மண் வட்டத்தில் வேல்கள் செருகப்பட்டிருந்தன. சில வேல்களில் மணிகள். வீசிய காற்றில் மணி நாக்குகள் அலைந்து 'ஜிலுங், ஜிலுங்' என்று சலங்கை சப்தம் போட்டன. அப்புறம் கற்கோயில். பாதி வெளிச்சத்தில் கற்கோயிலின் சிதிலம் தெரிந்தது. கோயிலின் இடுக்குகளில் அரச மரக் குஞ்சுகள் வேரூன்றத் தொடங்கியிருந்தன. பஸ்ஸின் குபுக். ச்ளக், ச்ளக் என்று நீரோடிய வாய்க்கால் பாலம். 'பசுபதி கோயில் ரைஸ் மில்' நாற்பது வாட் வெளிச்சத்துடன் பின் வாங்கியது. அசோக மரக் காவலுடன் போலீஸ் ஸ்டேஷன். கதவுகளை இறுக மூடிவிட்ட பஜார் தெரு. ஓட்டு வீடுகள். மாடி வீடுகள்.

''ஊர் வந்திடிச்சிம்மா'' ஜன்னல் கம்பியில் முகம் புதைத்திருந்த நந்தகுமார் சொன்னான்.

பஸ் சீறிக் கொண்டு ஓரம் கட்டி பஸ் ஸ்டாண்டில் நுழையாமல் பிரதான சாலையில் நின்றது.

''பசுபதி கோவில் எறங்கும்மா.''

இந்திராவும், நந்தகுமாரும் தங்கள் சாமான்களை அள்ளிக் கொள்ள, பஸ் மொத்தமும் அவர்களை வேடிக்கை பார்த்தது.

அவர்கள் இறங்கியதும், பஸ் 'ஜிகுக்' என்று கிளம்பிப் போனது.

பிரதான சாலை அலம்பிவிட்ட மாதிரி தெரிந்தது. இருந்த ஒரே ஒரு விளக்குக் கம்பத்தின் டியூப் லைட் படக் படக் என்று அடித்துக் கொண்டது.

அவளை வரவேற்க, அவளுடைய நந்துவை வரவேற்க யாரும் மாலை ஏந்திக் கொண்டு நிற்கவில்லை.

''மாமா வருவாருன்னே... யாருமே இல்லியேம்மா...''

இந்திராவிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பையில் துழாவி ஜெயபால் போட்டிருந்த கார்டை எடுத்து விலாசத்தைப் பார்க்க முயற்சி செய்தாள்.

பாலைவனம்போல் இருந்த சாலையில், வழி தவறிய ஆந்தை ஒன்று படபடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்து, எதிலோ மோதி ஜில்வென்று கீழே விழுந்து ஒரு ராட்சஸ ட்யூனைப் பாட —

''யாரும்மா அது இந்த நேரத்தில? எங்கே போகணும் சொல்லுங்க? இல்ல ஓடி வந்த கேஸா?'' என்று வெகு அருகில் குரல் கேட்க, இந்திரா சரேலென்று பயந்து திரும்பினாள்.

அவன் சிரித்துக்கொண்டுதான் நின்றிருந்தான். உதடுகள் கோணியிருந்த சிரிப்பு. விரல்களுக்கிடையில் சிகரெட் புகைச் சுருள்களை மெல்ல விடுவித்துக் கொண்டிருக்க, சற்று அகலக் கால் வைத்து, கூர் பார்வையுடன், கழுத்தில் கட்டியிருந்த கைக்குட்டையுடன் இருந்த அவனைப் பார்க்க அவளுக்குப் பயமாய் இருந்தது.

'...இருட்டு மூலை எப்ப வரும்? சிலைய எப்ப உருவுவோமின்னு இல்ல இருக்கானுவ...?'

இறங்குகிற நேரத்தில் கிழவி சொன்னது நினைவுக்கு வர, இந்திரா தன்னிச்சையாய் வாயருகே புறங்கையைக் கொண்டு போனாள்.

(தொடரும்)

அசோகமித்திரன் தனது 'கரைந்த நிழல்கள்' என்ற நாவலில் எழுதியிருந்த ஒரு சம்பவம்:

ஓர் இளம் நடிகை படப்பிடிப்புக்கு வர மறுத்துவிட்டாள். அந்த நடிகையின் தாயும் ஒரு நடிகை. தாங்க முடியாத தயாரிப்பாளர் நடிகையின் வீட்டுக்கு விரைகிறார். தன்னைத் தடுத்த நடிகையின் தாயைத் தள்ளிக் கொண்டு மாடிக்கு வருகிறார். தயாரிப்பாளர் இளம் நடிகையிடம் கெஞ்சிப் பார்க்கிறார். அவள் படப்பிடிப்புக்கு வர மறுக்கிறாள்.

கடைசியில் அவர் சொல்கிறார்: ''அன்பாகக் கேட்கிறேனம்மா வந்துவிடு. உனக்கு நான் மரியாதை தரவே விரும்புகிறேன். ஏனென்றால் நீ என் மகளாக இருந்தாலும் இருக்கலாம்''.

இதைப் படித்தவுடன் எனக்குச் சிரிப்பு வந்தாலும், மறு நிமிடமே அது மடிந்துவிட்டது.

ஓ! இந்த நகைச்சுவைதான் எத்தனை சோகமானது!

— 'மௌனத்தின் சப்தங்கள்'
வைரமுத்து.

பகவத் கீதை
படிப்பவர், எதிரே-
ரேஸ்புத் தகத்தைப்
பக்கத்தில் படிக்கிறார்.
பின்னவர் படிப்பது
போர்னோ கிராபி.
ரயிலில் வளர்ந்தது
அறம்பொருளின்பம்.

அனைவரும் படிக்க
விரும்பும் கவிதை
ரிசர்வ்பாங்க் கவர்னரின்
'ஐ ப்ராமிஸ் டு பே'

கடைசி எவர் சில்வர்
டம்ளரை எடுத்து
அடகுக் கடைக்கு
நடக்கிறேன். எம்.ஏ.
நேற்றெழுதக் கற்ற
மார்வாடிச் சிறுவன்
ரசீது போட என்
பேரைக் கேட்கிறான்.



பொய்களை எழுத நாங்கள்
போடும் பிள்ளையார் சுழி
சத்யமேவ ஜயதே.
— 'தீர்க்க ரேகைகள்'
— நீலமணி

கண்ணீரைப் படைத்தது
கடவுளின் தவறு?
ஆனந்தப்பட்டு
அதைவடிக்காமல்
அழுது வடிக்கும்
மனிதனின் தவறு?

சிரித்தாலும்

(திருக்கழுக்குன்றம்) குளக்கரையை நாங்கள் அடைந்ததும், துணிகளை வரிந்து கட்டிக் கொண்டு ஸ்நானம் செய்வதற்கென்று படிக்கட்டில் இறங்கினோம். ஆனால் பாதிப் படிகள் இறங்கியதும்எங்கள்சந்தேகம்பறந்தே போய்விட்டது. ஒன்று நிச்சயம். அந்தக் குளத்து ஜலத்தில் இறங்கிவிட்டால் எப்படிப்பட்ட ரோகமும் விடை பெற்றுக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வளவு பயங்கரமான பாசியைக் கண்டு எந்த வியாதிதான் பயப்படாமல் இருக்க முடியும்!

— 'ஸ்வப்ன லோகம்' — கல்கி.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).
Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.


"லக்ஸ் கொண்டுள்ள கிளர்ச்சியூட்டும்
புதுமணம் மனமயக்குகிறது" என்கிறார் ரேவதி.
''இளமை ததும்பும் என் போன்றோர்க்குக் கிளர்ச்சி
யூட்டுவது லக்ஸ் கொண்டுள்ள புதுமணம். புதிய லக்ஸ்
எனது மேனியெழிலுக்கு பரிசுத்தமான, மென்மையான
பராமரிப்பு அளிப்பதுடன், அழகிய தோற்றமும்
தருகிறது.'' என்கிறார் ரேவதி.
லக்ஸ்– சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப்.
இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமிக்க தயாரிப்பு.
NEW
Lux
நேர்த்தியான
புது மணம்
HLL-2284

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

